பக்கங்கள்: 24
விலை: 30

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 100 மாசி 23ஆம் நாள் வியாழக்கிழமை 07 மார்ச் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

## ரெலோ நேற்று அவசர கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 7
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்மட்டக் குழுக் கூட்டம் நேற்று முடிவ » 06

# பன்னாட்டுக் கண்காணிப்பை நீடிப்பது என்ற பெயரில் காலஅவகாசத்துக்கு தமிழ்க் கூட்டமைப்பு இணக்கம்


யாழ்ப்பாணம், மார்ச் 7
இலங்கை மீது பன்னாட்டுச் சமூகத்தின் மேற்பார்வை அவசியம். போர்க்குற்றங்கள் குறித்து விசாரணை அவசியம். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிட்ட வேண்டும். கால அவகாசத்தை வழங்காது ஐ.நா. தீர்மானத்தை குப்பைத்தொட்டியில் போட்டுவிட முடியாது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் » 06

## ஜெனிவா விவகாரத்தில்

# ரணில் – மைத்திரி அறிக்கைப்போர்



கொழும்பு, மார்ச் 7
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் கூட்டத்தொடருக்கு தமது பிரதிநிதிகளை அனுப்பி, வெளிநாடுகளின் தலையீடுகளை எதிர்ப்பதற்கு முடிவு எடுத்துள்ளதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்றுக் காலை அறிவித்தார். » 19



## ஐ.நா. ஆணையாளருக்கு கூட்டமைப்பு கடிதம்

யாழ்ப்பாணம், மார்ச் 7
பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதிக்கான பயணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளருக்கு சிறப்புக் கடிதமொன்றை அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதோடு அதனை வரையும் பணி நாளை (இன்று) ஆரம்பிக்கப்படும். » 04

## அரச தலைவர் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தலுக்கு வாய்ப்பு

*மீண்டும் களமிறங்கவும் மைத்திரி தயார் அவரே நேற்றுத் தெரிவிப்பு*

கொழும்பு, மார்ச் 7
இந்த ஆண்டு அரச தலைவர் தேர்தலுக்கு முன்னதாக, நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படும் வாய்ப்புகள் உள்ளதாக, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன » 04

## பெரும்பான்மையைப் பெற கூட்டமைப்புக்குச் சலுகை

*சிறீலங்கா சுதந்திரக்கட்சி கண்டுபிடிப்பு*

கொழும்பு, மார்ச் 7
பெரும்பான்மையை நிரூபிப்பதற்காக புதிய - வரவு செலவு திட்டத்தினூடாக தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு அதிக சலுகைகள் வழங்கப்பட்டுள் » 04

## பழையவற்றைக் கிளறவேண்டாம்

# எமது பிரச்சினைகளை நாங்களே பார்க்கின்றோம்

ஜெனிவாவுக்குச் செல்ல வடக்கு ஆளுநருடன் மூவரை அனுப்புகின்றார் மைத்திரிபால

கொழும்பு, மார்ச் 7
இராணுவத்தினர் போர்க்குற்றச்சாட்டுக்களில் ஈடுபடவில்லை. போர் முடிந்து 10 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் பழைய வடுக்களை கிளறாமல் எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்வதற்கு இடமளிக்க வேண்டும். இந்தக் கோரிக்கையை ஜெனிவா மனித உரிமைகள் சபை » 19

## சில தூதுவர்கள் எல்லைகளை மீறுகின்றனராம்

கொழும்பு, மார்ச் 7
சில வெளிநாட்டுத் தூதுவர்கள் தமது எல்லையை மீறுகிறார்கள் என்று அரச » 04

## எவர் எதிர்த்து நின்றாலும் சாவுத் தண்டனை உறுதி!

மைத்திரி அழுத்தம் திருத்தம்

கொழும்பு, மார்ச் 7
எவர் எதிர்த்தாலும் போதைப்பொருள் கடத்தல் செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக நாட்டில் » 04

## குருமுதல்வரின் அறிக்கையில் உள்ளவை தவறான தகவல்கள்

கேதீச்சர ஆலயத் திருப்பணி சபைச் செயலர் அறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 7
மன்னார் மாவட்டக் குரு முதல்வர் விக்டர் சோசை அடிகளா » 19

## ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைதொடர்பான தீர்மானத்தில் திருத்தம்

உறுப்பு நாடுகள் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 7
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ள » 06



*இலங்கைக்கான சீனத் தூதுவர் செங் சூயுவான் தலைமையிலான குழுவினர் உதயன் பணிமனைக்கு நேற்று வருகை தந்தனர். வடக்கு மாகாணத்தின் சமகால நிலமை தொடர்பில், உதயன் குழுமத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன், உதயன் பத்திரிகையின் ஆசிரிய பீடத்தினர், உதயன் முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி யசோதை சரவணபவன் ஆகியோருடன் கலந்துரையாடல் நடத்தினர். (ம)*

## அமெரிக்க – சீனத் தூதுவர்கள் ஒரே நேரத்தில் யாழில் முகாம்

வொஷிங்டன், மார்ச் 7
அமெரிக்கா மற்றும் சீன நாட்டுத் தூதுவர்கள் ஒரே நேரத்தில் யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்டு பல தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடி வருகின்றனர். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் அமர்வு ஆரம்பமாகியுள்ள நிலையில்; வடபகுதி மற்றும் குடாநாடு என்பனவற்றின் நிலமையை ஆராயும் நோக்கிலேயே இந்தப் பயணங்கள் அமைந்துள்ளன என்று சுட்டிக் காட்டப்படுகிறது.
யாழ்ப்பாணத்தில் நேற்று இடம் » 19

## தமிழர்களுக்கு அரசியல் தீர்வு வழங்குவதற்காக இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் சீனா!

*இலங்கைக்கான சீனத் தூதுவர் செங் சூயுவானிடம் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் வலியுறுத்தல்*

யாழ்ப்பாணம், மார்ச் 7
இலங்கையில் நடப்பது உள்நாட்டு அரசியல் பிரச்சினை என்று ஒதுங்கிவிடாது தமிழர்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு கிட்டுவதற்கு சீனா உதவவேண்டும். அதற்கான அழுத்தத்தை » 04

# ராகு – கேது பெயர்ச்சி பலன்கள்




**மேட ராசி அன்பர்களே!**

*13.2.2019 முதல் 31.8.2020 வரை உங்கள் ராசிக்கு ராகு, கேதுவின் சஞ்சாரத்தால் உற்சாகம் பொங்கும். மங்கல காரியங்கள் நடக்கும். வீடு கட்டும் கனவு நிறைவேறும்.*

**ராகு பகவான் அருளும் பலன்கள்**

பல வழிகளிலும் அலைக்கழித்துக் கொண்டிருந்த ராகு, தற்போது 3ஆம் இடத்துக்கு வருகிறார். புதிய முயற்சிகள் பலிதமாகும். தாயாரின் உடல் ஆரோக்கியம் மேம்படும். உற்சாகமாகச் செயல் படுவீர்கள். கணவன் மனைவிக்கிடையே குழப்பம் ஏற்படுத்தி, கலகம் விளைவித்த நபர்களை அடையாளம் கண்டு, ஒதுக்கித் தள்ளுவீர்கள். அரை குறையாக நின்றுவிட்ட பல வேலைகளை எளிதாகச் செய்து முடிப்பீர்கள். பணம் வாங்கிக் கொண்டு திருப்பித் தராதவர்கள் இப்போது தானாக முன்வந்து திருப்பித் தருவார்கள்.

தெய்வ வழிபாடுகளை நிறைவேற்று வீர்கள். இளைய சகோதரர் வகையில் மனஸ்தாபம் வந்தாலும் ஒற்றுமை பாதிக்காது. வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். எதிர்பார்த்த வகையில் உதவிகள் கிடைக்கும். வீடு கட்டும் விருப்பம் நிறைவேறும் வங்கிக் கடனுதவி கிடைக்கும்.

வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்பீடுகள் இனி ஈடுகட்டும் அளவுக்கு உங்களின் அணுகுமுறை மாறும். போட்டியாளர்களே திகைக்கும் அளவுக்குப் புது யுக்திகளைக் கையாளுவீர்கள். விளம்பர யுக்திகளைக் கையாண்டு வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பீர்கள்.

உத்தியோகத்தில், அலட்சியப்படுத்திய மேலதிகாரி, உங்களுக்கு இணக்கமாக இருந்து, ஆதரவு தருவார். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பதவி உயர்வும் கிடைக்கும்.



**கேது பகவான் அருளும் பலன்கள்**

இதுவரை, உங்கள் ராசிக்குப் பத்தாமிடத்தில் அமர்ந்து எந்தப் பணிகளையும் செய்யவிடாமல், தடுமாற்றத்தையும், தயக்கத்தையும், வீண் குழப்பத்தையும், பழியையும் தந்த கேதுபகவான், இப்போது ராசிக்கு ஒன்பதாமிடத்தில் அமர்கிறார். சமயோசித புத்தியுடன் செயல்பட வைப்பார். குடும்பத்தில் நிலவி வந்த குழப்ப நிலை மாறும். வாழ்க்கைத்துணையின் பேச்சுக்கு முக்கியத்துவம் அளிப்பது அவசியம். பணப்பற்றாக் குறை நீங்கும்.

உத்தியோகம் சம்பந்தப்பட்ட வழக்கில் நல்ல தீர்ப்பு கிடைக்கும். தந்தை வழி சொத்துகளால் அலைச்சல்களும், செலவுகளும் ஏற்படும். அடிக்கடி பணம் கேட்டு நச்சரித்த உறவினர்கள் உங்களின் நிலைமையைப் புரிந்துகொள்வார்கள். வேலையின்றி தவித்தவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும்.

வியாபாரத்தில் நிலுவைகள் வசூலாகும். வேலையாள்களின் ஒத்துழைப்பு மிக நன்றாக இருக்கும்.

மொத்தத்தில் இந்த ராகுகேது பெயர்ச்சி, ஒரு தீர்வு கிடைக்காமல் தவித்துக்கொண்டிருந்த உங்களுக்கு நல்ல தீர்வை தருவதாகவும், உங் களைச் சாதிக்க வைப்பதாகவும் அமையும்.

ஞாயிற்றுக்கிழமைகளில் அம்பாளுக்கு நெய் தீபம் ஏற்றிவைத்து, சர்க்கரைப் பொங்கலும் செவ்வரளி மாலையும் சமர்ப்பித்து வழிபடுங்கள் சகலமும் நன்மையாகவே அமையும்.

*(தொடரும்)*



## பிறந்த திகதி, பெயரெண் அடிப்படையில் உங்களுக்குரிய குணங்கள்

நீங்கள் பிறந்த திகதியை அடிப்படையாகக் கொண்டு உங்கள் குணங்களைப் பற்றி விளக்குவதே எண்கணிதம். 1முதல் 9 வரை பிறந்தவர்கள் அல்லது பெயர் எண் 1 முதல் 9 வரை அமைந்திருப்பவர்களுக்கு, அவரவர்களின் பிறந்த திகதி அல்லது பெயரெண் அடிப்படையில் பலன்களை கணித்துக் கூறுவதேஎண்கணிதம்பலன்கள்.

**எண் கணிதம்**

ஒருவருடைய பிறந்த திகதி அல்லது பெயரெண் அடிப்படையில் அவர்களுடைய இயல்புகள் எப்படி இருக்கும் என்பதைப் பார்ப்போம்.

ஒருவரின் பிறந்த திகதி 10 ஆக இருந்தால், அவருடைய எண் 1 ஆகும் (1+0=1). அதேபோல் ஒருவரின் பிறந்த திகதி 15ஆக இருந்தால் அவருடைய எண் 6 ஆகும் (1+5=6). இப்படியே ஒருவர் அவருடைய எண்ணை அறிந்து கொள்ளலாம்.

**பிறந்த திகதி, அல்லது பெயரெண் 1 இல்** அமைந்திருந்தால், அவர் தன்னம்பிக்கை மிக்கவராகக் காட்சி தருவார். தைரியம், மற்றும் நியாயத்துக்குக் கட்டுப்பட்டவராக இருப்பார். சுதந்திர மனப்பான்மை கொண்டவர்கள். இவர் எந்த இடத்தில் இருந்தாலும், அந்த இடத்தில் தலைமைப் பொறுப்பு வகிப்பார். ஆளுமைத் திறனும், மன உறுதியும் மிக்கவர்கள். இவர்கள் சூரியனை வழிபடுவது நல்லது. இறைபக்தியால் வாழ்க்கையில் பல சாதனைகளைப் படைப்பார்கள்.

**பிறந்ததிகதி அல்லது பெயரெண் 2** இவ்வாறு அமைந்திருந்தால், மிகவும் மென்மையானவர்களாகவும், பழகுவதற்கு இனிமையானவர்களாகவும் இருப்பார்கள். அதே நேரம் வெகு விரைவில் உணர்ச்சிவசப் படுவார்கள். ஒரு சிறு துன்பத்தையும் தாங்கிக் கொள்ளமாட்டார்கள். பரபரப்பாகவும், வேகமாகவும் செயல்படும் இவர்கள், சிறு சோதனை வந்தாலும் சோர்ந்து போவார்கள். இவர்கள் தங்கள் உடல்நலனில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இவர்கள் அம்பிகையை வழிபடுவதால், வாழ்க்கையில் பல வளங்கள் சேரும்.

**பிறந்த திகதி அல்லது பெயரெண் 3**இவ்வாறு அமைந்திருப்பவர்கள், மற்றவர்களைக் கவரும் தோற்றம் பெற்றிருப்பார்கள். புதுப்புது ஆடை, ஆபரணங்களை விரும்புவார்கள். ஆனால், இவர்கள் தங்களுக்கே இயல்பாக இருக்கும் பிடிவாத குணத்தை மாற்றிக் கொள்வதன் மூலம், வாழ்க்கையில் பல சாதனைகளைப் புரியலாம். இவர்களில் பலரும் ஆன்மிகத்தில் நாட்டம் கொண்டவர்களாக இருப்பார்கள்.

**பிறந்த திகதிஅல்லது பெயரெண் 4** இவ்வாறு அமைந்திருந்தால், எந்த ஒரு பேதமும் பார்க்காமல் அனைவரிடமும் நட்பு பாராட்டும் குணம் கொண்டவர்களாகத் திகழ்வார்கள். புரட்சிகரமான சிந்தனைகளுக்குச் சொந்தக்காரர்கள் இவர்கள். எதிலும் கட்டுப்பாட்டோடு வாழும் இவர்கள், நம்பிக்கைக்கு உரியவர்களாக இருப்பார்கள். கடுமையாக உழைக்கும் இவர்கள், சவாலான காரியங்களையும் எளிதாகச் செய்து முடிப்பார்கள். இவர்கள் துர்கையை வழிபடுவது நல்லது.

**பிறந்த திகதி அல்லது பெயரெண் 5** இவ்வாறு அமையப் பெற்றவர்கள், பல துறைகளிலும் வித்தகர்களாகத் திகழ்வார் கள். இயல்பாகவே சமயோசித புத்தி கொண்டவர்கள். சிறந்த பேச்சாளர்களாகத் திகழ்வார்கள். கோபமும், பிடிவாதமும் இருக்கும். சொந்த உழைப்பினால் வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைவார்கள். இவர்கள் மகா விஷ்ணுவை வழிபடுவதால், அளவற்ற நன்மைகளைப் பெறலாம்.

**பிறந்த திகதி அல்லது பெயரெண் 6** இவ்வாறு அமைந்திருப்பவர்கள், மகாலட்சுமியின் பரிபூரண அருளைப் பெற்றிருப்பார்கள். மிகவும் பொறுமைசாலி. உழைப்பில் ஆர்வம் கொண்டவர். அடிக்கடி கோபம் வந்தாலும் உடனே தணிந்துவிடும். இவர்கள் இளமைப் பருவத்தில் மிகவும் சிரமமான நிலையில் இருந்தாலும், வாழ்க்கையின் மத்தியப் பகுதியில் அளவற்ற செல்வமும், சகல வசதிகளும் பெற்று மகிழ்ச்சியாக வாழ்வார்கள்.

**பிறந்த திகதி அல்லது பெயரெண் 7** இவ்வாறு அமைந்திருப்பவர்கள், பொறுமையாகச் சிந்தித்துச் செயல்படுவார்கள். தாங்கள் விரும்பியதை முடிக்கவேண்டும் என்பதில் முனைப்பாகச் செயல்படுவார்கள். ஆன்மிகத்தில் அளவற்ற நாட்டம் கொண்டிருப்பார்கள். கேதுவின் ஆதிக்கத்தில் இவர்கள் இருப்பதால், இவர்கள் விநாயகப் பெருமானை வழிபடுவது மிகவும் நல்லது.


**பிறந்த எண் அல்லது பெயரெண் 8** இவ்வாறு அமையப் பெற்றவர்கள், மன உறுதி கொண்டவர்கள். சொந்தமாகத் தொழில் செய்து முன்னேறவேண்டும் என்பதில் பிடிவாதமாக இருப்பார்கள். வர்த்தகம், அரசியல் போன்ற துறைகளில் ஈடுபட்டு, சாதனை புரிவார்கள். இவர்கள் சனியின் ஆதிக்கத்தில் பிறந்திருப்பதால், நீதி, நேர்மைக்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ்வார்கள். இவர்கள் சிவபெருமான், ஆஞ்சநேயர் ஆகியோரை வழிபடுவது நல்லது.

**பிறந்த திகதி அல்லது பிறவி எண் 9** இவ்வாறு அமையப் பெற்றவர்கள், மனித நேயம் மிக்கவர்களாக இருப்பார்கள். மற்றவர்களின் கஷ்டத்தில் பங்கேற்கும் இவர்கள், தர்ம சிந்தனை மிக்கவர்களாகவும் இருப்பார்கள். ஆழ்ந்த அறிவும், உயர்வான சிந்தனைகளும் இவர்களுக்கு இயல்பாகவே அமைந்திருக்கும். நன்றாகச் சிந்தித்து அதன் பிறகே செயலில் இறங்குவார்கள் என்பதால், இவர்களுக்குத் தோல்வி என்பதே இருக்காது.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 11 . 12 . 1970

உதிர்வு 07 . 03 . 2018



## அமரர் Dr. கந்தசாமி அரவிந்தன்

திதி : அபரபக்க சஷ்டி


பூவுலகில் படைத்திட்ட உயிரனைத்தும்
காக்கின்ற ஈசனின் மறு உருவாய்
நோயாளர் உயிர்காக்க மண்ணுலகில்
உருவெடுத்த உத்தமனே!
உலக நன்மைகள் பல கருதி
இமயமென உயர்ந்து நின்று - மாநகர்
மன்னாரில் நற்சேவையாற்றிய தந்தையே!
இவ் உலக மக்களுக்கு - நீதி
புகட்டிய தூய அன்பான பரமபிதாவே!
எல்லா மதமும் ஒரு மதமென
உணரவைத்த அன்புத் தந்தையே!
பஞ்சம் போனாலும் பஞ்சத்தால்
பட்ட வடுப் போகாது அப்பா!
நீங்கள் எப்போதும் எங்களுக்கு
நல் வழிகாட்டியாக இருப்பீர்கள் தந்தையே!
என்றும் உங்களை நினைந்து
ஈகைச் சுடரேற்றி வணங்குகின்றோம்
இதயங்களில் நீர் சுமந்து!

பிரிவால் துயருறும் மனைவி, மைந்தர்கள் மற்றும் குடும்பத்தினர்

021 226 2407

## மரண அறிவித்தல்

### பேரம்பலம் நடேசபிள்ளை (சின்னத்தம்பி)



தோற்றம் 23.04.1940 — மறைவு 06.03.2019

மட்டுவில் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பேரம்பலம் நடேசபிள்ளை (சின்னத்தம்பி) நேற்று (06.03.2019) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேரம்பலம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் வேலணை மேற்கு வண்ணாம் புலத்தை சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுப்பையா - கமலம் தம்பதிகளின் மருமகனும் தவமணி தேவியின் (சந்திரா) அன்புக் கணவரும் அன்பழகன் (சுவிஸ்), கலைஅமுதா , கலைக்கவிதா (நோர்வே), எழிலழகன் (யாழ் எழிலன் - நோர்வே), யாழ் அழகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரஜனி (சுவிஸ்), ரவிக்குமார் (R.K Motors), ஆனந்தகுமார் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற கனகசிங்கம் மற்றும் கணபதிப்பிள்ளை (லண்டன்) பாலசிங்கம் (கனடா) ஆகியோரின்பாசமிகு சகோதரனும் லட்சுமி, ஆனந்தமலர், தவரத்தினம், இந்திரபூபதி, நாகேஸ்வரி, தண்டபாணிமூர்த்தி, அருட்சோதி, வசந்தா, காலஞ்சென்றவர்களான சிவராசா, சுபத்திரா ஆகியோரின் மைத்துனரும் அக் ஷனா, சக் ஷனா, சாரங்கா, சாரங்கன், வராகன், அபிஷன், அபர்ணா, ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (10.03.2019) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 8.00 மணியளவில் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் மட்டுவில் நேரியதுாது இந்து மயானத்திற்கு 10.00 மணியளவில் எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"நாகபவனம்"
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்.
021 205 7574, 077 4210 154
077 708 4598

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
### தொழினுட்பப்பீடச் சிற்றுண்டிச் சாலையை நடத்துவதற்கான கேள்வி அறிவித்தல்

சிற்றுண்டிச்சாலையை நடத்துவதற்கான பொறியிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அறிவியல்நகர் பொது நிருவாகக் கிளையில் 22.03.2019 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படும் கேள்விவைப்புப்பணமாகரூபா இரண்டாயிரமும் (2000.00), மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா ஐந்நூறும் (500.00) தனித்தனியாக மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கணக்கு இலக்கம்162-1001-60000-880இற்குச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்துக் கேள்விப்படிவங்களை அறிவியல்நகர் பொதுநிருவாகக் கிளையி லிருந்து பெற்றுக் கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப்படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தொழினுட்பப்பீடச் சிற்றுண்டிச்சாலைக்கான விண்ணப்பப் படிவம்" என தெளிவாகக் குறிப்பிடப் படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அறிவியல் நகரில் அமைந்துள்ள பொதுநிருவாகக் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். தொலைபேசி இலக்கம்: 021-2060180.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
06.03.2019

(IN 9569) (14,17)

## மரண அறிவித்தல்



பிறப்பு 13 . 12 . 1951

இறப்பு 06 . 03 . 2019

### சுப்பிரமணியம் வரேந்திரன்

அல்லாரை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் வரேந்திரன் நேற்று (06.03.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - செல்வநாயகி தம்பதிகளின் அன்பு மகனும் லீலாவதியின் அன்பு கணவரும் தனுஜனின் அன்புத் தந்தையாரும் கைதடியைச் சேர்ந்த கந்தர் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் கமலாம்பிகை, சிறீதரன், ஜெகதாம்பிகை, ஞானாம்பிகை (கனடா), கருணாகரன், கருணானந்தன் (சுவிஸ்), ஜெகதீஸ்வரன் (கனடா) அமிர்தாம்பிகை (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்வக்கதிர்காமத்தையா, சிவகதிர்காமநாதன், சிவலோஜினி, ஞானரூபி அரசநாதன் . ராஜினி, காலஞ்சென்ற சிவப்பிரகாசம், மகேஸ்வரன், சுகன்யா, மகேஸ்வரன், சிவக்கொழுந்து, தங்கராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.03.2019) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அல்லாரை வடக்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கச்சாய் கடற்கரை (எறியாம்பிட்டி) இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்லாரை வடக்கு, மீசாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 23761/15/17)

விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111
உதயன்

## மரண அறிவித்தல்

மலர்வு 08 . 07 . 1938

உதிர்வு 04 . 03 . 2019



### சின்னப்பு சின்னராசா செபரத்தினம்

(ஓய்வு பெற்ற இராணுவ வீரர்)

கோப்பாய் மத்தி இராசவீதியை சேர்ந்த சின்னராசா செபரத்தினம் கடந்த (04.03.2019) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பெஞ்சமின் சின்னப்பு -பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் மனுவல் ஞானப்பிரகாசம் - ஞானம்மா தம்பதிகளின் மருமகனும் கிறிஸ்ரீனம்மாவின் (மல்லிகா) அன்புக் கணவர், றூபா (சுவிஸ்), லிடியா (கனடா), ஜஸ்ரீன் (ஜேர்மனி), டனிஸ்ரன் (இலங்கை), மோறலின் (கனடா) ஆகியோரின் அன்பு தந்தையும் அன்ரனி யோகராசா, வரதராசா, சனிற்றாசலினி, கொண்செப்ரீன், பிரியங்கா ஆகியோரின் மாமனாரும் புளேறியன், பபியன், பிலோறினா, குருசிகா, செரணிகா, சன்சிகா, யூலியன், டேமியன், செபஸ்ரியன், கியாரா, இவானா ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை நாளை (08.03.2019)வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு கோப்பாய் மத்தி புனித சூசையப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
டனிஸ்ரன் - 077 202 8564
மனைவி, பிள்ளைகள்

### ஐ.நா...

அதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உதயன் பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்று மாலை, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் இல்லத்தில் நடைபெற்றது. இதன்போதே மேற்படி முடிவு எட்டப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலைக்கழகத் தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான குழுவினரும், புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தலைமையிலான குழுவினரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5,22,31)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவபாக்கியம் கனகரத்தினம்



தோற்றம் 01.07.1930 மறைவு 06.03.2019

சண்டிலிப்பாய் மேற்கு சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் கனகரத்தினம் நேற்று (06.03.2019) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - செல்லக்குட்டி தம்பதிகளின் ஏக புதல்வியும் காலஞ்சென்றவர்களான தம்பையா - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, சின்னத்துரை மற்றும் தம்பிராசா (மானிப்பாய்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பரிமளகாந்தம், நாகேஸ்வரா, விக்கினேஸ்வரி, செல்வராணி, காலஞ்சென்ற பரமேஸ்வரன் மற்றும் தர்மராசா, கிருபாலினி, தயாநிதி ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவசுப்பிரமணியம், சிவனேஸ்வரி, சச்சித்ானந்தம், காலஞ்சென்ற யோகேஸ்வரன் மற்றும் ஜெயந்தினி, தனலட்சுமி, யோகேந்திரன், தனிநாயகம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.03.2019) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

**024 568 8429, 077 034 3806**

### அப்புக்குட்டி நடராஜசுந்தரம்

*(முன்னாள் ஆசிரியர் - யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி, ஓய்வுபெற்ற அதிபர் - யா/ஏழாலை மகாவித்தியாலம்)*



எழுதுமட்டுவாழைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புக்குட்டி நடராஜசுந்தரம் கடந்த (05.03.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஜோன் றொபேட் அல்பேட் - ராசாத்தி அம்மா தம்பதிகளின் மருமகனும் ரோஸ்லின் ஜெயமலரின் அன்புக் கணவரும் இராகவன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் வடமாகாணம்), இராகுலன் (லண்டன்), ரகுநாத் (பிரதி அதிபர் - யா/கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி), ரமணன் (நெதர்லாந்து), மேனகா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேசசெயலகம் - சங்கானை) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கௌசலா (யா/உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம்) மற்றும் சர்மிலா, சுபனா, சாருதர்சன் (மேலதிக மாவட்டப் பதிவாளர் - பிரதேசசெயலகம் -தெல்லிப்பளை) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற லீலாவதி, இரத்தினராஜா மற்றும் பத்மாவதி (ஜேர்மன்), கலாமதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயராஜகுலேந்திரன் (ஓய்வுபெற்ற அதிபர்), ஜெயராஜினி, ஜெயராஜவதனி (ஜேர்மனி), ஜெயஸ்ரீதரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் துஷாகரன், ஜெயதாரணி, விதுர்ஷனா, பிரணவன், சஹானா, கௌதமன், தனேஸ்வர், கார்த்திகன், ஹரிஸ், அபிநாவ், அக்ஷறா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (10.03.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

**உடுவில் கிழக்கு, சுன்னாகம்.** **077 116 3338**

### அரச...

தெரிவித்துள்ளார். சிறிலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்தால், அரச தலைவர் வேட்பாளராக மீண்டும் போட்டியிடுவேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரச தலைவர் செயலகத்தில் நேற்றுக் காலை ஊடகங்களின் ஆசிரியர்களைச் சந்தித்த போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திர கட்சி தீர்மானித்தால் அரச தலைவர் வேட்பாளராக களமிறங்கத் தயாராக இருக்கின்றேன். அரச தலைவர் வேட்பாளர் விடயம் தொடர்பாக கட்சி மட்டத்தில் ஆராயப்பட்டு வருகின்றது.

மேலும், பலவீனமான நாடாளுமன்றம் ஒன்றில் உறுதியான முடிவுகளை எடுப்பது கடினமானது, என்று இந்த ஊடக சந்திப்பில் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு நவம்பர் - டிசெம்பர் மாதங்களுக்கிடையில் அரச தலைவர் தேர்தல் நடத்தப்பட வேண்டியுள்ள நிலையில், அதற்கு முன்னதாக நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்தும் அதிகாரம் அரச தலைவரிடம் இல்லை. அரச தலைவரின் இந்தக் கருத்தால், தற்போதைய அரசைக் கவிழ்த்து, மீண்டும் ஒரு அரசியல் குழப்பத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் இடம்பெறுகின்றனவா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக, ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ.5)

### பெரும்பான்மையை...

என என்று சிறீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த சிறீலங்கா சுதந்திக் கட்சியின் பொதுச்செயலர் தயாசிறி ஜெயசேகர இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவளிப்பதா, இல்லையா என்பது தொடர்பாக அரச தலைவர் மற்றும் சிறீலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் கலந்துரையாடி முடிவு எடுக்கப்படும். பெரும்பாலும் வரவு செலவு திட்டத்திற்கு எதிராக வாக்களிப்பதே எமது முடிவு.

தற்போதைய அரசுக்கு பெரும்பான்மை இல்லை என்பதையும் கூறவேண்டும். பெரும்பான்மையை நிரூபிக்கவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. அதன் காரணமாகவே வரவு செலவு திட்டம் வரவேற்கதக்கது என சுமந்திரன் கூறியுள்ளார். குறிப்பாக கூட்டமைப்பின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தனிப்பட்ட ரீதியில் நன்மை அடையும் வகையில் வரவு செலவு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதாவது கூட்டமைப்பின் உறுப்பினர்கள் தனிப்பட்ட ரீதியில் பணத்தைப் பெறும் வகையில் இந்த வரவு செலவு திட்டத்தில் வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது. பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு இந்த வரவு செலவு திட்டத்தில் சம்பள அதிகரிப்பு வழங்கப்படவில்லை' - என்றார். (ம)

### சில...

தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். அரச தலைவர் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"சில வெளிநாட்டுத் தூதுவர்கள் தமது எல்லையை மீறுகிறார்கள். எதற்காகப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் பொலிஸ் திணைக்களத்தை வைத்திருக்கிறேன் என்று அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர். அவர்களுக்கு நான் 'சரியான முறையில்' பதிலளித்தேன். மூன்று அமைச்சுக்களுக்கு மேல் நான் வைத்திருப்பதற்கு அனுமதியில்லை. இருந்தாலும், எத்தனை நிறுவனங்களையும் வைத்திருக்க முடியும். அரசிதழ் அறிவிப்பின் மூலமாக எந்தவொரு அரச நிறுவனத்தையும் நான் எனது கட்டுப்பாட்டில் கொண்டுவர முடியும். பொலிஸ்துறை திணைக்களத்துக்கு மேலதிகமாக, அரச அச்சகத் திணைக்களத்தையும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வந்துள்ளேன். பொலிஸ்துறை திணைக்களத்தின் உட்கதை சோகமானது. அதனை ஊடகங்கள் விசாரியுங்கள்' என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)

### எவர்...

சாவுத் தண்டனை நிறைவேற்றப்படுவது நிச்சயம் என அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன திட்டவட்டமாகத் தெரிவித்தார். நாட்டில் இதுவரை கைப்பற்றப்பட்ட சகல போதைப் பொருள்களும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி அழிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நீதிபதிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் முன்னிலையில் கட்டுநாயக்கவில் வைத்து இதுவரை கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்கள் அழிக்கப்படும். அத்துடன், எதிர்வரும் ஏப்ரல் 3ஆம் திகதி 'சித்திரை வாக்குறுதி' எனும் பெயரில் போதைப்பொருள் பாவனையிலிருந்து விடுபடுவதற்காக முழு நாடும் இணையும் செயற்றிட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அன்றைய தினம் காலை 8 மணிக்கு கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் ஒன்று கூடுமாறு அனைத்து அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சித் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன். சட்டவிரோத போதைப்பொருளை அடையாளங் காண்பதற்கு பயன்படுத்தப்படும் புதிய தொழில்நுட்பத்துடனான உபகரணங்களை இலங்கைக்கு பெற்றுக்கொள்வதற்காக விலை மனு கோரப்பட்டுள்ளது. எதிர்வரும் சில மாதங்களில் அந்த உபகரணங்களை நாட்டிற்கு கொண்டு வர இயலும். போதைப் பொருள் கடத்தல் காரார்களுக்கு திட்டமிட்டபடி தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும் என்றும் அரச தலைவர் மேலும் தெரிவித்தார். (ம)

### தமிழர்களுக்கு...

கொழும்புக்கு சீனா வழங்க வேண்டும். அதற்குரிய தகுதியும் வல்லமையும் சீனாவுக்கு உண்டு என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன்.

இலங்கைக்கான சீனத் தூதுவர் செங் சுயுவான் தலைமையிலான குழுவினர் உதயன் பணிமனைக்கு நேற்று வருகை தந்தனர். அவர்களுடனான சந்திப்பிலேயே சீனத்தூதுவரிடம் மேற்படி வலியுறுத்தினார் சரவணபவன்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மற்றைய நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதில்லை என்று தூதுவராகிய நீங்கள் தெரிவித்திருந்தீர்கள். எனினும் இலங்கை விவகாரங்களில் குறிப்பாக தமிழர்களுக்கான தீர்வு விடயத்தில் சீனா ஒதுங்கியிருக்கக்கூடாது. இங்கு நிரந்தர அமைதியை ஏற்படுத்த அழுத்தம் கொடுக்க வேண்டும். கொழும்புக்கு அதிக உதவிகளை வழங்கி அதன் பொருளாதார மேற்பாட்டுக்கான பங்காளியாக இருக்கின்ற சீனாவுக்கு அதற்கான தகுதியும் உரிமையும் உள்ளது. யார் சொன்னால் இலங்கை கேட்குமோ அவர்கள் நிரந்தரத் தீர்வுக்கான அழுத்தத்தைக் கொடுத்தால் மட்டுமே தீர்வு சாத்தியமாகும். அதனைச் சீனா செய்யவேண்டும்.

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை அதிகாரத்துக்குக் கொண்டுவருவதில் தமிழ் மக்கள் காத்திரமான பங்களிப்பை ஆற்றினார்கள். புதிய அரசமைப்பின் ஊடாக அவர்கள் அதைச் செய்திருந்தனர். ஆனால் புதிய அரசமைப்பு உருவாக்கல் முயற்சி அனேகமாகத் தோல்வியடைந்துவிட்டது. இந்த நிலையில் இலங்கையில் நிரந்தர அமைதியை ஏற்படுத்துவதற்கு சீனா முன்வர வேண்டும். இதேவேளை வடக்கில் ஊடகங்கள் மீது மேற்கொண்ட தாக்குதல்கள் குறித்து இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ரணிலின் ஆட்சியிலும்கூட இந்த விடயத்தில் எந்த முன்னேற்றமும் இல்லை - என்றார். பதில் வழங்கிப் பேசிய சீனத் தூதுவர் தெரிவித்ததாவது:

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவு 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. அதிலும் குறிப்பாக தமிழர்களுக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவு தனிச் சிறப்பானது. வடக்குப் பகுதியில் அண்மையில் தொல்பொருள் ஆய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட பொருள்கள் தக்க சான்றுகள். எனினும் கடந்த காலங்களில் வடக்குடன் சீனாவுக்கு இருந்த உறவில் பெரும் இடைவெளி உள்ளது என்பதை ஏற்கின்றேன்.

இது வடக்குக்கான எனது முதல் பயணம். இனிவரும் காலங்களில் இது சரிசெய்யப்படும். எமக்கு சிங்கள, தமிழ், முஸ்லிம் பாகுபாடில்லை. அனைத்து இன மக்களும் நல்லிணக்கத்துடன் வாழ்வதையே சீனா விரும்புகிறது. சீனா தமிழர்களுடன் தொடர்ந்தும் இருக்கும் - என்றார். (ம)

# மரண அறிவித்தல்கள்



தோற்றம் 10 . 07 . 1928

மறைவு 06 . 03 . 2019

## மரியாம்பிள்ளை அக்கினேசம்மா

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை அக்கினேசம்மா 06.03.2019 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை திரேசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற மரியாம்பிள்ளையின் அன்பு மனைவியும் மேரிலூர்து (கனடா), ஜெறோம் அன்ரன் (திருகோணமலை), பஸ்ரியாம்பிள்ளை (நெதர்லாந்து), விக்ரர் வில்லியம் (லண்டன்), மேரி திரேஸ், பொலிற் பயஸ், பற்றிக் இம்மானுவேல் (லண்டன்), பிறிஜிற்றா ஜக்குலின்(லண்டன்), வுளோறின் ஆகியோரின் பாசமிகு தாயாரும் றெஜினோல்ட், ஸ்றெலா (திருகோணமலை), ஜெனற்(நெதர்லாந்து), ஜெயமேரி(லண்டன்), சவுந்தரராசா, நவநாயகி, குலேந்திரன் (லண்டன்), சுதேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் செறினா, நிகாறா (பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்), சாம்சன்(கனடா), நிவேதிகா, பிரகாஷினி, பிரதீபன், பிரதீபா, ரம்யா, மெல்வின், அமென்டா(நெதர்லாந்து), மரிஸ்ரன், மரிஷா(லண்டன்), சியாஸ்ரன், ஷலோமி, டிலுஜா, ஜெனக் ஷயா(லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஷானுஜன், அனுஷ்ன், ரித்திகா, அபிஷன்(கனடா) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனை 09.03.2019 சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு சில்லாலை புனித கதிரை மாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் புனித கதிரை மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சில்லாலை,
பண்டத்தரிப்பு.

(CS 23801) (14,17)

தகவல்:
குடும்பத்தினர்.

**077 534 6276**



தோற்றம் 22 . 07 . 1934

மறைவு 05 . 03 . 2019

## முருகேசு நற்குணசிங்கம்

(பிரபலவர்த்தகர்)

நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரபலவர்த்தகர் முருகேசு நற்குணசிங்கம் 05.03. 2019 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - சிவக்கொழுந்து தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற நீலாம்பிகையின் அன்புக் கணவரும், திருமதி தர்மகுலராணி (ஓய்வுநிலை - ஆசிரியை), திரு. தர்மகுலசிங்கம் (சுவிஸ்), திருமதி லோகநிதி (சுவிஸ்), திரு. முருகதாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. குகநேசன் (ஓய்வுநிலை - அதிபர் நயினாதீவு ம.வி), திருமதி மீனலோஜினி (கொழும்பு), திரு. சத்தியராசா (சுவிஸ்), திருமதி சிவாஜினி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும், திருமதி கற்பகரூபி - சிவகாந்தன் (கனடா), திரு.விமலசேகர் (அஞ்சல் அலுவலகம் - நயினாதீவு), ஜனார்த்தனி (ஆசிரியை - நயினாதீவு ம.வி), காலஞ்சென்ற திருமதி அமுதகௌரி - மற்றும் திரு.கரன் (யாழ். போதனா வைத்தியசாலை), சுமங்கலை (கொழும்பு), சலோ (சுவிஸ்), சத்தியகீர்த் (சுவிஸ்), பிரதீப் (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும், சங்கீர்த்தனி, சயானி, ஜெஷ்ணவி ஆகியோரின் பூட்டனும், திரு. கந்தசாமி (கனடா), திரு.லெட்சுமணன் (குமாரவேல் அன் கோ - கொழும்பு), திரு.தங்கராசா (ஜேர்மனி), பேராசிரியர் நவரெட்ணம் (ஓய்வுநிலைத் தலைவர் இசைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான திருஞானசம்பந்தர், திருமதி நாகரெத்தினம் மற்றும் திருமதி தனலெட்சுமி, திரு.விசாகப்பெருமாள், திருமதி இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.03.2019) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிவரவை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

- குடும்பத்தினர்.

தகவல் : சோ. குகநேசன்
(மருமகன் - ஓய்வுநிலை அதிபர்)

**077 824 7463**

(cs.00424) (13.17)

**வேலையாள்கள் தேவை**

புகைப்பட கலையகம் ஒன்றுக்கு யாழ் நகரை அண்மித்த பகுதியில் உள்ள பெண் வேலையாள்கள் தேவை. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

(N 9566) (14.17)

**077 411 5828**

**வீடு வாடகைக்கு விடப்படும்**

இருபாலை சந்தியில் உள்ள வீடு வாடகைக்கு விடப்படும்.

(CS 23600) (14.17)

**077 790 6224**

# 31 ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு



அன்னையின் மடியில் 01 . 12 . 1976

சந்நிதியான் அடியில் 06 . 02 . 2019

## அமரர் பசுபதி செந்தில்குமரன்

கட்டிய கணவன் விழி மூடிக்கிடக்கையில்
எட்டியும் பாராது கண்மூடி இருந்தவள்
அந்திம வேளையில் அரை நொடி கூடவே
அந்தப் பிஞ்சுகள் காண்பதை அடுக்காத நெஞ்சினள்
தன்முல்லைகள் பூமுகம் தேடியே வேகிடும்
கொண்டவன் வேதனை துடைத்திடாப் பத்தினி
பத்தாண்டுப் பத்தினி
உன் மூன்று மழலைகளின் வருகையை எதிர்பார்த்து
வீதியில் நின்றாயோ செந்தில்குமரா !

(NE 978) (14.17)

**உன் ஆத்மா சாந்தியடைய சந்நிதியானை வேண்டுகின்றோம்.**

கடந்த 06.02.2019 புதன்கிழமை இறைபதம் அடைந்த எமது குலவிளக்கு பசுபதி செந்தில்குமரன் அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை 08.03.2019 வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தங்கள் குடும்பத்தினருடன் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

கதிரிப்பாய், அச்சுவேலி.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி எலிசபெத் (தங்கச்சியம்மா) ஐயாத்துரை



பிறப்பு 11.10.1933 இறப்பு 05.03.2019

யாழ் நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் காங்கேசன்துறையினை வதிவிடமாகவும் இலண்டன் மற்றும் ஜேர்மனியினை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி எலிசபெத் ஐயாத்துரை 05.03.2019 செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா ஐயாத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மிக்கேல் சபரிமுத்து திரேசம்பாள் தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற மிக்கேல் சந்தியாப்பிள்ளை மரியம்மாளின் பெறாமகளும் காலஞ்சென்றவர்களான பிரான்ஸிஸ், பாக்கியநாதன்,பிலோமினா மற்றும் அன்ரன் ஜோசப், மரியநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் நந்தினி (ஜேர்மனி), லோகினி (ஜேர்மனி),ஷாமினி (ஜேர்மனி), பிறேமதாசன் (லண்டன்), Dr.பிறேம்றோய்(பாபு- லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவசுப்பிரமணியம், தேவராஜா சிவஞ்ஞானசுந்தரம், சுதா ஆகியோரின் மைத்துனியும் யூட், சிந்து, பிறேம்குமார், Dr.பிரியதர்சினி, கார்த்திக், சாருஜன், எலோன், வியோன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சித்தார்த், யுவேனா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் கிளிநொச்சி இல.72, சேவியர் சந்தி, கனகபுரம் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் 08.03.2019(வெள்ளிக்கிழமை) மு.ப 9.00 மணியளவில் அந்தோனியார் தேவாலயம் (ஜெயந்திநகர், கிளிநொச்சி) திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் உருத்திரபுரம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.72,,7ஆம் பண்ணை,
சேவியர்கடை சந்தி, கனகபுரம், கிளிநொச்சி.
077 6512373
(சு.விஜயகுமார்)

தகவல்:
குடும்பத்தினர்.

நந்தினி :004915211217443/லோகினி :004915217248069
ஷாமினி :004917657776422/பாபு :00447803333700

## வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் அரைக்கும் ஆலைக்கு வேலையாள்கள் தேவை.
-077 610 4812, 076 622 1402

## அறிவித்தல்
## பகிரங்க மூடிய கூறுவிலை

வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு சொந்தமான NPLB - 9111, NPLP - 9114 இலக்க கூலர் வாகனங்கள் இரண்டு மூடிய கூறுவிலை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. இதற்கான விண்ணப்பப் படிவத்தை சமாசத்தின் தலைமை அலுவலகத்தில் ரூபா 500/= (ஐந்நூறு). செலுத்தி பெற்றுக் கொள்ள முடியும். இப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது.

மேற்கூறிய கூலர் வாகனங்களை பிரதான வீதி தாளையடியில் அமைந்துள்ள சமாசத்தின் தலைமை அலுவலகத்தில் 07.03.2019ம்திகதிவியாழக்கிழமைதொடக்கம்21.03.2019ம் திகதி வியாழக்கிழமை வரையும் விடுமுறை நாட்கள் தவிர்ந்த வார நாட்களில் முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை பார்வையிடலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை தலைவர் /பொது முகாமையாளர்வடமராட்சிகிழக்குகடற்தொழிலாளர்கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் பிரதான வீதி. தாளையடி எனும் முகவரிக்கு பதிவுத்தபால்மூலம்அனுப்புவதுடன்கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கூலர் வாகனங்கள் விற்பனைக்கான கேள்வி விண்ணப்பம் எனக் குறிப்பிடவும்.

விண்ணப்பம்07.03.2019ம்திகதிதொடக்கம்21.03.2019ம் திகதி நண்பகல் 12 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். மூடிய கூறுவிலைகள் திறக்கப்படும் திகதி கேள்வி மனு தாரருக்கு பின்னர் அறிவிக்கப்படும்.

தலைவர் / பொது முகாமையாளர்,
வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
பிரதான வீதி. தாளையடி.

## மரண அறிவித்தல்கள்

### Dr.நடராஜா சிவராஜா

*(முந்நாள் தலைவர் - சமுதாய மருத்துவதுறை. மருத்துவபீடம் யாழ் பல்கலைக்கழகம். முந்நாள் ஆலோசகர் - உலக சுகாதார நிறுவனம். தலைவர் - வலுவிழந்தோர் புனர்வாழ்வுச்சங்கம், தலைவர் - புற்றுநோயாளர் காப்பகம் (வடக்கு கிழக்கு). ஸ்தாபகர் - முன்நோக்கு அறக்கொடை நிதியம் (AHEAD TRUST)*



Dr.நடராஜா சிவராஜா நேற்று (06.03.2019) புதன்கிழமை இயற்கை எய்திவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

47/3. ஆடியபாதம் வீதி.
திருநெல் வேலி

தகவல்: குடும்பத்தினர்
021 222 8759



### திருமதி உருக்குமணி இராசலிங்கம்

காரைநகரைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி உருக்குமணி இராசலிங்கம் நேற்று (06.03.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - அன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான நடேசு - இரத்தினம் தம்பதிகளின் மருமகளும் சுகந்தினி, சுதாஜினி, சுதர்சன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஸ்ரீரங்கநாதன் (பற்குணம்), நடராசா, சுதாமதி ஆகியோரின் மாமியாரும் தர்வீன், சஞ்சஜன், சபிந்தன், சர்மிலன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.03.2019) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரத வீதி,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 23802/13/17)

## ரெலோ...

டைந்த பின்னர் ரெலோ தனியாக கூட்டம் நடத்தியுள்ளது. நேற்றிரவு நீண்ட நேரம் இந்தக் கூட்டம் நடைபெற்றுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்மட்டக் குழுக் கூட்டம், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் இல்லத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் பன்னாட்டுக் கண்காணிப்பை நீடித்தல் என்ற பெயரில் இலங்கைக்கு கால அவகாசம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு கடிதம் எழுதவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கக் கூடாது என்று வலியுறுத்தியிருந்த ரெலோ அமைப்பு, மேற்படி முடிவு தொடர்பில் அதிருப்தியடைந்துள்ளதாகத் தெரியவருகின்றது. இதனையடுத்து கொழும்பில் நேற்று அவசர அவசரமாக அந்தக் கட்சி கூட்டம் நடத்தியது. மிக நீண்ட நேரம் இந்தக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் ஆராயப்பட்ட விடயங்கள் வெளியாகவில்லை. (ஒ.5.22.31)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
### நாகலிங்கம் கிருஷ்ணபாலா
*(ஓய்வு நிலை ஆசிரியர்)*



மலர்வு 18 . 08 . 1940
உதிர்வு 09 . 03 . 2016

*அன்பான அப்பா ! உங்களோடு இருந்த வசந்தகாலமது*
*இதயக் கருவறையில் உங்கள் நினைவுகளைச் சுமப்பதே*
*பேரின்ப நிசப்தத்தை மரணிக்கச் செய்யும்....*
*சப்த உச்சாடணங்களாய் உங்கள் நினைவலைகள்......*
*உள்ளே ஒலி இழைகளாய் ! இந்த மௌனதவம்*
*என்று கலையும் அப்பா. அன்பினால் நெய்யப்பட்ட*
*கண்ணீர்த் துளிகள் சரம் சரமாய் உதிர்கின்றது*
*எமது இதயத்துறை முகத்தில் தன்னம்பிக்கை*
*நங்கூரத்தை ஆழமாய் ஊன்றிய உங்கள் நினைவுகள்*
*பின்னோக்கிச் செல்கின்றன.*

ஒளி இல்லாத எமது இல்லத்தில் ஒளியேற்ற வாருங்கள் அப்பா
உங்கள் வரவை வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கின்றோம்.
*ஓம் சாந்தி !*

406,பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

*என்றும் நீங்கா நினைவுடன் :*
மனைவி ரூபாவதி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(CS 2376)(4.17)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



உதிப்பு 15 . 12 . 1943
உதிர்வு 06 . 02 . 2019

அமரர்
### தனலட்சுமி பத்மநாதன்

கடந்த 06.02.2019 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (08.03.2019) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.*

கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.
திருமதி நயனவதி குகராஜ் (மகள்)
வீ.எஸ்.துரைராஜா (சகோதரன்)

(IN 9568)(4.17)

## மரண அறிவித்தல்

### நடராசா கணேசமூர்த்தி
*(கருங்காலி, காரைநகர்)*

காரைநகர் வாரிவளவைப் பிறப்பிடமாகவும் கருங்காலியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா கணேசமூர்த்தி நேற்று (06.03.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவ்ரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

## பன்னாட்டுக்...

நாடாளுமன்றக் குழுக் கூட்டம், நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்றுப் பகல் 11 மணிக்கு இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் பிரிட்டன் தலைமையில் கொண்டுவரப்படவுள்ள தீர்மானத்தின் நகல் வரைபில் இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதுகுறித்து பல்வேறு கருத்துக்கள் நிலவி வருகின்றன.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஐ.நா. தீர்மானத்தை இதற்கு மேல்கொண்டு செல்லாது நிறைவுக்கு கொண்டு வரவேண்டும் என்று கூறியுள்ளார். ஊடகப்பிரதானிகளுடனான சந்திப்பிலும் இந்த விடயத்தைக் கூறியுள்ளார். தமிழ்த் தரப்பிலும் கால அவகாசம் வழங்கப்படக்கூடாது என்று கூறப்படுகின்றது. புலம்பெயர் தரப்பிலும் அவ்வாறான கோரிக்கைகள் உள்ளன. அரச தலைவரின் நிலைப்பாடு, புலம்பெயர் மற்றும் சில தமிழ்த் தரப்பினரின் நிலைப்பாடுகள் ஒன்றாகத்தான் இருக்கின்றன.

கால அவகாசம் வழங்கப்படாது விட்டால் எதிர்காலத்தில் நிலமைகள் எவ்வாறு அமையும். இலங்கை மீதான பன்னாட்டுச் சமூகத்தின் பிடி அற்றுப்போகும். இலங்கை விவகாரம் பன்னாட்டுச் சமூகத்தின் கவனத்திலிருந்தே அகன்று விடும். அதன் பின்னர் என்ன செய்வது? இலங்கை அரசின் பொறுப்புக்கூறலை எவ்வாறு வலியுறுத்துவது? அதற்கு பன்னாட்டுத் தரப்புக்கள் எத்தகைய அழுத்தங்களை பிரயோகிக்க முடியும். இந்த விடயங்களை எல்லாம் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. அவற்றைக் கவனத்தில் கொள்கின்றபோது பன்னாட்டுச் சமூகத்தின் மேற்பார்வைக்கான காலத்தை நீடிக்கச் செய்வதில் பிரச்சினை இல்லை. அது கால அவகாசம் என்றோ அரசுக்கு சார்பான விடயம் என்றோ கூறிவிடமுடியாது. பன்னாட்டுச் சமூகத்தின் கண்காணிப்புக்கான காலமே நீடிக்கப்படுகின்றது. இதன் மூலம் இலங்கை மீதான பன்னாட்டுச் சமூகத்தின் மேற்பார்வைக்கான காலம் நீடிக்கப்படுகின்றது. மாறாக பன்னாட்டுச் சமூகத்தின்பிடியிலிருந்து இலங்கை நீங்கவில்லை. இந்தக் கருத்துக்கள் கூட்டத்தில் பரிமாறப்பட்டுள்ளது.

இதன் இறுதியில் பன்னாட்டுச் சமூகத்தின் மேற்பார்வையை நீடிப்பது என்ற பெயரில், கால அவகாசம் வழங்க கூட்டமைப்பு இணங்கியுள்ளன.

இதேவேளை, சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் கருத்துத் தெரிவித்த இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா, கால அவகாசம் வழங்கப்படக் கூடாது என்று கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ.5,22,31)

## இலங்கை...

இலங்கை தொடர்பான தீர்மானத்தில் சில திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டுமென்ற கோரிக்கை முன்வைக்கப் பட்டுள்ளது. உறுப்பு நாடுகளும் பன்னாட்டு மனித உரிமை அமைப்புக்களும் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளன.

அத்தோடு தற்போதைய அமர்வில் இலங்கை தொடர்பாக சமர்ப்பிக்கப்படவுள்ள தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது என்று அயலுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இணை அனுசரணை வழங்கவேண்டாம் என அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வேண்டுகோள் விடுத்துள்ள நிலையில் அரசு அதற்கு எதிரான நிலைப்பாட்டை மேற்கொண்டுள்ளது. இதேவேளை இந்தத் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்குவதாக சுவிற்சர்லாந்து, ஆஸ்திரேலியா, ஆஸ்திரியா, டென்மார்க், இந்தியா உள்ளிட்ட நாடுகளும் அறிவித்துள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை வளாகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இலங்கை குறித்த தீர்மானம் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் பல்வேறு அமைப்புக்கள் மற்றும் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

(ம)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**கந்தையா பொன்னுத்துரை**



தோற்றம் 19.08.1943 — மறைவு 12.03.2013

திதி: மாசிமாத பூர்வபக்க பிரதமை

எங்கள் இனிய தெய்வமே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் ஐந்து ஆனாலும் ஆறாது எம் துயரம்!
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சில் என்றும் நிறைந்திருக்கும்
ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

குடும்பத்தினர்
வீரப்பதிராயன்,கரணவாய்தெற்கு, கரவெட்டி

ES Printers

மக் பிரிண்ட் (MUG) 450/=



# 357, Kasthuriyar Road, Jaffna.
021 492 7471 / 021 492 7472

## ஓராண்டு நீங்கா நினைவலைகள்



அமரர் **பொன்னர் துரைராசா**
(முன்னாள் C.W.E உத்தியோகத்தர்)

பிறப்பு 12.03.1933 — ஆண்டவன் அடியில் 18.03.2018

திதி : பூர்வபக்க பிரதமை

நித்தம் நீதி மொழி கற்றுத்தந்து
நிலை குலையாமல் நித்திய ஒளி ஏற்றிவைத்து
கடமை கண்ணியம் கட்டுப்பாடு உண்மை பொறுமை
போன்ற ஒழுக்க விழுமியங்களை புரிய வைத்த
எங்கள் அப்பாவின் ஓராண்டு நினைவு 07.03.2019
என்றும் எங்கள் மனங்களில் நீங்கா நினைவாக ஒளி ஏற்றிய வண்ணம்


ஆத்மசாந்திப் பிரார்த்தனை முற்பகல் 10.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளது. அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

41/ 54, ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை,
நாயன்மார்கட்டு, நல்லூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
021 222 0346

விளம்பர தொடர்புகளுக்கு
உதயன் advt@uthayan.com,
021 493 1111

Udara
Senior Citizen's Account



வாழ்க்கையில் எம்மை ஜெயிக்க
வைத்து அழகு பார்த்த
அன்புப் பெற்றோருக்காக
கொமர்ஷல் வங்கியின்
"உதார"
சிரேஷ்ட பிரஜைகள் கணக்கில்
இப்பொழுது நீங்களும்
அவர்களுக்காகச் சேமிக்கலாம்...
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
011 2 353 333



COMMERCIAL BANK

# மரண அறிவித்தல்

## காத்தலிங்கம் பிறேமரமணன்




யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு, வத்திராயனைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை தற்காலிக முகவரியாகவும் கொண்ட காத்தலிங்கம் பிறேமரமணன் 05.03.2019 செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் காத்தலிங்கம் - நாகேஷ்வரி தம்பதியரின் அன்பு மகனும் கீதாவின் அன்புக் கணவரும், சங்கவனின் அன்புத் தந்தையும், பிறேமலதா, றிட்சன், காந்தன், சுதா பாபு ரமேஷ் சதீஷ் தேவகி மேனன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், மவுன சுந்தரம், காலஞ்சென்ற யோகேஷ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.03.2019) வியாழக்கிழமை நண்பகல் வவுனியாவில் உள்ள தற்காலிக இல்லத்தில் நடைபெற்று புதவுடல் பிற்பகல் 2 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.60/7,**
**6 ஆம் ஒழுங்கை,**
**வேப்பங்குளம்,**
**வவுனியா.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழரின் விருப்பை மீண்டும் சொல்லவேண்டியிருக்கிறது

அண்மையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்இரா.சம்பந்தன்உள்ளிட்ட அரசியல்தலைவர்கள் கலந்துகொண்ட கூட்டம் நடந்தது. இந்தக் கூட்டம் முக்கியமாகபுதிய அரசமைப்புத்தொடர்பானமுயற்சிகள்குறித்து ஆராய்வதற்காகவேஒழுங்குசெய்யப்பட்டது.கூட்டமைப்பின் தலைவரது கோரிக்கையின் பேரில் இந்தக் கூட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. எனினும் மகிந்த ராஜபக்ச அணியினரும்ஜே.வி.பியினரும்இந்தக்கூட்டத்தில்கலந்து கொள்ளவில்லை.

இந்தக் கூட்டத்தில் முக்கியமானதொரு முடிவும் எடுக்கப்பட்டது. அதாவது அதிகாரப் பகிர்வை தற்போதுள்ள அரசமைப்பினுள் எப்படிப் புகுத்துவது என்பது தொடர்பில் ஆராய்வதற்காக ஒரு புதிய குழுவை நியமிப்பது என்பதே அந்த முடிவு. இந்தக் குழுவுக்கு 4 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.நாடாளுமன்றஉறுப்பினர்களானராஜித சேனாரட்ண, எம்.ஏ.சுமந்திரன், சரத்அமுனுகம, டிலான்பெரேரா ஆகியோரே இந்தக் குழுவின் உறுப்பினர்கள். இவர்கள் எல்லோருமே அனேகமாக இணங்கிச் செயற்படக்கூடியவர்கள்.அதாவதுநாடாளுமன்றஉறுப்பினர்எம்.ஏ.சுமந்திரன் முன்வைக்கக்கூடிய யோசனைகளை அதிகம் எதிர்ப்பின்றி ஏற்றுக்கொண்டு முன்னகரக்கூடியவர்கள். எனவே இந்த விடயத்தில்இந்தக்குழுவிடம்இருந்துவரக்கூடியஅறிக்கை சாதகமாகவே இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

அதனால்பிரச்சினைகுழுவிடம்இல்லை.குழுவைஅமைப்பது என்கிற முடிவை எட்டியதன்மூலம்நாட்டு மக்களுக்கு அனைத்துத் தரப்பினரும் இணைந்து சொல்லியிருக்கும் செய்திதான் முக்கியமானது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த தரப்புகளான மைத்திரி, ரணில், சம்பந்தன் ஆகியோர் தலைமை தாங்குகின்ற கட்சிகள் கூடித்தான் 2015ஆம் ஆண்டில் ''மாற்றம்'' என்கிற முழக்கத்துடன் தேர்தலை எதிர்கொண்டன. அந்த ''மாற்றம்'' என்பதற்குள் அரசமைப்பு மாற்றம் முதன்மையானது.

இனப்பிரச்சினைக்குத்தீர்வாக, நாட்டை இனவாதச்சகதிக்குள் இருந்து மீட்டெடுக்கும் நோக்கோடு புதிய அரசமைப்புக் கொண்டுவரப்படும் என்று சொல்லப்பட்டது. அந்த வாக்குறுதிகளை நம்பித்தான் சிறுபான்மையினரையும் உள்ளடக்கிய பெரும்பான்மையான மக்கள் இந்தக் கூட்டணியை ஆட்சி அதிகாரத்தில் இருத்தினர்.

4 ஆண்டுகள் கடந்த நிலையில் இப்போது இந்தக் கூட்டணியினர் மக்களுக்குச் சொல்லாமல் சொல்லியிருக்கும் செய்தி என்னவெனில்புதிய அரசமைப்பு முயற்சியைநாம் கைவிட்டுவிட்டோம். அது இப்போதைக்குச் சாத்தியமானது அல்ல, தேர்தல் முறைமை மற்றும் நிறைவேற்று அதிகார அரசதலைவர் முறைமை ஆகியன தொடர்பில் இணக்கப்பாடு இல்லாத காரணத்தால் இந்த முயற்சியை முழுமைப்படுத்த முடியாது என்பதே.

ஒப்புக்குச்சப்பாணியாகப்புதிய அரசமைப்பு முயற்சி தொடரும் என்று ரணில் விக்கிரமசிங்க அங்கு கருத்துரைத்தார் என்பதைப் புறக்கணித்துவிடுங்கள். ஏனெனில், அதிகாரப் பகிர்வை மட்டும் அரசமைப்புக்குள் உட் புகுத்துவது தொடர்பில் ஆராய்வதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டமை கூறும் தெளிவான விளக்கம், புதிய அரசமைப்பு அல்ல அரசமைப்புத் திருத்தம் ஒன்று பற்றி ஆராய்வதற்கே இப்போதைக்குச் சிங்களத் தலைமைகள் தயாராக இருக்கின்றன என்பதுதான். அதாவது, அரசமைப்பின் 13ஆவதுதிருத்தத்தைப் போன்று மற்றொரு திருத்தத்தைக் கொண்டு வருவதைப்பற்றிப்பேசத்தான்இந்தத்தரப்புகள்தயாராக உள்ளன.

மற்றொரு வடிவில் சொன்னால், மகிந்த மற்றும் சிங்கள மக்களின் எதிர்ப்பை அடுத்து புதிய அரசமைப்பு முயற்சியைக்கைவிட்டுவிட்டுதமிழ் மக்களைச்சமாளிப்பதற்காக அரசமைப்புத் திருத்தம் ஒன்றைக் கொண்டு வருவது பற்றியே இனிவரும்ஒருவருடத்துக்கும்பேசப்போகிறார்கள். எனவே தமது தேவை மற்றொரு அரசமைப்புத் திருத்தம் அல்ல நிரந்தரத் தீர்வே என்பதைத் தமிழ் மக்கள் தமிழ் மற்றும் சிங்கள அரசியல்வாதிகளுக்கு அழுத்திச் சொல்ல வேண்டியிருக்கிறது.

# போதையிலிருந்து விடுபடுமா இலங்கைத் திருநாடு?

இந்துமதி

கொழும்பில் அதிகளவு போதைப்பொருள் கைப்பற்றப்படடுள்ளமை நாடு எந்த அளவுக்குப் போதைக்குள் மூழ்கிக் கிடக்கின்றது என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டிவிட்டது. சுமார் 2 ஆயிரத்து 954 மில்லியன் ரூபா பெறுமதியான 294 கிலோ நிறையைக் கொண்ட கொடிய ஹெரோயின் போதைப் பொருளே கைப்பற்றப்பட்டுள்ளது. சமீப காலமாக நாட்டிலிருந்து போதைப் பொருள்களின் விற்பனையும் பாவனையும் முற்றாகவே அழிக்கும் செயற்பாடுகளில் அரச தலைவர் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். அதற்கென அயல் நாடுகளின் உதவியையும் அவர் நாடியுள்ளார். அந்த நாடுகளும் இதற்குத் தேவையான உதவிகளை வழங்குவதாக உறுதியளித்துள்ளன.

### அதிர்ச்சித் தகவல்

நாட்டின் மிகப் பெரிய பாதாள உலகத் தலைவனான மதுஷ் போதைப் பொருள் வர்த்தகத்திலும் கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்தான். பல குற்றச் செயல்களின் பின்னணியிலும் இவன் இந்துள்ளான். அரச தலைவரையும் வேறு முக்கியமாக அரசியல்வாதிகள் சிலரையும் கொலை செய்வதற்கு இவன் திட்டம் தீட்டியிருந்தமையும் தெரிய வந்துள்ளது. இவனுடன் அரசியல்வாதிகள் சிலர் தொடர்பு கொண்டிருந்தமை தற்போது தெரிய வந்துள்ளது. இதைவிட அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல்வாதிகள் சிலர் போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுவதாக அதிர்ச்சித் தகவல்களும் வெளியாகியுள்ளமை நாட்டின் பரிதாப நிலையை எடுத்துக் காட்டுகின்றது. இதில் உண்மை இருக்குமானால் இதைவிட மோசமான எதுவுமே நாட்டில் இருக்கப்போவதில்லை.

இந்த நிலையில்தான் போதைப்பொருள்களின் விற்பனையின் பின்னணியில் வடக்கு அரசியல் தரப்புக்கள் சிலவும், சில வர்த்தகர்களும் உள்ளதாக அதிர்ச்சித் தகவலொன்றை இராஜங்க அமைச்சரான ரஞ்சன் ராமநாயக்க வெளியிட்டுள்ளார். தமிழ்பேசும் அரசியல்வாதிகள் சிலரும் போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டுள்ளனர் என்று அவர் கூறியுள்ளமை மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

### வடக்கு ஊடாகக் கடத்தல்

கேரளாவில் இருந்து கடல் மார்க்கமாகக் கடத்தி வரப்படுகின்ற கஞ்சா என்னும் போதைப்பொருள் வடபகுதியூடாக நாட்டின் பிற இடங்களுக்கு எடுத்துச் செல்வதாகக் கூறப்பட்டது. இதை நிரூபிக்கும் வகையில் கஞ்சா கடத்திச் சென்று விற்பனையில் ஈடுபட்ட பலர் கைதுசெய்யப்பட்டனர். தற்போது வடபகுதியைச் சேர்ந்த அரசியல்வாதிகள் சிலரும் உயர்மட்ட வர்த்தகர்களும் போதைப்பொருள்களின் விற்பனையில் ஈடுபடுவதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இதை வெளியிட்டவர் ஒரு சாதார மனிதரல்ல. பொறுப்பு வாய்ந்த இராஜங்க அமைச்சரொருவரே வெளியிட்டுள்ளார்.

இதன் உண்மைத் தன்மை உடனடியாகக் கண்டறியப்பட வேண்டும். ஏனென்றால் வடபகுதியைச் சேர்ந்த சில பாடசாலை மாணவர்களும் போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுத்துவதாகத் தகவல் வெளியானபோது தென்னிலங்கையின் தீய சக்திகளே வடபகுதி மாணவர்களின் கல்வியைச் சீர்குலைப்பதற்காக அவர்களிடையே போதைப் பொருள்களை விநியோகிப்பதாகக் கூறப்பட்டது. இந்த நிலையில் புதிய தகவலொன்று வெளிவந்துள்ளது. இது இங்குள்ள உண்மை நிலைமையைத் திசைமாற்றுவதற்கான உத்தியாகவும் இருக்கக்கூடும். ஆகவே உண்மையைக் கண்டறிவது அவசியமானதாகும்.

### துரோகச் செயல்

எம்மவர்கள் எம்மவர்களையே சீரழிப்பதற்கு முயற்சிசெய்வது உண்மையாக இருக்குமானால் இதைவிடத் துரோகமாக காரியம் வேறெதுவும் இருக்கமுடியாது. இந்து சமுத்திரத்தின் முத்து. ஆசியாவின் சொர்க்கம் என்றெல்லாம் புகழ்ந்து பேசப்பட்டு வந்த இலங்கைத் திருநாடு இன்று தனது சிறப்புக்களை இழந்து நிற்பதைக்காண முடிகின்றது. போரும் அதனால் ஏற்பட்ட அழிவுகளும் இன்னமும் பாதிக்கப்பட்ட மக்களால் மறக்க முடியாத அளவுக்கு வடுக்களை ஏற்படுத்தி நிற்கின்றன. இவை அழியுமென்ற நம்பிக்கையும் அந்த மக்களிடம் அறவே காணப்படவில்லை.

அரசியல்வாதிகள் ஊழல் மற்றும் மோசடிகளில் ஈடுபடுகின்ற எந்த நாடும் மீட்சிபெற்றதாகச் சரித்திரமே கிடையாது.

இந்த நாடும் சகல துறைகளிலும் பின்னடைவைச் சந்தித்து வருவதற்கும் இதுவே பிரதான காரணமாகும். முன்னைய ஆட்சிக் காலத்தில் பெரும் தொகையான நிதிமோசடி செய்யப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகின. இதனால் நாட்டின் பொருளாதாரமே ஆட்டம் காணும் அளவுக்கு நிலைமை மோசமாக மாறிவிட்டதாகவும் கூறப்பட்டது. ஆனால் மோசடியில் ஈடுபட்டவர்கள் இதுவரையில் கைதாகவில்லை. மோசடி செய்யப்பட்ட நிதியும் மீளப் பெறப்படவில்லை. இதுதான் இந்த நாட்டின் தலைவிதியென்றால் அதை மாற்றுவதற்கு எவராலுமே முடியாது.

### அரசியல்வாதிகளும் தொடர்பு

தற்போது போதைப்பொருள்களிலும் அரசியல்வாதிகள் தடம்பதித்து விட்டனர். இவர்கள் மக்களைப் பற்றிய சிந்தனையே இல்லாதவர்கள். நாட்டைப் பற்றிய கவலையும் இவர்களிடம் கிடையாது. பணம் சம்பாதிப்பதை மட்டுமே இவர்கள் குறிக்கோளாகக் கொண்டவர்கள். இத்தகையவர்கள் தொடர்ந்தும் அரசியலில் ஈடுபடுவதை அனுமதிக்க வேண்டுமா? நாட்டின் தற்போதைய ஆட்சியாளர்கள் இதுதொடர்பாகத் தீர்க்கமாகச் சிந்திக்க வேண்டும். நாட்டின் அதிகாரம் அரசியல்வாதிகளின் கைகளுக்குச் சென்றுவிடுவதால் தவறானவர்கள் அரசியலில் நீடிப்பது நாட்டுக்குப் பெரும் பாதகமாகவே முடிந்துவிடும்.

### பாதுகாப்பை பலப்படுத்துக

டுபாயில் வைத்துக் கைது செய்யப்பட்ட மதுஷ் உயர்மட்ட அரசியல்வாதிகள் மற்றும் வர்த்தகர்களுடன் தொடர்புகளைப் பேணி வந்துள்ளமை விசாரணைகள் மூலமாகத் தெரியவந்துள்ளது. கொடிய குற்றவாளி ஒருவருடன் இவர்கள் தொடர்பு வைத்திருந்தமைக்கான காரணம் கண்டறியப்பட்டு உரிய தண்டனைகளும் வழங்கப்பட வேண்டும்.

போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்படுமென்ற அரச தலைவரின் அறிவிப்பு இதனுடன் தொடர்புடையவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தவே செய்யும். ஆனால் ஓரிருவருக்கு மட்டும் தூக்குத் தண்டனை விதிப்பதால் போதைப்பொருள் பாவனையை முற்றாக ஒழித்துவிட முடியாது. போதைப் பொருள்களுடன் தொடர்புடைய அனைவரும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

போதைப்பொருள் வர்த்தகம் பெரும் இலாபத்தை ஈட்டித் தருவதால் வறியநாடுகளில் மட்டுன்றி அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் இதனைக் காண முடிகின்றது. ஆனால் வறிய நாடுகளில் போதைப் பொருள்கள் தீய விளைவுகளை அதிகளவில் ஏற்படுத்தி வருகின்றன. இதற்கு பாதுகாப்புக் குறைபாடுகளே காரணமாகும். இதைநிவர்த்தி செய்வது அந்தந்த நாடுகளின் பிரதான கடமையாகும்.

# கொழும்பின் மெத்தனப் போக்கால் அபிவிருத்திகள் தொங்கு நிலையில்

## ஒப்பந்தக் காரர்களுக்காகக் காத்திருக்கும் 15 பாடசாலைகளின் கட்டுமானங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 7

வடக்கு மாகாணத்தில் 15 பாடசாலைகளில் அமைக்கத் திட்ட மிடப்பட்டிருந்த கட்டுமானப் பணிகள் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளன என்று பாடசாலை நிர்வாகங்கள் குற்றஞ்சாட்டுகின்றன.

2017ஆம் ஆண்டு வடக்கு மாகாணத்தில் உள்ள பல பாடசாலைகளில் கட்டுமானப் பணிகள் நடைபெற்றிருந்தன. 2018ஆம் ஆண்டில் 27 பாடசாலைகளில் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்தது. அதற்காக இந்திய அரசு 250 மில்லியன் ஒதுக்கியிருந்தது. இந்தக் கட்டுமானப் பணிகள் கொழும்பு அரசின் ஊடாக முன்னெடுக்கப்பட்டன.


அதற்கான ஒப்பந்தகாரர்கள் கொழும்பு அரசால் தீர்மானிக்கப்பட்டுக் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இவை 2018ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நிறைவடைந்திருக்க வேண்டும். ஆனால் 12 பாடசாலைகளின் கட்டடங்கள் மட்டுமே நிறைவு செய்யப்பட்டிருந்தன. எஞ்சிய 15 கட்டடங்களின் கட்டுமானப் பணிகள் இடைநடுவே கைவிடப்பட்டுள்ளன.

"ஒப்பந்தகாரர்கள் தாங்களாக வந்து கட்டுமானப் பணிகளை மேற்கொண்டனர். இடைநடுவில் கைவிட்டுச் சென்றுள்ளனர். அதற்கான காரணங்கள் எவையும் எமக்குத் தெரியப்படுத்தப்படவில்லை" என்று அந்தப் பாடசாலைகளின் நிர்வாகங்கள் கூறுகின்றன.

"பாடசாலை கட்டுமானப் பணிகளுக்கான நிதி இந்திய அரசால் ஒதுக்கப்பட்ட போதும், அந்த நிதி கொழும்பு அரசிடமே விடுவிக்கப்பட்டது. அவர்களே ஒப்பந்தகாரர்களைத் தெரிவு செய்தனர். ஒப்பந்தகாரர்கள் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் பெய்த மழையுடன் கட்டுமானப் பணிகளை நிறுத்தியிருந்தனர். இன்றுவரை அவர்கள் மீளப் பணிகளை ஆரம்பிக்கவில்லை. இரு தடவைகள் கடிதம் அனுப்பப்பட்டது. எந்தப் பதிலும் கிடைக்கவில்லை" என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரிகள் கூறுகின்றனர்.

"கொழும்பு அரசின் ஊடாக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதால் ஒப்பந்தக்காரர்கள் மீது எம்மால் நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது. எந்த அடிப்படையில் அவர்களுக்குப் பணம் வழங்கப்பட்டது என்பதும் தெரியவரவில்லை. ஓர் ஒப்பந்தகாரர் நாட்டைவிட்டு வெளிநாடு சென்றுள்ளார் என்று அறியமுடிகின்றது. இப்போது அந்தப் பணிகளை மீள் ஒப்பந்தம் செய்து வேறுபட்ட ஒப்பந்த நிறுவனங்கள் மூலம் நிறைவு செய்யத் திட்டமிடப்படுகின்றது." என்றும் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

நிர்வாகக் குறைபாடுகள் காரணமாக வடக்கு மாகாணத்தில் 15 பாடசாலைகளின் அபிவிருத்திப் பணிகள் இடைநடுவே கைவிடப்பட்டுள்ளமை தொடர்பில் பலரும் விசனம் தெரிவித்துள்ளதுடன், அந்தக் குறைபாடுகளை நீக்கி கட்டுமானப் பணிகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-105)




## மாணவர்கள் 35 பேருக்கு உதவிகள்

அச்சுவேலி, மார்ச் 7

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த 35 மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்கு பிளாஸ்ரிக் தளபாடங்கள் ,புத்தகப்பைகள் அருட்தந்தை சறத்ஜீவன் நிதியத்தால் அண்மையில் வழங்கப்பட்டன.

கொக்கிளாய், உருத்திரபுரம், கிளிநொச்சி, முரசுமோட்டை, மல்லாவி, மாயவனூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கே 2 லட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான உதவிகள் வழங்கப்பட்டன. இதேவேளை அருட்தந்தை சறத்ஜீவன் நிதியத்தால் 95 மாணவர்களுக்கு மாதாந்த கல்வி உதவியாக ரூபா ஆயிரம் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-11)

## பொது கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ்ப்பாணம் கொக்குவில் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் அண்மையில் இடம்பெற்றன.

தலைவர் ஓய்வுபெற்ற கணக்காளர் இ.செல்வராஜா, செயலர் ஓய்வுபெற்ற மருத்துவமனை அலுவலகர் மு.ஈழத்தமிழ்மணி, பொருளாளர் ஓய்வுபெற்ற பல்கலைக்கழக அலுவலர் சி.ஜெயக்குமார், உபதலைவர் த.இ.விஜயேந்திரன், உபசெயலர் ஓய்வுபெற்ற ப.நோ. கூ. சங்க அலுவலர் இ.அழகராஜா ஆகியோருடன் நிர்வாக சபை உறுப்பினர்களாக ஓய்வுபெற்ற நூலகர் திருமதி ச.பேரானந்தன், பல்கலைக்கழக மாணவி பிரிந்தா ரதீஸ்வரன், ந.சிவானந்தராஜா, ச.லோகேந்திரன், சி.மகேந்திரன், ரீ.புலந்திரன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

நிகழ்வில் நல்லூர் பிரதேச சபை சனசமூக நிலைய அபிவிருத்தி அலுவலர் திருமதி கேமலா சிவசோதி, ஜே/123 பிரிவு கிராம அலுவலர் திருமதி பி.காண்டீபன், கொக்குவில் கிழக்கு ஜே/ 123 பிரிவு சமுர்த்தி அலுவலர் ம.குணசேகரம், நல்லூர் பிரதேச சபை உபதவிசாளர் இ.ஜெயகரன், நல்லூர் பிரதேச சபை வட்டார உறுப்பினர் செல்வி பிரிந்தாகுலேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)

## விதிகளை மீறிய சாரதிகளுக்கு ரூ.68,000 தண்டம்



சாவகச்சேரி, மார்ச் 7

போக்குவரத்து விதிமுறைகளை மீறிய வாகன சாரதிகளுக்கு சாவகச்சேரி நீதிமன்று 86 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

கடந்த 2, 3, 4ஆம் திகதிகளில் அவர்கள் பொலிஸாரிடம் சிக்கினர். நேற்றுமுன்தினம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. குற்றத்தை ஏற்றுக் கொண்டனர். 68 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. இது தவிர, அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய இருவருக்கு தலா 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (து-9)


## அனலைதீவில் வெற்றியளித்த மிளகாய்ச் செய்கை

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ்ப்பாணம் அனலைதீவில் முதற் தடவையாக விதை பெறுவதற்கான மேற்கொள்ளப்பட்ட மிளகாய் செய்கை வெற்றியளித்துள்ளது என்று மாவட்டச் செயலக விவசாய பிரிவு தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

நல்ல இன மிளகாய் உற்பத்தியை அதிகரிப்பதற்காக அனலைதீவு பகுதியில் முதற்தடவையாக மிளகாய் செய்கை மேற்கொள்ளப்பட்டது. அந்த பிரதேசம் தனியே ஒரு தீவாக இருப்பதால் நோய் தொற்று குறைவாகவும், வேறு இனங்கள் பயிர்களில் கலக்காத தன்மையும் காணப்படுகிறது. மிளகாய் உற்பத்தியை விட மிளகாய் விதைகளுக்கு அதிக கேள்வி உள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு கால் ஏக்கருக்கு 200 கிராம் என்ற அளவில் மிளகாய் விதைகள், தூவல் நீர்ப்பாசனம், பாது காப்பு வலைகள் என்பன 19 பேருக்கு வழங்கப்பட்டன. முதல் விளைச்சல் மிக சிறப்பாக உள்ளது. முதற்தடவையாக தீவில் இந்த செய்கை மேற்கொள்ளப்பட்டு வெற்றியளித்துள்ளது. இம்முறை சுமார் 2 ஆயிரம் கிலோ கிராம் மிளகாய் விதை உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த விதைகளை விவசாய திணைக்களம் கொள்வனவு செய்யவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (க-7)





## கற்றல் வள நிலைய கட்டடத் திறப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ்ப்பாணம் அத்தியார் இந்துக் கல்லூரியில் அமைக்கப்பட்ட ஆரம்ப கற்றல்வள நிலையக் கட்டடத் திறப்பு நிகழ்வு அண்மையில் பாடசாலை அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை .சோ.சேனாதிராசா கலந்து கொண்டு கட்டடத்தை திறந்துவைத்தார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணக் கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் த.பாலராஜ், கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ந.சிவனேசன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)

# பாதையைச் சீரமைத்துத் தரக் கோரிக்கை

வடமராட்சி, மார்ச் 7

வடமராட்சி கிழக்கு ஆழியவளை கொடுக்கிளாயிலிருந்து இயக்கச்சி ஊடாகச் செல்லும் அபாய வெளியேற்ற பாதையைச் சீரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கொடுக்கிளாய் விளை யாட்டுக் கழக அபிவிருத்தி அமைப்பால் புலம்பெயர்ந்த மக்களின் நிதியுதவியுடன் குறித்த வெளியேற்றப் பாதை கடந்த 2016 ஆம் அண்டு அமைக்கப்பட்டு யாழ்ப்பாண மாவட்ட செயலர் நா.வேதநாயகனால் திறந்து வைக்கப்பட்டது.



கடந்த பருவ மழையால் அரிப்புக்கள் மற்றும் உடைப்புக்கள் ஏற்பட்டு குறித்த பாதையூடாக வாகனங்கள் எதுவும் பயணிக்க முடியாதுள்ளது.

எனவே கிரவல் மற்றும் களி மண்ணால் அமைக்கப்பட்ட குறித்த கொடுக்கிளாய் இயக்கச்சிப் பாதையைச் சீரமைத்துத் தருமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் பொது மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். (ஐ-160)

# குப்பை கொட்டுவோரைப் பிடிக்க வலி. கிழக்கில் இரகசியக் கமரா

## சில நாள்களில் நடைமுறைக்கு வரும்

கோப்பாய், மார்ச் 7

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் குப்பை கொட்டுவது தொடர்பில் இனங்காணப்பட்ட சில பகுதிகளில் இரகசியக் கமரா பொருத்தப்படவுள்ளது என்று அந்தச் சபையின் தவிசாளர் தி. நிரோஸ் தெரிவித்தார்.



வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட அக்கரைப் பகுதியின் இரு மருங்கிலும் குப்பைகள் கொட்டப்படுகின்றன என்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. அந்தக் குப்பைகளால் அந்தப் பகுதி மாசுபடுவதுடன். சுற்றுச் சூழலுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றி தவிசாளரிடம் கேட்டபோது:

வலி.கிழக்குப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் கழிவகற்றல் நடவடிக்கை முறையாக மேற்கொள்ளப்படுகின்றன. சிலர் உந்துருளி மற்றும் வாகனங்களில் வந்து ஆள்களற்ற நேரங்களில் வீதிகளில் குப்பைகளை எறிந்துவிட்டுச் செல்கின்றனர்.

அதைப்பார்த்துப் பலரும் அந்த இடத்தில் குப்பைகளைப் போட்டுவிட்டுச் செல்கின்றனர். சபையின் கடந்த 28ஆம் திகதிய அமர்வில் இது தொடர்பில் பேசப்பட்டு குப்பை கொட்டுவோர் மீது சட்டநடவடிக்கை எடுப்பதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.



அதன்படி வைபை தொழில்நுட்பத்துடன் கூடிய இரகசியக் கமாராக்களைக் கொள்வனவு செய்து அதிகமான குப்பைகள் கொட்டப்படுகின்றன என்று இனங்காணப்பட்ட இராச வீதி, அக்கரை, கைதடிமானிப்பாய்இணைப்பு வீதி போன்ற இடங்களில் கமரா பொருத்தப்படவுள்ளது. அந்தக் கமரா கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. விரைவில் அவற்றைப் பொருத்தி குப்பைகளைக் கொட்டுவோர் அவதானிக்கப்பட்டுச் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்றார். யாழ்ப்பாணக் குடாநாட்டில் கழிவகற்றல் முகாமைத்துவம் என்பது பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. மாநகரசபை உட்பட உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் வருகின்ற பல பகுதிகள் குப்பை மேடுகள் போல் காட்சிதருகின்றன.

குப்பைகளுடன் குப்பையாக மனித மலக் கழிவு வைக்கப்பட்ட சம்பவமும் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றிருக்கிறது. எனவே சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிராகப் பாரபட்சமின்றி உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (து-21,26)

# பிரச்சினைகளை தீர்க்க ஐவர் கொண்ட குழு அமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச்.7

யாழ்ப்பாணம் திருநெல்வேலி சந்தை வியாபாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதற்கென வியாபாரிகளை உள்ளடக்கிய ஐவர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபையினருக்கும் திருநெல்வேலி சந்தை வியாபாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று பிரதேச சபை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் சபையின் தவிசாளர் தியாகமூர்த்தி கருத்து தெரிவிக்கையில்:

வியாபாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் யாவும் படிப்படியாக நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. வியாபாரிகள் எதிகொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொள்ள ஐவர் கொண்ட குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

அதைவிட சந்தையில் நிலவும் குறைபாடுகளை கண்டறிவதற்கான சபை உறுப்பினர்களைக் கொண்ட குழுவும் இந்தக் குழுவினருடன் தொடர்பை ஏற்படுத்தி நிலமைகளுக்கு உரிய தீர்வைப் பெற்றுக் கொடுப்பார்கள்.

சந்தைக் கட்டட மேடைகளில் வியாபாரம் செய்யும் வியாபாரிகள் சபையின் அனுமதி இன்றி நிலங்களை வாடகைக்கோ அல்லது குத்தகைக்கோ வேறு எவருக்கும் கொடுக்க முடியாது.

சந்தை வளாகத்தில் உள்ள சபைக்குச் சொந்தமாக வியாபார வர்த்தக நிலையங்களும் கூட இதற்கு உரித்தானவர்கள் சபையின் அனுமதி பெற்றே வேறு எவருக்கும் வாடகைக்கோ குத்தகைக்கோ விட முடியும் - என்றார். (ஜ-17)

# கொடியேற்றம்

வவுனியா,மார்ச் 7

வவுனியா கோவில்குளம் அருள்மிகு சிறி அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் ஆலயத்தின் பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை மதியம் 12 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 17 நாள்கள் காலை, மாலை திருவிழா இடம்பெறும். எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும் என்று ஆலய அறங்காவலர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)



தரம் ஐந்து மாணவர்களுக்கான இலவச செயலமர்வும் வினாவிடைத் தொகுப்பு வழங்கல் நிகழ்வும் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சக்திதரன் தலைமையில் இடம்பெற்றன. (ஐ)

# ஆக்கப்பொருள் கண்காட்சி

தெல்லிப்பழை, மார்ச் 7

வலிகாமம் வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இளம் பெண்களின் சுயதொழில் முயற்சிகளை மேம்படுத்த வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஆக்கப்பொருள் கண்காட்சி நடைபெற்றுள் ளது.

தெல்லிப்பழை பிரதேச கிராம அபிவிருத்தி அலகினரால் கடந்த வருடம் நடத்தப்பட்ட மனைப் பொருளியல் டிப்ளோமா பயிற்சி நெறியை நிறைவு செய்த இளம் பெண்களால் உருவாக்கப்பட்ட ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தலும் சான்றிதழ்கள் வழங்கலும் கடந்த வெள்ளிக்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றன.

பிரதேச செயலர் ச.சிவசிறி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு விருந்தினராக மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலர் ந.பஞ்சலிங்கம் கலந்து கொண்டார். (க-9)



# திக்கம் வடிசாலைக்குப் புதிய கட்டடத்தை அமைக்குமாறு கோரிக்கை விடப்பட்டது

## பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் ந.இராசேந்திரம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7

திக்கம் வடிசாலைக்கு புதிய கட்டடத்தை அமைத்து அதனை மீள் இயக்குவதற்கான ஏற்பாடுகளை எடுக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சின் செயலரிடம் அவசர கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் ந.இராசேந்திரம் தெரிவித்தார்.

நீண்டகாலமாக பராமரிப்போ தொழில்பாடோ இன்றி அழிவடையும் நிலையில் உள்ள திக்கம் வடிசாலை தொடர்பாகக் கேட்டபோதே மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

திக்கம் வடிசாலையில் பணியாற்றி இன்று ஊதியம் இன்றிக்காத்திருக்கும் பணியாளர்கள் தொடர்பாகவும் பல பில்லியன் ரூபா பெறுமதியிலான தொழிற்சாலை அழிவடைதல் தொடர்பில் எமது கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டது.

இதனால் உடனடியாக அதனைப் பார்வையிட்டு அதற்கு தேவையான கட்டட வசதி முதல் இயந்திரப் பொறிமுறை வரையில் செலவு மதிப்பீட்டுடன் அமைச்சின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளோம்.

அதேநேரம் அத்தனை புதிய இயந்திரம், கட்டட வசதிகள், வாகன வசதிகளை ஏற்படுத்த குறைந்த பட்சம் ஓர் ஆண்டு போதாத நிலமையே ஏற்படும். அதனால் தற்போதைய தொழிற்சாலையை சீரமைக்கும் சமயம் மாற்று ஏற்பாடு ஒன்றினையும் முன் வைத்துள்ளோம். அதாவது தற்போது வரணியில் இயங்கும் தொழிற்சாலையை ஒத்த அமைப்பு ஒன்றினை உருவாக்குவதற்கு சுமார் 50 மில்லியன் போதுமானது.

அதனை இரு மாதங்களில் உருவாக்க முடியும் என்ற சாத் தியப்பாட்டு அறிக்கையும் உண்டு.

இதன் காரணத்தினால் உடனடியாக பானைவடி ஒன்றினை ஆரம்பித்து இரு மாதங்களில் தொழிற்சாலையை இயக்க வைத்து தொழிற்சாலையை அழிய விடாது பாதுகாப்பதன் மூலம் பழைய நிலையில் அதே தொழிற்சாலையை சீரமைக்கும் பணியினையும் மேற்கொள்ள முடியும். இதற்கு அதிக நிதிச் செலவு ஏற்படுவதனால் அமைச்சின் செயலரின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளோம்.

இவ்வாறு அமைச்சின் செயலரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்ட விவரத்தினை நேரில் எடுத்துச் சென்று அடுத்த கட்டமாக விரைவு படுத்தி அதனை ஆரம்பிப்பதற்கு ஏற்ற பணிகளும் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன - என்றார். (ஜ-105)

# சாவ. மட்டுவிலில் வாள்களுடன் ரௌடிகள் பெரும் அட்டகாசம்!

## பொலிஸார் கண்டுகொள்ளவில்லை மக்கள் ஒருவரை மடக்கிக் 'கவனிப்பு'

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, மட்டுவில் பகுதியில் நேற்று முன்தினம் இரவு வாள்களுடன் சென்ற இருபதுக்கு மேற்பட்டவர்கள் அங்கு பெரும் அட்டகாசத்தில் ஈடுபட்டனர். வீட்டின் கதவுகளைக் கொத்தி, சத்தமிட்டு மிரட்டியுள்ளனர். வாள்வெட்டுக் குழுவினரைக் கண்டு குரல் கொடுத்தவர்களுடைய வீட்டு வேலிகளையும் வெட்டிச் சரித்துள்ளனர்.

மட்டுவில் கிழக்கு வின்சன் வீதிப் பகுதியில் இரவு 11.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வங்கியொன்றில் பணியாளர் ஒருவருடைய வீட்டை இலக்கு வைத்து வாள்கள், கோடரிகளுடன் வந்த 20 மேற்பட்டவர்கள் அந்த வீட்டின் கதவைக் கொத்தி நாசம் செய்தனர். அந்தச் சத்தத்தைக் கேட்டு அயல் வீட்டார் குரலெழுப்பியபோது அவர்களுடைய வீடுகளுக்குச் சென்று வீட்டின் வேலிகளை வெட்டிச் சரித்துள்ளனர். பின்னர் அங்கிருந்து நகர்ந்து சந்தியில் நிலை கொண்டனர். அந்த வீதியால் பயணித்த இளைஞன் ஒருவருடைய முகத்தில் தாக்கியுள்ளனர். சம்பவம் தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் 119 என்ற பொலிஸ் அவசர எண்ணுக்கு அழைப்பை ஏற்படுத்தினார்கள். ஆனால் பதில் கிடைக்கவில்லை. அதையடுத்து நுணாவில் பொலிஸ் நிலையத்தைத் தொடர்பு கொண்டுள்ளனர். ஆனால் பொலிஸ் நிலையத்துக்கு வந்து முறைப்பாடு வழங்கினால் தாம் அந்த இடத்துக்கு வருகின்றோம் என்று பொலிஸார் கூறியுள்ளனர்.

வாள், கோடரிகளுடன் 20 பேர் சந்தியில் நிலைகொண்டு அட்டகாசத்தில் ஈடுபடும் போது பொலிஸ் நிலையம் எப்படி செல்ல முடியும் என்றும் பொலிஸாருடைய பாதுகாப்பைக் கோரும் போது அவர்கள் அதைத் தட்டிக் கழிக்கும் செயற்பாடுகளிலேயே ஈடுபடுகின்றனர் என்றும் மக்கள் குற்றஞ்சாட்டினர்.

**மக்கள் துணிவு**

பொலிஸார் நீண்ட நேரமாக அங்கு வராததாலும், வாள்களுடன் வந்தவர்கள் அங்கிருந்து நகராததாலும் ஆத்திரமடைந்த மக்கள் ஒன்று சேர்ந்து அந்தக் கும்பலை விரட்டியுள்ளனர். ஒன்றுசேர்ந்த மக்களைக் கண்டு தெறித்தோடிய கும்பலில் இருந்து ஒருவர் மட்டும் மக்களிடம் சிக்கினார். அவரை மக்கள் நன்கு கவனித்தனர். கடுமையாகத் தாக்கப்பட்டு அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

**இருவர் கைது**

அதிகாலை 12.20 மணியளவில் யாழ்ப்பாணக் குற்றத் தடுப்புப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து சம்பவ இடத்துக்கு அவர்கள் சென்றனர். விசாரணைகளை மேற்கொண்டனர். வாள், கோடரிகளுடன் வந்த 20 பேரில் தப்பி ஓடிய இருவரைக் கைது செய்தனர். அவர்கள் சாவகச்சேரிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். சம்பவத்துடன் தொடர்புடைய ஏனையவர்களும் கைது செய்யப்படுவார்கள் என்று தெரிவித்தனர்.

**மக்கள் குற்றச்சாட்டு**

ஊருக்குள் நுழைந்து சிலர் அட்டகாசம் செய்கின்றனர் என்று பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தால் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகின்றனர் இல்லை. ஆனால் குற்றங்கள் நடைபெற்றால் பொலிஸாருக்கு அறிவியுங்கள் என்று விளம்பரம் செய்கின்றனர்.

உயிருக்குச் சேதம் ஏற்படுவதற்கு முன் பொலிஸார் பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டுமே தவிர உயிர் போனதன் பின்னர் வந்து விசாரணை செய்வதில் ஏது பலன் என்று மக்கள் விசனம் தெரிவித்தனர். (எ-21,26)

## திருநெல்வேலி சந்தைக்கு வலுக்கூடிய மின்விளக்குகள்

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ்ப்பாணம் திருநெல்வேலி சந்தைக்கு வலுக்கூடிய மின் விளக்குகள் பொருத்தி வைக்கப்படும் என்று நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் த.தியாகமூர்த்தி தெரிவித்தார்.

சந்தையில் உள்புறப் பகுதியில் வலு குறைந்த மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளதால் போதிய வெளிச்சம் இன்றி வியாபாரிகள் சிரமப்படுகின்றனர். மழை காலம் மற்றும் காலநிலை வேறுபாடுகளினால் சந்தை இருள் சூழ்ந்தும் காணப்படுகின்றது. அதையடுத்து சந்தை உட்புறத்துக்கு வலுக்கூடிய மின் விளக்குகள் பொருத்தி வைக்கப்படும்.

அதேசமயம் சந்தையின் வெளிச் சுற்றாடலுக்கும் வலுக்கூடிய மின் விளக்கு களைப் பொருத்தி வைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது -என்றார். (ஐ-17)

## முரண்பாட்டை ஏற்படுத்தாதீர்

### விக்னேஸ்வரன் கோரிக்கை



யாழ்ப்பாணம், மார்ச் 7.

எவரது தூண்டுதல்களுக்கும் ஆளாகி எந்த ஒரு முரண்பாட்டு நடவடிக்கைகளிலும் ஈடுபடாதீர்கள் என்று தமிழ் மக்கள் கூட்டணியின் செயலர் நாயகம் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் கேதீச்சரக் கோவில் வீதியில் அலங்கார வளைவு உடைக்கப்பட்டு 3 நாள்களின் பின்னர் நேற்று அவர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்து கத்தோலிக்க முரண்பாடுகளை ஏற்படுத்தும் தீய சக்திகளின் செயற்பாடுகளுக்கு இடமளிக்கவேண்டாம்.

மன்னார் திருக்கேதீச்சர அலங்கார வளைவு உடைப்பைக் காரணமாகவைத்து அங்கு தமிழர் என்ற அடையாளத்துடன் அன்னியோன்னியமாக வாழ்ந்துவரும் இந்துக்களுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் விதத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் விஷமத்தனமான செயற்பாடுகள் குறித்து மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும்.

பொறுத்தார் பூமி ஆள்வார்கள். இது இந்துக்களுக்கும் கத்தோலிக்க மக்களுக்கும் பொருந்தும் என்பதை மறவாதீர்கள் - என்றுள்ளது. (த)

## யாழில் டெங்கு தொற்று குறைவு


யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ்ப்பாண மாநகர பிரதேசத்தில் டெங்கின் தாக்கம் தற்போது குறைவடைந்து செல்கின்றது என்று சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதத்தில் டெங்கீன் தாக்கத்தால் 214 பேர் பாதிக்கப்பட்டனர். பெப்ரவரி மாதத்தில் 83 பேராக அது குறைவடைந்துள்ளது.

தற்போதைய கால நிலை வேறுபாட்டினால் அதன் தாக்கம் குறைவடைந்து செல்கின்றது. அதேசமயம் இந்த மாதத்தில் (மார்ச்) கடந்த ஐந்து நாள்களில் மட்டும் நான்கு பேர் வரையில் இந்த டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

டெங்கின் தாக்கம் கூடுதலாக இருக்கும் பிரதேசங்களில் அதற்கான தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. நாவாந்துறை, வண்ணார்பண்ணை மற்றும் யாழ்ப்பாண நகர்ப் பிரதேசங்களில் இந்த டெங்கின் தாக்கம் காணப்படும் இடங்களில் நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன என்றும் சுகாதாரப் பிரிவினர் தெரிவிக்கின்றனர். (ஐ-17)





## மானிப்பாய், சுன்னாகத்தில் ஓரிரவில் வீடுகள் மீது தாக்கு

### இருவர் கைது செய்யப்பட்டு விசாரணை

சுன்னாகம், மார்ச் 7

மானிப்பாய், சுன்னாகம் பகுதிகளில் நேற்றுமுன்தினம் இரவு வாள்வெட்டுக் குழுவினர் அட்டகாசங்களில் ஈடுபட்டுள்ளனர். அந்தப் பகுதிகளில் உள்ள இரண்டு வீடுகளுக்குள் புகுந்த கும்பல் வீடுகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டி, உந்துருளிகள் என்பற்றை தாக்கி எரித்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பாக வீட்டின் உரிமையாளர்கள் அந்தப் பகுதிப் பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாடுகளுக்கு அமைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

**சுன்னாகம்**

சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் இரும்புக் கம்பி, கொட்டன்களுடன் வீடு ஒன்றுக்குள் புகுந்த கும்பல் அந்த வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டி, உந்துருளி, ஈருருளி என்பவற்றைத் தாக்கி சேதப்படுத்தியுள்ளது. வீட்டில் இருந்த மூதாட்டி ஒருவரையும் தாக்கி காயப்படுத்திவிட்டுத் தப்பித்துச் சென்றுள்ளது. ஈருருளிகளில் முகங்களை மறைத்தவாறு வந்த மூன்று பேர் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக வீட்டின் உரிமையாளர் சுன்னாகம் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். விசாரணைகளை அடுத்து சந்தேகத்தில் ஒருவரைக் கைது செய்தனர். வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் குறித்த நபர் கைது செய்யப்பட்டார். அதே இடத்தைச் சேர்ந்தவரே அவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

**மானிப்பாய்**

மானிப்பாய்ப் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் புகுந்த ஆறு பேர் கொண்ட குழுவினர் அந்த வீட்டிலும் தாக்குதல் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளனர். வீட்டின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உந்துருளி ஒன்றை அடித்துச் சேதப்படுத்தி அதை எரிக்கவும் முனைந்துள்ளனர்.

அத்தோடு வீட்டின் தொலைக்காட்சிப் பெட்டி, யன்னல்கள் என்பவற்றையும் சேதமாக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். அந்தக் குழுவினர் வாள், கத்தி, கம்பிகளுடன் வந்தனர் என்று மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகத்தில் ஒருவரைக் கைது செய்தனர். விசாரணைகளின் பின்னர் அவர் நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவார் என்று தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளும் இடம்பெறுகின்றன என்றும் தெரிவித்தனர். (எ-21,26)

# தடுப்பணைகளை அகற்றி விவசாயத்துக்கு வழி செய்க

## வவுனியா மாவட்ட விவசாயிகள் கோரிக்கை

வவுனியா, மார்ச் 7

வவுனியா மாவட்டத்தில் போர்க் காலத்தில் அமைக்கப்பட்ட 22 கிலோ மீற்றர் மண் தடுப்பணைகளை அகற்றுவதுக்கு மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுக்காத நிலையில், இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் கவனம் கொள்ள வேண்டும் என்று மாவட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் போரின்போது படையினரால் அமைக்கப்பட்ட மண் தடுப்பு அணைகளை அகற்றி, விவசாயத்துக்கு உதவ வேண்டும் என்று மாவட்டச் செயலகத்திடம் கோரிக்கை விடுத்து 30 மாதங்கள் கடந்துவிட்டன. ஆனால் எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த மண் அணையால் பெருமளவு விவசாய நிலங்கள் இன்றுவரை பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன. அந்தப் பகுதியில் உள்ள தடுப்பணைகளை அகற்றி, மக்கள் பயன்பாட்டுக்கு ஏற்ப சீராக்கித் தர வேண்டும் என்று 2016 ஆம் ஆண்டு முதல் மாவட்டச்செயலரிடம் கோரிக்கை விடுத்திருந்தோம்.

விவசாயிகளின் கோரிக்கையை மாவட்டச்செயலர் பாதுகாப்பு அமைச்சின் செயலரின் கவனத்துக்கு கொண்டு சென்றிருந்தார். வவுனியாவில் உள்ள 22 கிலோமீற்றர் தடுப்பணைகளை அகற்றி மக்கள் பயன்பாட்டுக்கு ஏற்ப சீராக்குவதற்கான செலவு மதிப்பீடு ஒன்றைத் தயாரித்து வழங்க வேண்டும் என்று அப்போது கோரப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் உள்ள 22 கிலோ மீற்றர் தடுப்பணைகளை அகற்ற 15 மில்லியன் ரூபா தேவையென 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மாவட்டச் செயலகத்தால் மதிப்பிடப்பட்டு செலவு மதிப்பீடுகள் அனுப்பப்பட்டன.

செலவு விவரத்தைத் தயாரித்து பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பி உள்ளோம் எனக் கூறி மாவட்டச் செயலக அதிகாரிகள் காலம் கடத்துகின்றனர்.

படையினரோ மக்களின் காணிகளை மக்களிடம் ஒப்படைப்பதற்கே பணத்தை கோரும் நிலையில் எமது நிலங்களில்தம்மால்அமைக்கப்பட்ட தடுப்பணைகளை அகற்றுவதற்கானபணத்தை வழங்க காலம் கடத்துகின்றனர்.

உள்ளூர் உற்பத்தி, தேசிய உற்பத்தி வாரம் எனப் பல திட்டங்களை கடைப்பிடியுங்கள் என்று கூறும் அரசு, இது தொடர்பிலும் கவனம் செலுத்தி விவசாயிகளான எமது வாழ்வாதாரம் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும். தேசிய நிகழ்வுகள் என்னும் பெயரில் செலவு செய்யும் ஓர் ஆண்டு பணத்தை ஒதுக்கி விவசாய நிலங்களின் ஊடாக செல்லும் தடுப்பணைகளை அகற்றி எமது வாழ்வாதாரத்துக்கு ஆளுநர் உதவ வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-105)



## முல்லைத்தீவு மாவட்டத்தில் அபிவிருத்தி வேலைத்திட்டம்

முல்லைத்தீவு.மார்ச் 7

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் பிரதேச செயலகங்களின் கீழ் கிராமிய துரித அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கான கடிதங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகனால் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 2 ஆம் திகதி மல்லாவி பிரதேசத்தில் வீடு ஒன்றில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 15 மில்லியன் ரூபா பெறுமதியிலான வேலைத்திட்டங்களுக்கான கடிதங்கள் பொது அமைப்புக்கள், பாடசாலைகள், மருத்துவமனை, ஆலய நிர்வாகம், விளையாட்டுக்கழகங்கள் ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கருத்து தெரிவித்த நாடாளுடன்ற உறுப்பினர் சி.சிவமோகன் நாடாளுமன்றத் தேர்தலில் எனக்கு பெரியளவில் ஆதரவு கிடைக்கவில்லை. மாகாண சபைத் தேர்தலில் பெரியவாக்குவங்கிஎனக்கு இருந்தது. நாடாளுமன்றத் தேர்தல் வரும் போது எனக்கொரு கட்சி ஆசனத்தை தந்தது. பின்னர் என்னை தோற்கடிப்பதற்காகவே அந்த கட்சிவேலை செய்தது.

இன்று இருக்கும் நிலமையில் தமிழர்களுக்கான உண்மையான அரசியல் யாப்பு மாற்றம் நாங்கள் எதிர்பார்க்கும்சுயாட்சிக்குரிய அரசியல் யாப்பினை இந்த அரசு எமக்கு தரும் என்று ஒரு துளியும் நம்பிக்கை இல்லை.

இராணுவப் பலத்துடன் தமிழ் மக்கள் போராட்டத்தினை செய்யும் போது. வெளிநாடுகள் எங்களை நோக்கி இலையான்கள் மாதிரி வந்தார்கள். உதவி செய்வதாக வந்தார்கள். கடைசியில் எங்கள் கால்களை இழுத்து விழுத்தி விட்டு சென்றதுதான் வரலாறு.

ஆனால் இன்று பாகிஸ்தானில் ஒரு விமான கப்டன் விழுந்து சிக்கிவிட்டான் என்பதற்காக குரல்கொடுத்த இவர்கள் எங்கள் மக்கள் விமானத்தால் அடித்து கொல்லப்படும்போது ஒரு நாடும் எட்டிப்பார்க்கவில்லை.

வெலிஓயாவில் 32 ஆயிரம் சிங்கள குடும்பங்களைக் குடியேற்ற வேண்டும் என்று சிங்கள தேசம் தீர்மானம் எடுத்தது. 1982 ஆம் ஆண்டு தொடங்கி இன்று 3 ஆயிரம் குடும்பங்கள் வரையில் கொண்டுவந்து குடியேற்றியுள்ளார்கள். எனவே வெலிஓயா குடியேற்றத் திட்டம் முல்லைத்தீவு மாவட்டத்தில் படுதோல்வி அடைந்துள்ளது.

எங்களுக்கு அந்த எல்லைகளில் காணி உள்ளது. ஆனால் எங்கள் மக்கள் அங்கு செல்வதற்கு தயாராக இல்லை. அங்கு இருப்பவர்களின் பிள்ளைகள் எல்லாம் வெளிநாட்டிலும் வேறு மாவட்டங்களிலும் இருக்கின்றனர்.

எல்லைப் பிரதேசங்களில் குடியேறுவதற்கு தமிழ் மக்கள் தயாராக வந்தால் இனத்தைத் தக்கவைக்கலாம் நிலத்தைத்தக்க வைக்கலாம். - என்றார். (க-ரி3)

## மரத்தில் இருந்து வீழ்ந்து சாவு

முல்லைத்தீவு மாவட்டம் வெலிஓயாப் பகுதியில் மாமரம் வெட்டிய வேளை மரத்தில் இருந்து வீழ்ந்த குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக சாவடைந்துள்ளார். இந்தச் சம்பவம் 3 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. நிக்கவெள வெலிஓயாவினை சேர்ந்த 46 அகவையுடைய கெட்டியாராச்சிகே சண்ணுரசிறி என்பவர் மாமரத்தில் இருந்து தவறி வீழ்ந்து உயிரிழந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரது உடலம் உடல் கூற்று பரிசோதனைகளின் பின்னர் நேற்று முன்தினம் மாவட்ட மருத்துவமனையில் இருந்து உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (க-ரி3)

## இனம் தெரியாதவர்களால் தாக்கப்பட்ட இளைஞன் காயம்

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு நகர்பகுதியில் நேற்றுமுன்தினம் இனம் தெரியாதவர்களால் தாக்கப்பட்டுதலையில் படுகாயமடைந்த இளைஞன் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுமேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவத்தில் கோம்பாவில் புதுக்குடியிருப்பைச்சேர்ந்த 22 அகவையுடைய ச.துசிதரன் என்ற இளைஞன் தலையில்காயமடைந்துள்ளார். (க-ரி3)



## சதொச நிலையத்துக்கு ரிஷாட் திடீர் பயணம்

வவுனியா,மார்ச் 7

வவுனியா நெளுக்குளம் சந்தியிலுள்ள சதொச விற்பனை நிலையத்துக்கு நேற்றுக் காலை கைத்தொழில் வாணிபத்துறை அமைச்சர் ரிஷாட் பதியூதீன் திடீர் கண்காணிப்பு பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

கைத்தொழில் வாணிபத்துறை மத்திய அமைச்சர் சதொச விற்பனை நிலையத்துக்கு முன்னறிவித்தலின்றி சென்று அங்குள்ள விற்பனைப் பொருள்களின் தரம், பாவனையாளர்களுக்கு சரியான முறையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறித்து அவதானம் செலுத்தியுள்ளதுடன், சதொசா விற்பனை நிலையத்தின் தூய்மை தொடர்பாகவும் அவதானம் செலுத்தியுள்ளார். (க)

## மன். தீவுப்பிட்டிக் கிராமத்தில் அடிப்படை வசதிகள் இல்லை

### கிராம மக்கள் குற்றச்சாட்டு

மன்னார், மார்ச் 7

மன்னார், நானாட்டான் தீவுப்பிட்டிக் கிராம மக்கள், தம்மை அங்கிருந்து வெளியேற்றத் திட்டமிடப்படுகின்றது. தமக்கு அடிப்படை வசதிகள் எவையும் ஏற்படுத்தித் தரப்படுவதில்லை என்று குற்றஞ்சாட்டியுள்ளனர். தமக்கு அரச தரப்பில் இருந்து தொடர்ச்சியான இடையூறுகள் ஏற்படுத்தப்படுகின்றன என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கிராமத்தில் 25 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்கின்றோம் என்றும், அண்மைக் காலமாகத் தாம் பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளோம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். காணி மற்றும் அடிப்படை வசதிகள் எதுவும் தமக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாக அமைச்சர் ரிசாத் பதியுதீனிடம் அந்தக் கிராம மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர். அதையடுத்து அமைச்சரின் பிரத்தியேகச் செயலர் றிப்கான் பதியுதீன் தலைமையிலான குழு அங்கு சென்று நிலமைகளை ஆராய்ந்துள்ளது. அங்குள்ள மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்த அந்தக் குழு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இது தொடர்பாகத் தெரியப்படுத்தி உரிய தீர்வு பெற்றுத் தரப்படும் என்று கூறியது என மக்கள் தெரிவித்தனர். (க-56)

## பொதுக் கூட்டம்

வவுனியா சண்முகபுரம் மகளிர் சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் கடந்த 2 ஆம் திகதி சண்முகபுரம் பொது நோக்கு மண்டபத்தில் சங்கத்தின் பொருளாளரும் வவுனியா மாவட்ட சி.க.கூ சங்க சமாசத்தின் இயக்குநர்சபை உறுப்பினருமாகிய திருமதி சி. கமலகுமாரி தலைமையில் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட சி.க.கூ சங்க சமாசத்தின் தலைவர் அ.ச. பாரதி ஆனந்தம், உப தலைவர் அ. அன்ரனி குறூஸ், செயலர் நி. சுரேஸ் மற்றும் இயக்குநர்சபை உறுப்பினர்கள், பணியாளர்கள்,கங்கங்குளம் பிரிவின் கிராமஅலுவலர், கிராம அபிவிருத்திஅலுவலர், செட்டிகுளம் பிரதேச சபை உறுப்பினர், சண்முகபுரம் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர், முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோரும் சமூகமளித்திருந்தனர். (க-222)





## ஒளிரும் வாழ்வு நிறுவனத்தினூடாக உதவிகள்

ஒளிரும் வாழ்வு நிறுவனத்தினர் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனித நேயப்பணியின் மூலம் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான நிதி உதவியை வழங்கியுள்ளனர்.

ஜேர்மனில் வசிக்கும் பவானி சுந்தரம் முதற்கட்டமாக ரூபா 50 ஆயிரத்தை அன்பளிப்புச் செய்து நிர்வாக உறுப்பினரான கி.நித்தியானந்தன் என்பவரது தொழில் முயற்சிக்காக குழாய் கிணறு அமைக்க வழங்கி உள்ளார்.

கனடா வைச் சேர்ந்த சபாரட்ணம் பாலச்சந்திரன், செஞ்சோலை வளாகத்தில் இருக்கும் குடும்பங்களுடைய குடிநீர் தேவைக்காக நீர் இறைக்கும் இயந்திரங்கள் மற்றும் அதற்கான உபகரணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக ரூபா ஐம்பதாயிரத்தை ஒளிரும் வாழ்வு நிறுவனத்தினூடாக வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (க-222)

# இலங்கையைச் சுற்றும் பிரதாபன் வவுனியாவில்

வவுனியா,மார்ச் 7

கடந்த மாதம் 10 ஆம் திகதி வவுனியா இளைஞன் தர்மலிங்கம் பிரதாபன் மூன்று கோரிக்கையை முன்வைத்து இலங்கையைச் சுற்றி 2 ஆயிரத்து125 கிலோ மீற்றர் ஈருருளிப் பயணத்தை மேற்கொண்டு இன்று வவுனியா வரவுள்ளார்.

26 நாள்கள் பயணம் மேற்கொண்ட பிரதாபனின் சாதனைப் பயணம் முடிவுபெற்று, வவுனியாவுக்கு வருகை தரவுள்ளார். இதனை முன்னிட்டு இன்று மாலை 5 மணியளவில் வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத்தில் வரவேற்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

மலையகத்திலுள்ள உறவுகளுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவேண்டும், மலையக மக்களுக்கு நாளாந்த சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்படவேண்டும், வவுனியா பல்கலைக்கழகம் வன்னிப் பல்கலைக் கழகமாக மாற்றப்படவேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து இலங்கையைச் சுற்றி ஈருருளிப் பயணத்தை மேற்கொண்ட தர்மலிங்கம் பிரதாபன் 6 மாவட்டங்களுக்குச் சென்று நேற்று மன்னாரை வந்தடைந்துள்ளார். (க)

# காணிக்கு போராடும் மக்களை நேரில் சென்று சந்தித்த ரிசாத்

முசலி பிரதேசச் செயலர் பிரிவுக்குட்பட்ட சிலாவத்துறையில் மக்களின் காணிகளில் நிலை கொண்டுள்ள கடற்படையினரை அகற்றி தமது காணிகளை வழங்கக் கோரி பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ச்சியாக 15 ஆவது நாளாக தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வரும் நிலையில், அமைச்சர் றிஸாட் பதியுதீன் நேற்று அங்கு சென்று மக்களை சந்தித்து உரையாடியுள்ளார்.

நாட்டில் இடம் பெற்ற போர் காரணமாக முசலி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சிலாவத்துறை கிராமத்தில் இருந்து 1990 ஆம் ஆண்டு 250 குடும்பங்கள் இடம் பெயர்ந்து கற்பிட்டி உள்ளடங்கலாக வேறு இடங்களுக்குச் சென்றனர்.

இடம் பெயர்ந்தவர்கள் 625 குடும்பங்களாக தமது சொந்த இடமான சிலாவத்துறைக்கு மீண்டும் 2009 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வந்தனர். முசலியில் பல்வேறு இடங்களில் குடியேற்றப்பட்டனர். எனினும் 218 குடும்பங்களுக்குச் சொந்தமான 35 ஏக்கர் நிலப்பரப்பை கடற்படையினர் சுவீகரித்துள்ளதோடு, கடற்படை முகாமும் அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் காணியை விடுவித்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்த போதும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை.

பாதிக்கப்பட்ட மக்கள் கடந்த மாதம் 20 ஆம் திகதி சிலாவத்துறை கடற்படை முகாமுக்கு முன்னர் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர். பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக அமைச்சரிடம் கோரிக்கை அடங்கிய மனுவும் கையளிக்கப்பட்டது. அமைச்சருடன் மன்னார், முசலி பிரதேச சபைகளின் தவிசாளர்கள், அமைச்சரின் இணைப்பாளர் என்.எம்.முனவ்பர், மாகாண சபை முன்னாள் உறுப்பினர் அலிக்கான் ஸரீப் உள்ளடங்கலாகப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (க-56)

# வீட்டுத்திட்டத் திட்டம் வழங்குமாறு கோரி வவுனியாவில் போராட்டம்

வவுனியா இராசேந்திரங்குளம் விக்ஸ்காடு பகுதி மக்கள் தமக்கு வீட்டுதிட்டம் வழங்குமாறு கோரி வவுனியா பிரதேச செயலகத்துக்கு முன்பாக போராட்டம் ஒன்றை நேற்றுக் காலை 10 மணியளவில் முன்னெடுத்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த போராட்டக்காரர்கள்; கடந்த 10 வருடங்களாக எமக்கு வீட்டுதிட்டம் வழங்கப்படவில்லை தற்காலிக கொட்டகைகளிலேயே வசித்துவருகின்றோம். 47 குடும்பங்கள் வசித்துவருகின்ற எமது கிராமத்தில் பலருக்கு வீட்டுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டபோதும் அது வழங்கப்படவில்லை. காணிகளுக்கு ஆவணங்கள் இன்மையால் வீட்டுத்திட்டம் வழங்க முடியாது என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

பல போராட்டங்களுக்கு பின்னரே தற்போது நாம் குடியிருக்கும் காணிகள் எமக்காக வழங்கப்பட்டன. ஆனால் அதற்கான ஆவணங்கள் தரப்படவில்லை. எமக்கு அண்மைய கிராமங்களில் வீட்டுத்திட்டம் வழங்கப்படுகின்றது. எனவே நீண்டகாலமாக வீடு இல்லாமல் வசிக்கும் எமக்கு வீடுகளை வழங்க வேண்டும் இல்லாவிடில் போராட்டம் தொடரும் எனத் தெரிவித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் நிரந்தரவீடும் அடிப்படை வசதியும் வேண்டும், காணிக்கானபோராட்டம் முடிந்தது இது வீட்டுக்கானபோராட்டம், போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களைப் பிரதேசசெயலர் கா.உதயராஜா சந்தித்து கலந்துரையாடியதுடன் முதற்கட்டமாக 28 பேருக்கு வீடுகளை வழங்குவதற்கான கடிதம் ஒன்றினையும் அவர்களிடம் கையளித்தார். இதனையடுத்து போராட்டம் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டது. (ஜ-110)

# ஐரோப்பிய தரத்துக்கு ஈடாக முல்லையில் வகுப்பறைகள்

## சமூகத்தை பக்குதாரர் ஆக்கி உருவாக்கப்பட்டுச் சாதனை



முல்லைத்தீவு, மார்ச் 7

ஐரோப்பிய, அமெரிக்க மாணவர்களுக்குக் கிடைக்கக் கூடிய கல்வி தொழில்நுட்ப அறிவுகள் அனைத்தும் சிமாட் வகுப்பறைகள் மூலம் முல்லைத்தீவில் உள்ள உடையார்கட்டு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் முல்லைத்தீவு, சிறிசுப்பிரமணிய வித்தியாசாலை மாணவர்களுக்கும் கிடைத்துள்ளன.

இலங்கை மாணவர்களின் கல்வித் தரத்தை அதிகரிக்கும் பொருட்டு திறன் வகுப்பறைகளை ஆரம்பிக்கும் திட்டத்தை அரசு கொண்டுவந்துள்ளது. வடக்கு மாகாணத்திலும் தற்போது சில பாடசாலைகளில் திறன் வகுப்பறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆரம்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. போரால் முற்று முழுதாகப் பாதிக்கப்பட்டு உயிர்த்துக் கொண்டிருக்கும் முல்லைத்தீவு மாவட்டதில் உள்ள சில பாடசாலைகளிலும் அரசு அந்தத் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. ஆனால் உடையார்கட்டு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, மற்றும், முல்லைத்தீவு, சிறிசுப்பி ரமணிய வித்தியாசாலை ஆகிய பாடசாலைகளில் அமைக்கப்பட்ட சிமாட் வகுப்பறை வசதிகள் அரச ஒத்துழைப்பு இன்றி தனியே சமூகத்தை பங்குதாரர் ஆக்கி உருவாக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த வகுப்பறைகளால் அங்கு கல்வி கற்கும் மாணவர்கள் கல்வியில் அதீத வளர்ச்சியைக் கண்டுவருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் சிறிசுப்பிரமணிய வித்தியாசாலை அதிபர் தெரிவித்ததாவதுப;

உடையார்கட்டு அ.த.க பாடசாலையில் 11 திறன் வகுப்பறைகளை உருவாக்கி கற்றல் கற்பித்தலை மேற்கொண்டேன். இந்தப் பாடசாலையே இலங்கையில் முழுவதும் திறன் வகுப்பறைகளைக் கொண்ட முதல் பாடசாலையாகும். ஒரு வகுப்பறை முழுவதும் ரப் கணினி கொண்ட வகுப்பறையாகும். 20 கணினிகளைக் கொண்ட கணினி ஆய்வுகூடம் ஒன்று அமைக்கப்பட்டு ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு கணினி மொழி கற்பிக்கப்படுகின்றது. இதுவே இலங்கையின் ஆரம்பப் பாடசாலை வரலாற்றில் கணினி மொழி கற்பிப்பதற்கென ஆய்வுகூடம் கொண்ட பாடசாலையாகும்.

இந்தப் பாடசாலைகளில் 2012ஆம் ஆண்டு கல்வி அடைவு மட்டம் 48 வீதமாக காணப்பட்டது. இது 2018ஆம் ஆண்டு 82 வீதமாக அதிகரித்தது. தற்போது உள்ள பாடசாலையில் 7 திறன் வகுப்பறைகளை உருவாக்கி கற்பித்து வருகின்றோம். உண்மையில் ஐரோப்பிய அல்லது அமெரிக்க குழந்தைகளுக்கு கிடைக்கும் கல்வித்தொழில்நுட்பத்தை எமது பிள்ளைகளுக்குப் பெற்றுக்கொடுத்துள்ளோம். இவ்வாறான வகுப்பறைகள் உருவாகிய பின் மாணவர்களின் வரவு வீதம் அதிகரித்துள்ளது. இடைவிலகல் அற்றுப் போயுள்ளது. சீர் தண்டனை முற்றாக இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. பிள்ளைநேயச் சூழல் உருவாகியுள்ளது. ஆங்கிலச் சொற் களஞ்சியம் பிள்ளைகளிடையே பெருகியுள்ளது. வகுப்பறைகள் கவிநிலை யடைந்துள்ளன. மாணவர்களின் அடைவு மட்டம் அதிகரித்துள்ளது. - என்றார். (எ-21)




# எமது முதலீடு மனிதமாகட்டும்

'ஒருவர் உலகம் முழுவதையும் தமதாக்கிக் கொண்டாலும் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன?'

வாழ்வு என்பது இறைவனின் மாபெரும் கொடை. எப்படியும் வாழ்ந்து விட்டுப் போ என்று இறைவன் இவ்வாழ்வைத் தரவில்லை. இப்படித்தான் வாழ வேண்டும் என்ற வழிமுறை வரையறைகளைத் தனது வாழ்வாலும், வார்த்தையாலும் வகுத்துத் தந்துள்ளார் இயேசு. இதை வாழ முற்படும்போது பல சவால்கள் தோல்விகள், நெருக்கடிகளைச் சந்தித்தாலும் தன்னலம் துறந்து நாள்தோறும் தன் சிலுவைகளைத் தூக்கிக் கொண்டு தன்வழி தொடர அழைப்புவிடுகின்றார். ஒன்றைப் பெற இன்னொன்றை இழக்கவேண்டியதே யதார்த்தமாகும்.

பரந்துபட்ட பிறர் நலத்துக்காக சுயநலவாழ்வை இழக்கத் தயாராகும் போது கிடைக்கும் பிறர் அன்பும் புரிதலும் மகிழ்வும் உலகம் முழுவதையும் நமதாக்கும். அழியாத செல்வமாக மாற்றமடையும். அதுவே இறைவனுக்கு ஏற்புடையதும் நிலை வாழ்வை ஈட்டித்தரும் வழியுமாகும்.

இந்தத் தவக்காலத்தில் ஒரு சிலவற்றையாவது இழக்க விட்டுக்கொடுக்க முன்வருவோம். பட்டம், பதவி, மண், பொன், பெண் ஆசைகள் வரட்டுக் கௌரவம், தற்புகழ் போன்ற மனிதத்துக்கு எதிரான வழிகளை இழந்துவிட்டு, அன்பு, பண்பு, புரிந்துணர்வு, மன்னிப்பு, ஈகை, நீதி நேர்மை, சமதர்மம் என்பவற்றைச் சுமந்து வாழ்ந்து மனிதத்துக்கு உயிர்கொடுக்கும் மக்களாகப் பயணிப்போம்.

எஸ்.யேசுதாஸ்,
கொழும்புத்துறை.

# கட்டடத் தொகுதி திறப்பு

முல்லைத்தீவு, மார்ச் 7

கல்வி அமைச்சு பண்பு அறிவு மற்றும் வலுமிக்க மனிதநேய மாணவர் சந்ததியை உருவாக்கும் நோக்கில் முல்லைத்தீவு மாவட்டத்தின் கற்சிலைமடு பண்டாரவன்னியன் மகாவித்தியாலயத்தில் கல்வி அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்ட கனிஷ்ட விஞ்ஞான ஆய்வுகூடமும் கற்றல் வள நிலையமும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசாவால் திறந்து வைக்கப்பட்டுள்ளது, 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி மாலை கற்சிலைமடு பண்டாரவன்னியன் மகாவித்தியாலயத்தில் பாடசாலை முதல்வர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வன்னி மாவுட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா, துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், துணுக்காய் தல்வி வலய அலுவலர்கள், கிராம அலுவலர்கள் பெற்றோர் நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

(க-246)



## இரணைமடு வான் திறந்த விவகாரம்

# திணைக்கள விசாரணை அறிக்கையில் “சளாப்பல்”

யாழ்ப்பாணம், மார்ச் 7

இரணைமடு நீர் வெளியேற்றத்தின்போது கைக்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டனவா என்பதைக் கண்டறிவதற்காக அமைக்கப்பட்ட குழு கையளித்துள்ள அறிக்கை உறுதியான முன்மொழிவுகள் இன்றிக் கையளிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் ஏற்பட்ட கன மழையால் கிளிநொச்சி மாவட்டத்தின் பெரும் குளமான இரணைமடுக் குளத்தின் நீர் மட்டம்சடுதியாகஉயர்ந்தது. அதையடுத்து அணைக்கட்டின் வான்கதவுகள் திறக்கப்பட்டன. அப்போது பின்பற்றப்பட்ட நடைமுறைகள் தொடர்பாகப் பல்வேறு விமர்சனங்கள் வெளியாகியிருந்தன. அதையடுத்து அந்த விடயங்களை ஆராய்ந்து அறிக்கையிடுவதற்காக வடக்கு மாகாண ஆளுநர் குழு ஒன்றை நியமித்திருந்தார். அதேநேரம் நடந்த சம்பவங்கள் தொடர்பாகத் திணைக்கள ரீதியில் கண்டறிய வேண்டும் என்று வடக்கு மாகாண விவசாய, நீர்ப்பாசன, கால்நடை அமைச்சின் செயலர் ப.தெய்வேந்திரத்துக்கு, பிரதம செயலர் ப.பத்திநாதன் பணித்திருந்தார்.

அமைச்சின் செயலர் தலைமையிலான குழு, மாவட்டச் செயலகம், நீர்ப்பாசனத் திணைக்களம், மாவட்ட விவசாயிகள் ஆகியோரிடம் விசாரணை நடத்தியிருந்தது.

அதிக மழை வீழ்ச்சி ஏற்படும்போது திணைக்களம் மற்றும் பொறியியலாளர்கள் மேற்கொள்ள வேண்டிய முன் ஆயத்தப் பணிகள், பொறியியலாளர்களின் நிலமை, விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய அறிவுறுத்தல்கள், அந்தப் பணிகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படுகின்றனவா?, அவற்றை மேற்கொள்ள உரிய கால அவகாசம் கிடைத்ததா? என்பன போன்ற பல விடயங்களை இந்தக் குழு ஆராய்ந்தது.

இந்தக் குழு தற்போது அறிக்கையிட்டுள்ள நிலையில், எந்தத் திணைக்களம் மீதோ, அல்லது எந்தப் பதவி நிலை அலுவலர் மீதோ நேரடியாகத் தமது கவனத்தைக் கொண்டிருக்கவில்லை. அதிக விடயங்களில் துறைசார் வல்லுநர்கள் மற்றும் தொழில் நுட்ப அறிக்கையையேப் பெற வேண்டும் என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் முன்னெடுக்கப்பட்ட விடயங்கள் சரி என்றோ தவறு என்றோ அந்த அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்று தெரியவருகின்றது.

இந்த விடயங்கள் தொடர்பில் வடக்கு மாகாண விவசாய , நீர்ப்பாசன , கால்நடை அமைச்சின் செயலரும், விசாரணைக் குழுவின் தலைவருமான ப.தெய்வேந்திரத்திடம் கேட்டபோது, "அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பாக மேல் நடவடிக்கை எடுக்க முன்னரோ அல்லது ஆளுநர் நியமித்துள்ள குழுவின் அறிக்கை வருவதற்கு முன்னரோ கருத்துத் தெரிவிப்பது உகந்த விடயம் அல்ல. ஆளுநர் நியமித்த குழுவின் அறிக்கையுடனே துறைசார் தொழில் நுட்ப அறிக்கை கிடைக்கும்" என்று கூறினார். (எ-105)

## மண்ணித்தலையில் சிவலிங்கம் அமைப்பு

வவுனியா, மார்ச் 7

பூநகரி மண்ணித்தலை ஆலயத்தை பாதுகாக்கும் வகையில், சைவ மகாசபையினால் மகா சிவலிங்கம் ஒன்று அமைக்கப்பட்டு சிவராத்திரி தினமான கடந்த திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்டது. மிக பழமையான மண்ணித்தலை சிவன் ஆலயம் நீண்டகாலமாக சீரமைப்புச் செய்யப்படாமல் பராமரிப்பின்றி காணப்படுகின்றது.

இந்த நிலையில் அந்த ஆலய சூழலை ஆய்வு செய்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல்துறை, அது சோழர் காலத்தில் கட்டப்பட்ட சிவன் ஆலயம் என்பதை உறுதிப்படுத்தியுள்ளதுடன், அந்த ஆலயம் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதி எனவும் உறுதிப்படுத்தியது.

இதனையடுத்து அந்த ஆலயத்தை பாதுகாக்கும் வகையிலேயே சிவலிங்கம் அமைக்கப்பட்டது. (ஐ-222)



## குடி தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் திறந்துவைப்பு

வவுனியா,மார்ச்.7

வவுனியா பூந்தோட்டம் கல்வியியல் கல்லூரியில் குவைத் நாட்டு நிதிஉதவியுடன் அமைக்கப்பட்ட குடி தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி எஸ்:சுவர்ணராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக அல் கிம்மா முஸ்லிம் சேவைகள் அமைப்பின் செயலர் எம்.ஏ.ஏ. நூறுல்லா கலந்துகொண்டு சுத்திகரிப்பு நிலையத்தை திறந்து வைத்தார்.

வவுனியா கல்வியியல் கல்லூரியில் இலங்கையின் பல மாவட்டங்களிலுள்ள மாணவர்கள் கல்வி கற்றுவரும் நிலையில் கல்லூரியின் பீடாதிபதியின் வேண்டுகோளுக்கு அமைவாக நான்கு லட்சம் ரூபா செலவில் குறித்த குடிதண்ணீர் திட்டம் அல்கிம்மா முஸ்லிம் சேவைகள் அமைப்பினரால் அன்பளிப்புச் செய்யப்பட்டது. இதுபோன்று பெண்கள் பிரிவுக்கும் புதிதாக குடி தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்று விரைவில் பொருத்தப்படுமென அல்கிம்மா முஸ்லிம் சேவைகள் அமைப்பின் செயலர் எம்.ஏ.ஏ. நூறுல்லா தெரிவித்தார்.

நிகழ்வில் வடமாகாணத்துக்கான அல் கிம்மா முஸ்லிம் சேவைகள் அமைப்பின் இணைப்பாளர் எம்.எஸ். ஏம். ஜாபிர், கல்லூரியின் உப பீடாதிபதிகள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ-110)

# மக்களின் நிலங்களை ஆக்கிரமிக்கும் அரசு

## சட்ட உதவி ஆணைக்குழு சிறப்பு ஆய்வு



மன்னார், மார்ச் 7

மன்னார் மாவட்டத்தில் மக்களின் வாழ்விடம் மற்றும் வாழ்வாதார நிலங்களை வனவளத் திணைக்களம் , வன உயிரிகள் திணைக்களம் ஆக்கிரமித்துள்ளமை தொடர்பில் சட்ட உதவி ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் இன்று சிறப்பு ஆய்வு இடம்பெறவுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்ற போர் காரணமாக 1983 ஆம் ஆண்டு முதல் மக்கள் இடம்பெயர்ந்த நிலையில், தற்போது அந்தப் பகுதியில் வளர்ந்த மரங்களின் அடிப்படையில் அப்பகுதி தமக்குரியது என வன உயிரிகள் திணைக்களம் உரிமை கோருகின்றது. இதேபோன்று மேலும் பல இடங்களையும் உரிமை கோருகின்றது.

மாவட்டச் செயலகத்தின் கணக்கின்படி இவ்வாறு இரு திணைக்களங்களும் ஆக்கிரமித்துள்ள நிலையில், பல குடும்பங்கள் தமக்கான வாழ்விடத்தை அமைக்க முடியாது தவிப்பதோடு, மேலும் பல ஆயிரம் குடும்பங்கள் வாழ்வாதார நெருக்கடியையும் சந்திக்கின்றனர்.

சட்ட உதவி ஆணைக்குழுவின் இணைப்பாளரான ஓய்வு பெற்ற அரச அதிபர் பந்மநாதன் தலைமையில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் சிறப்பு கலந்துரையாடல் இடம் பெறவுள்ளது.

கலந்துரையாடலில் மாவட்டச் செயலர் , வன வளத் திணைக்களம், வன உயிரிகள் திணைக்களம், கமநல சேவைத் திணைக்களம் உள்ளிட்ட பலதிணைக்களங்களின் மூத்த அலுவலர்களும் பணிப்பாளர்களும் கலந்துகொள்கின்றனர்.

இதேநேரம் மன்னார் மாவட்டத்தில் விவசாயிகளின் பயன்பாட்டுக்காக மொத்தம் 368 நடுத்தரக் குளங்கள் கமநல சேவைத் திணைக்களத்தின் கீழ் உள்ளபோதிலும், தற்போது 270 குளங்கள் மட்டுமே கமநல சேவைத் திணைக்களத்தினால் சீரமைத்து ஆளுகை செய்யப்படுகின்றது. எஞ்சிய 98 குளங்களும் காட்டின் நடுவே உள்ளதனால் அப்பகுதிகள் தமது பிரதேசம் எனத் தெரிவிக்கும் வனவளத் திணைக்களம் அங்கே காணப்படும் குளங்களை சீரமைக்கவோ அல்லது அப்பகுதிக்குகமநலசேவைத் திணைக்கள அதிகாரிகள் செல்லவோ தடைவிதிப்பதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (க-105)



## மன்னார் பகுதியில் கிளைமோர் மீட்பு

மன்னார்,மார்ச் 7

மன்னார் பெரியகடை பள்ளிவாசல் ஒழுங்கை ,மீன் சந்தைப் பகுதிக்கு செல்லும் பிரதான பாதைச் சந்தியில் இருந்து கிளைமோர் குண்டு மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை மன்னார் நகர சபை ஊழியர்களினால் துப்புரவுப்பணிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், குப்பைக்குள் இருந்த குண்டு 3 கிலோ கிராம் நிறை கொண்டது எனத் தெரிய வருகின்றது.

அதிகளவிலான பழைய இரும்புகள் கொள்வனவு செய்யும் கடைகள் காணப்படுகின்றமையால் பழைய இரும்புப் பொருள்களுடன் கலந்து கிளைமோரும் வந்திருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

வெடி பொருள் தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-56)

## தவக்கால வழிபாடுகள் நேற்று ஆரம்பம்

சாவகச்சேரி, மார்ச் 7

கத்தோலிக்க மக்களின் தவக்கால வழிபாடுகள் நேற்று திருநீற்றுப் புதன் வழிபாடுகளுடன் ஆரம்பமாகின.

40 நாள்கள் தவக்காலம் கடைப்பிடிக்கப்பட்டு பெரிய வியாழன், பெரிய வெள்ளி'உயிர்ப்பு ஞாயிறு கொண்டாட்டத்துடன் தவக்காலம் நிறைவுக்கு வரும். தவக்காலத்தில் பெரும்பாலான கத்தோலிக்கர்கள் உணவு ஒறுப்பைக் கடைப்பிடிப்பார்கள். சில கத்தோலிக்கர்கள் மாமிசத் தவிர்ப்பைக் கடைப்பிடிப்பார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ-9)



## நல்லிணக்க பயணம் செட்டிகுளத்தை வந்தடைந்தது

வவுனியா,மார்ச்.7



நாட்டுமக்கள் அனைவரும் இன, மத, பேதம் இன்றி ஒற்றுமையாக வாழவேண்டும்என்பதை வலியுறுத்தி மேற்கொள்ளப்பட்ட பயணம் நேற்று முன்தினம் செட்டிகுளத்தைச்சென்றடைந்தது.

மன்னார் மாவட்டம் வங்காலை பகுதியைச் சேர்ந்த அன்டன் கிருஷ்ணன் டயஸ் என்பவர் தினமும் 5 கிலோ மீற்றர் தூரம் அங்கபிரதட்சணம் மூலம் நல்லிணக்க பயணம் ஒன்றை 40 நாள்கள் மேற்கொண்டுள்ளார். இந்தப் பயணம் கடந்த மாதம் 5 ஆம் திகதி காலை, 'மன்னார் தள்ளாடியில் இருந்து ஆரம்பமானது. இந்நிலையில் இந்தப் பயணம் அனுராதபுரத்தில் நிறைவடையும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-110)

# அபிவிருத்திக்கு ஒரு ரூபா கடனை அடைக்க 3 ரூபா!

## கூறுகிறார் அமைச்சர் சம்பிக்க ரணவக்க

கொழும்பு, மார்ச் 7

அபிவிருத்திக்காக ஒரு ரூபாவை ஒதுக்கீடு செய்யும்போது கடன்தொகைக்காக 3ரூபாவை ஒதுக்கீடு செய்ய வேண்டிய நிலைக்குள் நிதி அமைச்சர் மங்கள சமரவீர இருக்கின்றார். அவ்வாறான இக்கட்டு நிலையில் இருந்து கொண்டுதான் அரசு நாட்டை அபிவிருத்திப் பாதையில் நகர்த்திக்கொண்டு செல்வதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இவ்வாறு அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பு மத்தியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவித்ததாவதுப:

தற்போது நாட்டில் தனிநபரின் வருமானத்தை நோக்கும்போது 1956ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 29மடங்கால் அதிகரித்துள்ளது. அந்தாண்டு காணப்பட்ட தனிநபருக்கான கடன்தொகையுடன் ஒப்பிடுகையில் அந்தத் தொகை 77 மடங்கால் அதிரித்துள்ளது. இவ்வாறான நிலைமையில், எமது நிதி அமைச்சருக்கு நெருக்கடிகள் எழுந்துள்ளன.

கடனை அடைக்க ஆக்குறைந்தது 2023ஆம் ஆண்டுவரையில் கால அவகாசம் தேவைப்படும். பன்னாடுகளிடமிருந்து வர்த்தக ரீதியிலான கடன்களை பெற்று ஒரு சதத்துக்கேனும் நன்மைகளைப் பெறமுடியாத, துறைமுகம், வானூர்தி நிலையம் என தமது விருப்பத்துக்கு ஏற்றதாக மகிந்த ராஜபக்ச அரசு செயற்பட்டது.

மகிந்த ராஜபக்சவின் காலத்தில் அம்பாந்தோட்டை மாவட்டத்துக்கு மாத்திரம் 672பில்லியன் செலவளிக்கப்பட்டுள்ளது. அப்படி பார்க்கின்றபோது அம்பாந்தோட்டையில் தனிநபர் ஒருவருக்காக 15இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. கொழும்பில் உள்ள தனிநபருக்காக 45ஆயிரம் ரூபா மட்டுமே செலவழிக்கப்பட்டுள்ளது. இப்படித்தான் நிலைமைகள் இருந்துள்ளன.

தற்போது எமது அரசு முன்னெடுக்கும் அபிவிருத்திச் செயற்பாடுகளில் நூற்றுக்கு பத்து வீதமானவை அரசின் நிதி.



நூற்றுக்கு 90வீதமான செலவீனங்களுக்காக நாம் தனியார் துறையின் சக்தியைப் பெற்றுள்ளோம். இவ்வாறு சிந்தித்துத் தான் நாட்டை முன்னோக்கி நகர்த்திக்கொண்டிருக்கின்றோம் என்றார். (த-61)

# மௌலவி ஆசிரிய வெற்றிடங்களை விரைவில் நிரப்ப நடவடிக்கை

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 7

இலங்கையிலுள்ள முஸ்லிம் பாடசாலைகளில் நிலவும் மௌலவி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான அரசிதழ் அறிவித்தல் நாளை வெளியிடப்படலாம். இதில் கணிசமான எவு மௌலவி ஆசிரியர்கள் பெற்றுக் கொள்ளப்படவுள்ளார்கள். இந்த மௌலவி ஆசிரியர் நியமனங்கள் வெகுவிரைவில் வழங்கவுள்ளோம் என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

இப்பாகமுவ தெலம்புகல்ல முஸ்லிம் வித்தியாலயத்தில் ஒரு கோடி ருபா செலவில் நவீனமுறையில் அமைக்கப்பட்ட ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான கட்டடத் தொகுதி திறப்பு நிகழ்வு அதிபர் எம். எஸ். எம். பௌமி தலைமையில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குருநாகல் மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பாடசாலைகளுக்கு பாகுபாடுகளின்றி மிகவும் கவர்ச்சிகரமான கட்டடங்கள் வழங்கப்பட்டுள்ளன. தேவையான அதிபர், ஆசிரியர்களை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை 200 பாடசாலைகள் ஒரே நாளில் திறந்து வைக்கப்பட்டன. இது குளியப்பிட்டிய தேர்தல் தொகுதியில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கதலைமையில் இடம்பெற்றது.

பண்டுவஸ்நுவர பகுதியில் இரண்டு முஸ்லிம் பாடசாலையில் சியப்பலாகஸ் கொட்டுவ, கொகுணுகொல்ல ஹிரியால தேர்தல் தொகுதியில் முஸ்லிம் பாடசாலைகளிலும் கட்டடங்கள் திறந்து வைத்துள்ளோம். இப்படிப் பார்க்கப் போனால் முஸ்லிம் பாடசாலைகளை கூடுதலாக கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளதாக நான் கருதுகின்றேன்.

தற்போது திறந்து வைத்துள்ள கட்டடத்தின் அழகிய தோற்றத்தைப் பாருங்கள். அது அழகான ஹோட்டல் போன்று காட்சியளிக்கின்றது அல்லவா? கடந்த காலங்களில் அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டிடங்களை விட இது புதிய மாற்றத்துடன் அமைக்கப்பட்டது. இலங்கை முழுவதும் இந்த அழகிய தோற்றமுடைய ஆயிரத்து 500 க்கும் மேல் பட்ட கட்டடங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன.

இதைவிடத் தனித்தனியாக என 40 ஆயிரம் மலசல கூடம் அமைத்துள்ளோம். நடமாடும் நூலகம் 3 அயிரத்தை வழங்கியிருக்கின்றோம். எந்த அரசியல் தலையீடுகளுமின்றி 4 ஆயிரம் அதிபர்களை நியமனம் செய்துள்ளோம். இன்னும் இருவாரங்களுக்கு முன்னர் ஆயிரத்து 900 அதிபர்களைப் பெற்றுக் கொள்வதற்காகப் பரீட்சைகள் நடத்தியிருக்கின்றோம். கல்வி நிர்வாக சேவையாளர்கள் என 2 ஆயிரம் பேர்களை இணைத்துக் கொண்டுள்ளோம். விளையாட்டுப் பயிற்சியாளர் என 3 ஆயிரத்து 850 பேர்களை இணைத்துக் கொள்ளவுள்ளோம். எதிர்காலத்தில் இந்த கல்வித் துறையில் எந்தவிதமான குறைபாடுகளும் இல்லாமல் சகல வசதிகளையும் நிறைவேற்றி வருகின்றோம் - என்றார். (ஐ)

# நிதி ஒதுக்கீட்டை எதிர்ப்பது தொடர்பில் பேசவேயில்லை

கொழும்பு, மார்ச் 7

வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு 113உறுப்பினர்களை பெற்று வாக்களிப்பதே சிக்கலாகியுள்ள நிலையில், அரச தலைவருக்கான ஒதுக்கீட்டை எவ்வாறு தோற்கடிக்க முடியும்?. அவ்வாறு எந்த முடிவும் கட்சி ரீதியாக எடுக்கப்படவில்லை என்று அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

மக்களுக்கான நிவாரணங்களை உள்ளடக்கிய வரவு செலவுத் திட்டமே தயாரிக்கப்பட்டுள்ளது. நாட்டின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு முன்மொழிவுகள் செய்யப்படவுள்ளன. நாம் அனைத்துத் துறைகளுக்கான ஒதுக்கீடுகளையும் வெற்றிபெறச் செய்வோம். அதில் எவ்விதமான மாற்றுக் கருத்துக்களும் இல்லை - என்றார். (த-31)

# ஐ.நா தீர்மானங்களை அரசு கண்டுகொள்ளவேயில்லை

## அடைக்கலநாதன் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, மார்ச். 7

ஐ.நா தீர்மானங்களை இலங்கை அரசு தட்டிக் கழிக்கும் போக்கே காணப்படுகின்றது. இதனால் இலங்கைக்குக் கால நீடிப்பு வழங்கப்படக் கூடாது என்று தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.



அவரின் வவுனியா அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் ஐ.நா சபையின் கூட்டத் தொடரில் கால அவகாசம் வழங்கக் கூடாது என வலியுறுத்தி வருகின்றோம். இதைத் தேர்தலுக்காக செய்கிறோம் என்று கஜேந்திரகுமார் கூறி வருகின்றார். எங்களைப் பொறுத்தவரை ஐ.நா தீர்மானம் நடைமுறைப்படுத்த வேண்டும் என வலியுறுத்தி வருகின்றோம். இன்றைய காலகட்டத்தில் தற்போது நடைபெறும் ஐ.நா சபையில் இலங்கை தொடர்பாகக் கருத்துக்கள் கூறுவது ஒரு எதிர்பார்ப்புடன அல்ல. ஐ.நா தீர்மானங்களில் பலவற்றை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தவில்லை. அதைத் தட்டிக் கழிக்கும் செயற்பாடே காணப்படுகின்றது. தாம் விசாரிப்பதாகவும், நடைமுறைப்படுத்துவதாக இணங்கிக் கொண்ட விடயங்களில் இருந்து விலகிக் கொள்ளப்போவதாகவும் அரசதலைவர் தற்போது கூறுகின்றார். ஆனால் இலங்கை அரசுக்குக் கால அவசாம் வழங்கக் கூடாது என்றே நாங்கள் வலியுறுத்துகின்றோம். இதில் எந்த உள் நோக்கமும் கிடையாது.

கால நீடிப்பு என்பது இந்த அரசு தொடர்ச்சியாக ஏமாற்றி வருகின்ற செயற்பாடாகவே மாறும். அழுத்தங்கள் தொடர்ச்சியாகக் கொடுக்கப்பட வேண்டும். கால நீடிப்பு வழங்கக் கூடாது என்று தமிழீழ விடுதலை இயக்கம் சகல தமிழ்க் கட்சிகளுடனும் பேசி வருகின்றது.

கால நீடிப்பு வழங்கக் கூடாது என்று சகல தமிழ்க் கட்சிகளும் ஒற்றுமையாக வலியுறுத்த வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. ஆனால் பொ.கஜேந்திர குமார், எமது அழைப்பை ஏற்காது கூட்டத்தில் கலந்து கொள்ளாது நாம் இதனைத் தேர்தலுக்காகச் செய்கிறோம் என்று கூறுகிறார். இது பொருத்தமற்றது - என்றார். (த-110)

# இனத்துக்குள் மத முரண்பாடு இனத்தை பலவீனப்படுத்தும்

## முன்னாள் எம்.பி. சந்திரகுமார் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 7

தமிழ் மக்கள் தம் இனத்துக்குள் மதங்களால் முரண்பட்டுக்கொள்வது தமிழினத்தை மேலும் பலவீனப்படுத்தும். மக்கள் அனைவரும் சமத்துவமாகவும், சமூக நீதியுடனும் நடந்துகொள்ள வேண்டும் என்று சமத்துவம், சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

மன்னார் கேதீச்சரம் கோவில் வீதியில் அலங்கார வளைவு உடைக்கப்பட்டமை தொடர்பில் அந்த அமைப்பின் அமைப்பாளரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ் மக்கள் இன்றும் தமது மதங்கள் உள்ளிட்ட அனைத்து விடயங்களுக்காகவும் உரிமையை பெறப் போராடி வருகின்றார்கள். இந்த நிலையில் தம் இனத்துக்குள் மதங்களாலும், சாதிகளாலும், பிரதேசவாதங்களாலும் பிளவுபட்டு முரண்பட்டுக்கொள்வது எம்மினத்தை மேலும் பலவீனப்படுத்தும்.

ஒரு சிலரின் நடவடிக்கைகளால் நாம் ஒட்டுமொத்த அந்த மதம்சார்ந்த அனைவரையும் குற்றம் சுமத்துவதோ, கருத்துக்களால் அவர்களின் மனங்களைக் காயப்படுத்துவதனையோ விடுத்து, சமத்துவத்துடன் வாழ வேண்டும் என்றுள்ளது. (த-214)

# புலிகள் வருகிறார்கள் என்று கூறுவதால் எதுவும் நடக்காது

## தலைமை அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 7

பழைய அரசியல் முறைமையில் மீண்டும் புலிகள் வருகின்றார்கள். நாடு பிளவடையப்போகின்றது என்று கூறிக் கொண்டிருப்பதால் எதுவும் நிகழப்போவ தில்லை. இந்த நாட்டை முன்னேற்றப்பாதையில் கொண்டு சென்று அபிவிருத்தியில் வெற்றிபெறச் செய்யும் சவாலை நாம் கையிலெடுத்துள்ளோம்.

இவ்வாறு தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்தார்.

பிங்கிரியவில் நேற்று முந்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிங்கிரியவில் வர்த்தக வலயங்கள் 15 உள்ளன என்பது பெருமையான விடயம். வியட்நாமில் உள்ள வர்த்தக வலயங்கள் எவ்வளவு என்று யாருக்காவது தெரியுமா? அங்கு 350 வரையிலான வர்த்தக வலயங்கள் உள்ளன. 2 லட்சத்து 25 ஆயிரம் ஏக்கரில் இவ்வாறு 350வர்த்தக வலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நான் இந்த நாட்டில் விவசாயத் தொழிலைச் சீர்குலைக்கின்றேன் என்று கூறுகின்றார்கள்.

2015இல் அரசைப் பொறுப்பெடுத்த பின்னர் அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவிடத்தில் வர்த்தக வலயங்களை ஆரம்பிப்போமா என்று கோரிய போது இருக்கின்ற வர்த்தக வலயங்களே வெறுமையாக உள்ளனவே என்று தான் பதிலளித்தார். மிரிஜ்ய விலவில் வர்த்தக வலயத்தை ஆரம்பித்தார்கள் அங்கு பத்து கைத்தொழில் நிறுவனங்கள் கூட இல்லை. 1977ஆம் ஆண்டு நாங்கள் வர்த்தக வலயங்களை ஆரம்பித்தபோது ஆடைதயாரிக்கும் கைத்தொழில் நிறுவனங்களே ஏற்படுத்தப்பட்டன. அப்போது நாங்கள் அதனை ரெயிலர் கடை என்றே கூறுவோம். நாங்கள் பெண்களின் உள்ளாடைகளை தைக்கின்றோம் என்றும் விமர்சித்தார்கள். உலகத்திலேயே பெண்களுக்கான சிறந்த உள்ளாடையை தயரித்தது இலங்கையே - என்றார். (த-61)

# மாலைதீவில் கைதுசெய்யப்பட்ட 25 இலங்கை மீனவர்கள் விடுதலை

## கடவுச் சீட்டு இல்லாததால் இலங்கை வரமுடியாத நிலை

யாழ்ப்பாணம், மார்ச் 7
மாலைதீவில் கடந்த வெள்ளிக்கிழமை கைதான 25 இலங்கை மீனவர்களில் 21 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர். அரச தலையீட்டின் கீழ் 21பேரும் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று கடற்றொழில் அமைச்சர் பீ.ஹெரிசன் தெரிவித்துள்ளார்.
விசாரணைகள் நிறைவடையும் வரை கைதுசெய்யப்பட்ட 4 படகோட்டிகளையும் மாலைதீவு அரசு தடுத்து வைத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
குறித்த நான்கு பேரையும் விடுவிப்பதற்கான பேச்சு மாலைதீவிலுள்ள இலங்கைத் தூதரகம் ஊடாக முன்னெடுக்கப்ப டுகிறது. விடுவிக்கப்பட்ட 21 பேரிடமும் கடவுச்சீட்டு இல்லை. அதனால் விரைவில் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொடுத்து வானூர்தி மூலமாக அவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (த-21)

# ஐ.நா. மனித உரிமை சபைக்கு நாம் ஒத்துழைக்கவேண்டும்

## சபை முதல்வர் கிரியெல்ல தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 7
ஐ.நா. மனித உரிமைகள் சபையுடன் முரண்படாமல், ஒத்துழைப்பு வழங்கும் வகையிலேயே இலங்கை செயற்பட வேண்டும் என்று சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

ஜெனிவா கூட்டத்தொடர் தொடர்பில் நாடாளுமன்றில் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன நேற்று முன்தினம் கேள்வி எழுப்பியிருந்தார். அதற்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மகிந்த ஆட்சியின்போது, இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.
இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விதிப்பதற்கு அனைத்துலக சமூகம் தயாராகி வந்தது.
இங்கு ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்காவிட்டால் பன்னாட்டுத் தடை நடைமுறைக்கு வந்திருக்கும்.
பன்னாட்டுப் பிடிக்குள் இருந்த நாட்டை எமது ஆட்சியின் கீழ்தான் மீட்டெடுத்து. மின்சாரக் கதிரை அச்சுறுத்தலிலிருந்த மகிந்தவையும் காப்பாற்றினோம். பன்னாடுகளுடன் முரண்படமுடியாது என்று தெரிவித்தார். (த)

# லண்டனில் கைதான இருவருக்கும் பிணை

கொழும்பு, மார்ச் 7
லண்டன் வானூர்தி நிலையத்தில் பயங்கரவாத எதிர்ப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இரண்டு இலங்கைத் தமிழர்களும் பிணையில்விடுவிக்கப்பட்டுள்ளனர்.
ஜெனீவாவுக்குச் செல்லவிருந்த நிலையில் குறித்த இலங்கையர்கள் ஹீத்ரோ வானூர்தி நிலையத்தில் கைது செய்யப்பட்டிருந்தனர். 36 வயதான வாகீசன் தங்கவேல்என்றஇலங்கைத் தமிழர் உள்ளிட்ட இருவரே கைதுசெய்யப்பட்டனர்என்று தெரிவீக்கப்படுகின்றது.
கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து விடுதலைப் புலிகளின் இலட்சினை பொறிக்கப்பட்ட கொடி ஒன்றைப் பொலிஸார் பறிமுதல் செய்திருந்தனர். சில மணித்தியாலங்கள் விசாரணை நடத்தப்பட்டது. பின்னர்அவர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்று அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
வாகீசன் வீட்டில் பொலிஸார் சோதனைகளை மேற்கொண்டனர் என்றும் அவரின் மடிக்கணினி உள்ளிட்ட சில ஆவணங்களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த)

# சுற்றுலாப் பேருந்து விபத்து; ஒருவர் காயம்: 40 பேர் காயம்

கொழும்பு, மார்ச் 7
கல்விச் சுற்றுலா சென்ற பேருந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். 40 பேர் வரையில் காயமடைந்துள்ளனர்.
அக்கரைப்பற்று - அட்டாளைச்சேனையிலிருந்து அளுத்கமவுக்குச் சென்ற போது கடுகண்ணாவில் நேற்றுமுன்தினம் இரவு 9.30 அளவில் இது இடம்பெற்றுள்ளது. பேருந்து நடத்துநரான அக்கரைப்பற்று, சவுத் வீதியைச் சேர்ந்த இன்ஹாம் என்பவரே உயிரிழந்துள்ளார். காயமடைந்தவர்கள் கண்டி, மாவனல்லை மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
வேகக்கட்டுப்பாட்டை இழந்தமையே விபத்துக்குக் காரணம் என்று ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த)

# 50 ரூபா அதிகரிப்பில்லை தொழிலாளர் ஏமாற்றம்!

## இனியும் ஏமாற்றப்போகிறீர்களா? என முன்னணியிடம் காங்கிரஸ் கேள்வி

கொழும்பு, மார்ச் 7
பாதீட்டின் ஊடாக நாளொன்றுக்கு 50 ரூபா கொடுப்பனவு பெற்றுக்கொடுக்கப்படும் என்று மலையக அமைச்சர்கள் உறுதியளித்திருந்தனர். அந்த உறுதிமொழி இன்று நிறைவேற்றப்படவில்லை. திட்டமிட்ட அடிப்படையில் தோட்டத் தொழிலாளர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர்.
50 ரூபா கிடைக்காவிட்டால் 'பாதீட்டுக்கு' ஆதரவாக வாக்களிக்கமாட்டோம் என்று மற்றுமொரு நாடகத்தை அரங்கேற்றி - மக்களை, தமிழ் முற்போக்கு கூட்டணி ஏமாற்றக்கூடும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் கணபதி கனகராஜ் சுட்டிக் காட்டியுள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு கூட்டு ஒப்பந்தத்துக்கு மேலதிகமாக அரச நிதியிலிருந்த நாளொன்றுக்கு 50 ரூபா பெற்றுக்கொடுக்கப்படும். அதற்கான அறிவிப்பு பாதீட்டில் வெளிவரும் என்று முற்போக்குக் கூட்டணி தலைவர்கள் கூளுரைத்திருந்தனர்.
எனினும், இது தொடர்பாகப் பாதீட்டு உரையில் நிதி அமைச்சர் எவ்வித அறிப்பையும் வெளியிடவில்லை. இந்த விடயம் குறித்து தேயிலை சபையுடன் பேசவுள்ளேன் என்று மட்டுமே தெரிவித்திருந்தார் - என்றார். (த)

# மகிந்தவுடன் பேசவில்லை: சீறுகிறது கூட்டு எதிரணி

கொழும்பு, மார்ச் 7
இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள நோர்வேயின் அயலுறவு இராஜாங்கச் செயலர் மரியன் ஹகென், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவைச் சந்திக்காதமை, கூட்டு எதிரணியினருக்குக் கடும் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.
இதுகுறித்துக் கருத்து வெளியிட்டுள்ள கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர், ஹெகலிய ரம்புக்வெல, மரியன் ஹகெனுடனான சந்திப்புக்கு மகிந்த ராஜபக்சவை கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகம் அழைக்கவில்லை. முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுடன் நிச்சயமாக ஒரு சந்திப்புக்கு, நோர்வே தூதரகம் ஏற்பாடு செய்யும் என்று தெரிவித்துள்ளார். (த)


# கண்டிப் பேரணியில் பங்கேற்கமாட்டேன்

## கோத்தபாய தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 7
கண்டியில் நாளை மறுதினம் நடைபெறவுள்ள சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி யின் பேரணியில் தாம் கலந்து கொள்ளப் போவதில்லை என்று பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் நடந்த நூல் வெளியீட்டு நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் தெரிவித்துள்ளதாவது;
மார்ச் 8 ஆம் நாள் நடைபெறவுள்ள பேரணிக்கு எனக்கு அழைப்பு விடுக்கப்பட வில்லை. அதில் நான் பங்கேற்கமாட்டேன். நான் அரசியலில் நுழைவதற்கு இன்னமும் காலம் உள்ளது. நேரம் வரும் போது நான் அரசியலுக்கு வருவேன் என்று அவர் கூறியுள்ளார். (த)

# மகிந்தவுக்குச் சூடான பதில் வழங்கினார் அமைச்சர் சஜித்

கொழும்பு, மார்ச் 7
அமைச்சர் சஜித் பிரேமதாசவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவுக்குமிடையில் நாடாளுமன்றில் வாக்குவாதம் இடம்பெற்று மகிந்தவுக்குச் சூடான பதில் வழங்கினார் அமைச்சர் சஜித் பிரேமதாச.
கடந்த நாடாளுமன்ற அமர்வின்போது எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச சினிமாத்துறை, கலைத்துறை மற்றும் கலைஞர்களின் நிலைமைகள் குறித்துக் கேள்வி எழுப்பியிருந்தார்.
இதற்கு நாடாளுமன்றில் அமைச்சர் சஜித் பிரேமதாச பதில் வழங்கினார்.
கடந்த ஆட்சிக் காலத்தில் கலையுடன் தொடர்புபட்ட பல்வேறு வேலைத்திட்டங்கள் நிறுத்தப்பட்டன. இந்த ஆட்சியில் அவை மீண்டும் முன்னெடுக்கப்பட்டன என்று அமைச்சர் தெரிவித்துக் கொண்டிருந்த நேரத்தில் ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய மகிந்த ராஜபக்ச அரசதலைவர் தேர்தலுக்கு இன்னமும் காலம் உள்ளது என்று கூறினார்.
இதற்குப் பதிலளித்த அமைச்சர் சஜித் "நீங்கள் என்னை அரசதலைவராகக் கற்பனை செய்கின்றீர்களா, இதை எண்ணிப்பார்க்கிற போது எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது. நீங்கள் இவ்வாறு நினைப்பீர்கள் என்று நான் கனவில் கூட நினைக்கவில்லை. ஆனால் இப்போது நான் கூறுவது அரச தலைவர் குறித்த விடயம் அல்ல. இது உங்களின் காலத்தில் இடம்பெற்ற அடக்குமுறை குறித்து நீங்களே எழுப்பிய கேள்விக்கான பதில். இந்தப் பதில்களைக் கூறும்போது உங்களால் கேட்டுக்கொண்டு இருக்க முடியவில்லை. காதுகள் வலிக்கின்றன என நினைக்கின்றேன். ஆனாலும் நான் இதனைக் கூறியே ஆக வேண்டும் - என்று தெரிவித்தார். (த)



# கார்பன் பரிசோதனை அறிக்கை மன்னார் நீதிமன்றில் சமர்ப்பிப்பு

## சட்ட மருத்துவ அதிகாரி சமிந்த ராஜபக்ச தெரிவிப்பு

மன்னார், மார்ச் 7

மன்னார் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளில் மீட்கப்பட்ட மனித எச்சங்களின் கார்பன் பரிசோதனை அறிக்கையானது மன்னார் நீதிவான் நீதிமன்றத்துக்கு நேற்றையதினம் கிடைக்கப்பெற்றுள்ளது என்று அகழ்வுப் பணிகளுக்குப் பொறுப்பான சட்ட மருத்துவ அதிகாரி சமிந்த ராஜபக்ச தெரிவித்தார்.



மன்னாரில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் மனிதப் புதைகுழியில் மீட்கப்பட்ட சந்தேகத்துக்கு இடமான மனித எச்சங்கள் கடந்த மாதம் கார்பன் பரிசோதனைக்காக சட்ட மருத்துவ அதிகாரி தலைமையில் அமெரிக்காவின் புளோரிடவில் உள்ள ஆய்வு கூடத்துக்கு மேலதிக ஆய்வுகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டது. குறித்த பரிசோதனை அறிக்கை 14 நாள்களில் கிடைக்கப் பெறும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் சட்ட ரீதியாக கடந்த நாள்களில் கிடைக்கப் பெறாத நிலையில் நேற்றையதினம் குறித்த அறிக்கையானது சட்ட ரீதியான ஆவணமாக மன்னார் நீதிவான் நீதி மன்றத்துக்கு கிடைக்கப் பெற்றது என்று சட்ட மருத்துவ அதிகாரி மேலும் தெரிவித்தார்.

அதே நேரத்தில் 'குறித்த அறிக்கை தொடர்பான எந்த விவரங்களும் என்னால் வழங்க முடியாது. அறிக்கை தொடர்பாக ஆர்வம் உள்ளவர்கள் குறித்த அறிக்கையை மன்னார் நீதிவான் நீதி மன்றத்தின் ஊடாக பெற்றுக் கொள்ள முடியும். அதே நேரத்தில் குறித்த மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகளை தொடர்சியாக மேற்கொள்வதா? இல்லையா? என்பது தொடர்பாக நீதிவான் மற்றும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் மற்றும் அலுவலக பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய பின்னரே முடிவெடுக்க முடியும்' என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதுவரை குறித்த மனிதப் புதைகுழியில் இருந்து 335 மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளதுடன் 318 மனித எச்சங்கள் முழுமையாக அப்புறப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-56.60)

# அளவுக்கதிக வெப்பம் குழந்தைகள் கவனம்!

கொழும்பு, மார்ச் 7

காற்றுடன் கூடிய வெப்பம் நாட்டில் அசாதாரண நிலையைத் தோற்றுவித்துள்ளது. இதனால் குழந்தைகளின் மட்டிலும், மூத்தவர்கள் மட்டிலும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்று சுகாதாரத்துறை எச்சரித்துள்ளது.

தண்ணீரை அதிகம் அருந்துவதன் மூலம் அளவுக்கதிகமான வெப்பத்தின் தாக்கத்தை ஓரளவு தவிர்த்துக் கொள்ளலாம். சூரிய வெளிச்சம் நேரடியாக விழும் வகையில் வாகனங்கள் நிறுத்துவதையோ, அவ்வாறான வாகனங்களில் ஆள்கள் இருப்பதையோ தவிர்க்க வேண்டும் என்று சுகாதாரத்துறை மேலும் எச்சரித்துள்ளது. (ம)



# வவு. மாவட்டத்தில் நேற்று ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்

வவுனியா, மார்ச் 7

வவுனியா பரக்கும் மகா வித்தியாலயத்துக்கு முன்பாக பல ஆசிரியர்கள் ஒன்றிணைந்து பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். காலை 10.30 மணி தொடக்கம் 11 மணிவரை அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆசிரியர்களின் சம்பளத்தை அதிகரிக்க வேண்டும், ஆசிரியர்களின் போராட்டத்தில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட தாக்குதலை கண்டனம் செய்கிறோம் போன்ற பல்வேறு கோசகங்களை எழுப்பியவாறு ஆசிரியர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம)

# அனுமதி அட்டைகளை பொற்ப்பேற்குக

யாழ். மார்ச் 7

2019ஆம் ஆண்டில் பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சைக்கு தோற்றவுள்ள யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவர்கள் தமது அனுமதி அட்டைகளை இன்று காலை 10 மணிக்கு பகுதித் தலைவர்களிடம் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)



இலங்கைக்கான சீனத் தூதுவர் செங் சூயுவான், சீனத் தூதரகத்தின் பேச்சாளரும் அரசியல் பிரிவுப் பொறுப்பாளருமான லுவோ சொங், பொருளாதார வர்த்தக கவுன்சிலர் யாங் சுசோ யுவான் ஆகியோரை உள்ளடக்கிய சீனக் குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளனர்.

அவர்கள் உதயன் பணிமனைக்கும் நேற்றுக் காலை நேரில் வருகை தந்தனர். இந்தக் குழுவை உதயன் குழுமத் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் வரவேற்றார். உதயன் பத்திரிகை கடந்த காலங்களில் எதிர்கொண்ட இழப்புக்கள், சேதங்கள் தொடர்பில் அவருக்கு விவரமாக எடுத்துக் கூறப்பட்டது. அதன் பின்னர், வடக்கு மாகாணத்தின் சமகால நிலவரங்கள் தொடர்பில் சீனத் தூதுவர் நீண்ட கலந்துரையாடலை நடத்தினார். (ம)

# துன்புறுத்தல்களுக்கு இலக்காகிய ஊடகவியலாளர்களுக்கு இழப்பீடு

## பாதிக்கப்பட்ட சகலரையும் பதிவு செய்யுமாறு நிதி மற்றும் ஊடக அமைச்சு அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7

2005ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் துன்புறுத்தல்கள் மற்றும் இன்னல்களுக்கு உள்ளான ஊடகவியலாளர்களுக்கு மதிப்பளித்து அவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு அரசு முன்வந்துள்ளது. அந்தக் காலப்பகுதியில் பாதிக்கப்பபட்ட ஊடகவியலாளர்கள் தங்களுடைய பதிவுகளை விரைந்து மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. நாடுமுழுவதும் வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் உள்ள பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் விவரங்கள் திரட்டப்பட்டபோதும் வடக்கு - கிழக்கில் உள்ள பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பான விவரங்கள் போதுமானளவு கிடைக்கவில்லை என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

வடக்கு - கிழக்கில் உள்ள பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் அனைவரையும் விண்ணப்பிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. இதற்கான விண்ணப்பப் படிவங்கள் அந்தந்த மாவட்டச் செயலகங்களில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் பெற்றுக் கொண்ட விண்ணப்படிவங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் முழுமைப்படுத்தி அனுப்பிவைக்க வேண்டும் என்றும் அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது. (து-21)

# அனைத்து அடக்குமுறைகளுக்கும் எதிராக பெண்களே அணிதிரள்வீர்

## பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பு அழைக்கின்றது

யாழ்ப்பாணம், மார்ச் 7

பன்னாட்டு மகளிர் தினத்தை முன்னிட்டுப் பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள சிறப்பு அறிக்கையின் மூலம் அனைத்து அடக்குமுறைகளுக்கும் எதிராக அனைவரையும் அணிதிரளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் மார்ச் 8 ஆம் திகதி பன்னாட்டு மகளிர் தினமாக முன்னெடுக்கப்படுகின்றது. இலங்கையில் மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தமது நாள் சம்பளம் ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன் பல மாதங்களாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றனர். அதே போல், போரில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை மீட்டுத் தரும்படி வடக்கு - கிழக்கில் பெண்கள் போராடிக்கொண்டிருக்கின்றனர். அத்துடன், தமது பூர்வீக வாழ்விடங்களை மீட்டுத்தரும்படி கேப்பாபிலவு, சிலாவத்துறை மக்கள் தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கின்றனர். புத்தளம் பிரதேசத்தில் கொழும்பு, வெளிநாட்டு திண்மக் கழிவுகளை கொட்டும் திட்டத்துக்கு எதிராக மக்கள் போராடிக்கொண்டிருக்கின்றனர். இந்த எல்லா போராட்டங்களிலும் சளைக்காமல் ஓர்மத்துடன் தொடர்ந்து போராடிக் கொண்டிருப்பது பெண்களே. நாம் அமைப்பாக்கம் பெற்ற போராட்டங்களை முன்னெடுப்போம். விடுதலைக்கான கதவுகளைத் திறப்போம் என அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட ப்பட்டுள்ளது. (க)

# புதிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் அரசதலைவர் முன்னிலையில் பதவியேற்பு

கொழும்பு, மார்ச் 7

புதிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக மேல் நீதிமன்ற நீதிபதி பந்துல கருணாரத்ன அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நேற்றுப் பதவியேற்றார்.

இதேநேரம் பதில் கடமை புரியும் மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவராக மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் தீபாலி விஜேசுந்தரவும் அரச தலைவர் முன்னிலையில் பதவியேற்றார். இந்தப் பதவியேற்பு அரச தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது. (ம)



## அபிவிருத்திக்கானதாக அன்றி போருக்கானதாக இருக்கிறது

### பாதீடு பற்றி சிறிதரன் எம்.பி. கருத்து

கொழும்பு, மார்ச் 7

2019ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் அபிவிருத்திக்கானதல்ல. இதனை ஒரு போர் வரவு-செலவுத் திட்டமாகவே நோக்குகிறோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

போர் இல்லாத நாட்டில் பாதுகாப்பு செலவீனத்துக்கு எதற்காக அதிகளவு தொகையை வரவு - செலவு திட்டத்தில் ஒதுக்க வேண்டும் எனவும் கூட்டமைப்பு கேள்வி எழுப்பியுள்ளது.

புதிய வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தசாப்த கால போரால் பாதிக்கப்பட்ட நிலையில் வடக்கு -கிழக்கில் தமிழ் மக்கள் தொடர்ந்தும் இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர். புதிய வரவு - செலவுத் திட்டத்தில் ஆறில் ஒரு பங்கு என்ற பெருந்தொகை பாதுகாப்புக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நாட்டில் சமாதானம் நிலவுகின்ற நிலையில் ஏன் இவ்வளவு தொகை பாதுகாப்புக்கு?

**தொழில் வாய்ப்பு இல்லை**

தமிழர் வாழ்கின்ற பகுதிகளில் போர் நிறைவடைந்து 10 ஆண்டுகளின் பின்னரும் தொழில்வாய்ப்பை ஏற்படுத்துவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அங்குள்ள இளையோருக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கு இந்த வரவு - செலவு திட்டத்தினூடாக நடவடிக்கை எடுத்திருக்கலாம். அவ்வாறான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாத நிலையில் நாங்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறோம். வெறும் அபிவிருத்திக்கான வரவு - செலவு திட்டம் எனக் கூறுவதன் மூலமாக மாத்திரம் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது - என்றார்.

**காணி விட்டிருக்கலாம்**

கேப்பாபிலவு காணி விடுவிப்புக்கு இராணுவம் நிதி கோரி வருகின்ற நிலையில், அந்த பணத்தை ஒதுக்கி மக்களின் காணிகளை விடுவித்திருக்கலாமே என்றும் சிறிதரன் கேள்வியெழுப்பினார்.

கேப்பாபிலவு மக்கள் காணிகளிலுள்ள பாதுகாப்பு முகாம்களை அகற்றி மாற்றிடத்தில் முகாம் அமைத்திட இராணுவம் நிதி கோரி வருகிறது. போரற்ற நாட்டில் பாதுகாப்புக்கு இவ்வளவு பெருந்தொகை ஒதுக்கியமைக்குப் பதிலாக, அந்தப் பணத்தைக் கொண்டு கேப்பாபிலவு மக்களின் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுத்திருக்கலாம்.

இந்த அரசில் அரசியல் தீர்வு கூட நீர்த்துப் போகும் நிலையே காணப்படுகிறது. இதய சுத்தியான எவ்வித நடவடிக்கையும் இந்த அரசில் மேற்கொள்ளப்படுவதாக இல்லை. இராணுவ வசமுள்ள காணியைக் கூட விடுவிக்க முடியவில்லை என்றால் எப்படி நல்லிணக்கம் பேசுவது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

(த)

### யாழ்ப்பாணக் குடாநாட்டில்

# 3,918 ஏக்கர் காணிகள் இராணுவத்தின் வசம்

*யாழ்ப்பாணம், மார்ச் 7*

*போர் முடிவடைந்து 10 வருடங்கள் கடந்தபோதும் யாழ்ப்பாண குடாநாட்டில் படையினர் வசம் இருந்த 14 ஆயிரத்து 237 ஏக்கர் நிலப்பரப்பில் 3 ஆயிரத்து 918 ஏக்கர் நிலம் தொடர்ந்தும் அவர்கள் வசமே உள்ளன.*

படையினர் வசமிருந்த 14 ஆயிரத்து 237 ஏக்கர் நிலத்தில் மகிந்த அரச தலைவராக இருந்த காலப் பகுதிவரையில் 6 ஆயிரத்து 320 ஏக்கர் நிலம் மக்களிடம் விடுவிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் மைத்திரிபால சிறிசேனா அரச தலைவராக பொறுப்பேற்ற சமயம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டும் 7 ஆயிரத்து 917 ஏக்கர் நிலம் முப்படையினரின் வசம் தொடர்ந்தும் கானப்பட்டது. இவ்வாறு காணப்பட்ட நிலத்தில் கடந்த 4 ஆண்டு காலத்திலும் மைத்திரி அரசினால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் 4 ஆயிரம் ஏக்கர் நிலம் விடுவிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் தற்போதும் 3 ஆயிரத்து 917 ஏக்கர் நிலம் படையினர் வசம் உள்ளது.

இவ்வாறு காணப்படும் 3 ஆயிரத்து 917 ஏக்கர் நிலத்தில் 3 ஆயிரத்து 642 ஏக்கர் தனியார் நிலமும் மிகுதி அரச நிலமுமாக காணப்படுகின்றது.

இதில் படையினர் வசம் 2 ஆயிரத்து 668.81 ஏக்கர் தனியார் காணிகளும் 112.5 ஏக்கர் அரச காணியும் கடற்படையினரின் வசம் 274.57 ஏக்கர் தனியார் காணியும் 162.26 ஏக்கர் அரச காணியும் காணப்படுகின்றது. இவ்வாறே விமானப் படையினர் வசம் 646 ஏக்கர் தனியார் காணியும் பொலிசாரிடம் 52.53 ஏக்கர் தனியார் காணியுமாகவே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-105)

## போராடும் தமிழரைக் கூறாக்கி வலிமையைக் குறைக்க முயற்சி

### தமிழர் மரபுரிமைப் பேரவை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7

தாயகத்தில் இடம்பெறும் திட்டமிட்ட அத்துமீறல்களை எதிர்க்கும் தமிழர் சமூகம் இந்து மற்றும் கத்தோலிக்க மார்க்கங்களைப்பின்பற்றுபவர்களையும் இந்த மார்க்கங்களின் மதகுருமார்களையும் பெரும்பான்மையாகக் கொண்டது. இதைக் கண்டறிந்து தமிழ்ச் சமூகத்தை இருகூறிட்டு எதிர்ப்பின் வலிமையை மலினப்படுத்தும் முயற்சியாகவே திருக்கே தீச்சர சம்பவம் இடம் பெற்றுள்ளது.

தமிழ் விரோத சக்திகளால் இந்த அடாவடிகையிலெடுக்கப்பட்டு வருகிறது .என்று தமிழர் மரபுரிமைப் பேரவை கண்டனம் தெரிவித்துள்ளது. தமிழ் மக்களின் பூர்வீக வாழ்நிலங்கள் திட்டமி டப்பட்ட குடியேற்றங்களால் துண்டாட ப்படும் முயற்சிகள், இங்கு சிங்கள மக்களைக் குடியேற்றுவதன் மூலம் இனத் தொடர்ச்சியின்மையை ஏற்படுத்தி இனப்பரம்பல் கோலத்தைச் சிதைத்தழிக்கும் நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன. இதன் மூலமாகத் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்துவரும் பகுதிகளில் தமிழ் மக்களின் அரசியல் பலத்தை உடைத்தெறியும் முயற்சிகள் இடம்பெறுகின்றன.

போராட்ட காலங்களில் சமூகத்தில் காணாமற் போயிருந்த சாதியம், மத வேறுபாடுகள், பிரதேச வாதம் போன்ற நச்சு விதைகள் தமிழர் சமூகத்தில் தூவப்பட்டு வேர்விட ஆரம்பித்துள்ளன. தமிழ் மக்களைப் பிரித்தாளும் தந்திரமாக இவ்வேறுபாடுகள் தமிழ்மக்கள் மத்தியில் பரப்பப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் வெளிப்பாடே திருக்கேதீச்சரத்தில் நடைபெற்று முடிந்த மதமுறுகல்.

தமிழர் விரோத சக்திகளால் அடக்குமுறைக்கு எதிரான நம் குரலை மலினப்படுத்துவதற்காகத் திட்டமிடப்படும் நடவடிக்கைகளை உணர்ந்து தெரிந்தோ தெரியாமலோ குறுகிய இலாபங்களுக்காக அவற்றுக்குவிலைபோகும் நிலையை ஒவ்வொருவரும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

(த)

## அவசர நிகழ்ச்சித் திட்டத்தில் கிராமியப் பாலம் சீரமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல் தொகுதி ரீதியாக கிராமிய பாலங்கள் விரைவில் அவசர நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மீள்சீரமைப்புச் செய்யப்படவுள்ளன.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமைய இந்தத் திட்டம் யாழ்ப்பாண மாவட்டத்தில் துரிதமாக முன்னெடுக்கப்படவுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கிராமிய பாலங்கள் தொடர்பான் 6மீற்றர் தொடக்கம் 30 மீற்றர் வரையான மீள்சீரமைப்புச் செய்யப்பட வேண்டிய பாலங்களின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன கேட்டுள்ளார்.

மேற்படி பாலத்தின் ஒரு வழிப்பகுதியின் அகலம் 3.5மீற்றர் அளவு கொண்டிருப்பதுடன் ஒரு மீற்றர் அளவில் நடைபாதைக்குமாக உள்ளடக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-50)

## பொன்னொளி நகர் கிராமம் மக்களிடம் நாளை கையளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் மூளாயில் அமைக்கப்பட்ட "பொன்னொளி நகர்" மாதிரிக் கிராமம், மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜீத் பிரேமதாச கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, ஈஸ்வரபாதம் சரவணபவன்,எம்.ஏ.சுமந்திரன்,தர்மலிங்கம் சித் தார்த்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள் ளது.

(ஐ)

## சனியன்று பதில் பாடசாலை

யாழ்ப்பாணம், மார்ச் 7

வடக்கு மாகாணத்தில் சிவராத்திரி தினத்துக்கு மறுநாள் வழங்கப்பட்ட சிறப்பு விடுமுறைக்கு பதில் பாடசாலை நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறும் என்று மாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

ஆளுநரின் பணிப்பின் கீழ் இந்த சிறப்பு விடுமுறை கடந்த செய்வாய்க்கிழமை பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டது.அதற்கான பதில் பாடசாலைகள் நாளை மறுதினம் சனிக்கிழமை நடத்தப்படுவதை வலய கல்வி பணிப்பளார்கள் உறுதி செய்து அறிக்கை இடல் வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

(க-7)

# குடு கடத்தல் பற்றித் தகவல்களை வழங்கியதால் கைது செய்தனரா?

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ்ப்பாண புறநகர்ப் பகுதியில் சிலர் குடு கடத்தல் மற்றும் விற்பனையில் ஈடுபடுகின்றனர் என்ற தகவலை வழங்கியவரை, அதே குற்றச்சாட்டில் யாழ்ப்பாணப் பொலிஸார் கைது செய்து சென்றனர் என்று கூறப்படுகின்றது. இது விசித்திரமான சம்பவம் என்பது ஒருபுறமிருக்க, போதைப் பொருள் கடத்தல் விற்பனையாளர்களுடன் பொலிஸார் தொடர்பைப் பேணி ஊக்குவிக்கின்றனரா என்ற சந்தேகத்தை மேற்குறித்த சம்பவம் எழுப்பியுள்ளது.

போதைப் பொருள் கடத்தல்கள் பற்றி அறிவிக்குமாறு பாடசாலை உட்பட பல இடங்களிலும் பொதுமக்களிடம் பொலிஸார் கோரிக்கை விடுக்கின்றனர். அரசதலைவரும் போதைப் பொருள் ஒழிப்பில் முன்னரைவிட அதிக அக்கறை காட்டுகின்றார். இந்த நிலையில், குறித்த குடும்பத் தலைவர் குடு கடத்தல் மற்றும் விற்பனைத் தகவலை பொலிஸ் நிலையத்தில் எழுத்தில் முறையிட்டிருந்தார். அவர் ஓய்வுபெற்ற பொலிஸ் அலுவலர் ஊடாகவே யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

முற்பகல் அவ்வாறு முறைப்பாடு செய்ய பிற்பகல் மேற்குறித்த குற்றச்சாட்டில் அவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். அவரது உந்துருளியிலிருந்து திடீரென்று கடதாசி சுருள் ஒன்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர். அது எவ்வாறு தனது உந்துருளியில் வந்தது என்று தெரியாது ஆனால் சோதனை எதுவுமின்றி தாமே வைத்தவர்கள் போல அதனை திடீரென்று மீட்டுக் கைது செய்கிறோம் என்று கூறினர் என்று கைது செய்யப்பட்டவர் தெரிவித்தார்.

போதைப் பொருள் தொடர்பான எந்த நடவடிக்கையிலும் ஈடுபடுவதில்லை. அதனுடன் தொடர்புடையவர்கள் பற்றி முறையிட்டதால் கைது செய்யப்பட்டுள்ளேன் என்று அவர் தர்க்கித்துள்ளார். சில மணித்தியாலங்களின் பின்னர் அவரைப் பொலிஸார் விடுவித்தனர். பொலிஸார் இப்படி நடந்து கொண்டது ஏன்? என்று கேள்வியெழுப்பப்படுகிறது.

(த-105)

# 'யாவருக்கும் வீடு'


## 2025இல் 20 ஆயிரம் புதிய மாதிரி கிராமங்களே இலக்கு!

கிசான் விஜேசுந்தர

மறைந்த முன்னாள் அரச தலைவர் ரணசிங்க பிரேமதாசவின் எண்ணக்கருவுக்கு அமைவாக, தனக்கென சொந்தமான வீட்டில் வாழ்வதற்கான உரிமையைப் பெற்றுக் கொடுக்கும் உன்னத உதாகம திட்டத்தை நிறைவேற்றும் முகமாக அவரது புதல்வரான அமைச்சர் சஜித் பிரேம தாசவால் முன்னெடுக்கப்படும் 'செமட்ட செவன' (யாவருக்கும் வீடு) செயற்றிட்டம் தற்போதைய அரசால் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப்படுவது யாவரும் அறிந்த விடயமாகும்.

அமைச்சர் சஜித் பிரேமதாசவின் செயற்திட்டமும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் நெறிப்படுத்தலும் பக்க பலமாக அமைவதால் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கு மிகவும் இலகுவாக அமைந் து ள்ளது.

நாட்டின் ஒரு பிரதேசத்துக்கோ அல்லது ஒரு இனத்துக்கோ மட்டுப்படுத்தப்படாது. நாட்டின் சகல பகுதிகளிலும் இந்தச் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இன, மத





பேதம் பாராது பயனாளிகளை இந்தத் திட்டம் சென்றடைய வேண்டும் என்பதே அமைச்சர் சஜித் பிரேமதாசவின் எண்ணக்கருவாகும்.

2025ஆம் ஆண்டாகும் போது 20 ஆயிரம் புதிய மாதிரிக் கிராமங்கள் அமைப்பதே அமைச்சரின் இலக்காகும். தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் செயற்படுத்தலின் கீழ் இந்த வீட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

கடந்த பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் 170 மாதிரிக் கிராமங்கள் மக்கள் மயப்படுத்தப் பட்டுள்ளமையானது பெரிய வெற்றியாகும். இதன் முதற் கிராமமானது 2016 ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் கையளிக்கப்பட்டமை சிறப்பு அம்சமாகும்.

வீடொன்று ஓரிரு தினங்களிலோ அல்லது ஓரிரு மாதங்களிலோ அமைக்க முடியாது. மூன்று ஆண்டுகால முயற்சியின் பலனாக தற்போது ஒரு வாரத்தில் குறைந்த பட்சம் 1 4 வரையான மாதிரிக் கிராமங்கள் மக்களுக்கு கையளிக்கப்படுகின்றது.

எதிர்காலத்தில் இந்தத் தொகை மேலும் அதிகரிக்கப்படலாம்.

52 நாள்கள் அரசியல் உறுதிப்பாடு இன்மையால் இந்தச் செயற்பாடானது ஒரு வருடகால பின்னடைவைத் தந்துள்ளது. ஆயினும் இந்தக் கால இடைவெளியில் ஏற்பட்ட பின்னடைவை பிரதியீடு செய்து கொள்ளுமுகமாக அமைச்சர் இரவு பகல் பாராது பாடுபட்டு வருகின்றார்.

வீடுகள் உரிய பயனாளிகளுக்கே சென்றடைய வேண்டும் என்பதற்காக பிரதேச செயலகங்களுக்கூடாக பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். வீட்டுரிமை, காணியுரிமை இல்லாத மற்றும் தங்கி வாழும் குடும்பங்கள் இணைக்கப்படுகின்றனர். இதனுடன் இணைந்ததாக 'கிராம சக்தி' செயற்றிட்டமும் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இது வறுமையானவர்களை அடிப்படையாகக் கொண்ட செயற்றிட்டமாகும். காணியும் வீடும் முற்றிலும் இலவசமாகவே வழங்கப்படுகின்றன. மாதிரிக் கிராமம் அமைப்பதற்காக குறைந்த வட்டி வீதத்திலான கடனுதவி வழங்கப்படுவதுடன் காணி இலவசமாக வழங்கப்படுகிறது. இதற்காக 5 லட்சம் ரூபா வழங்கப்படுகிறது. இந்த வீடுகள் வீட்டு உரிமையாளர்களாலேயே அவர்களுக்கு ஏற்ற விதத்தில் தரமாக அமைக்கப்படுகின்றது.

வீடுகளை வழங்குவதுடன் மாத்திரம் நின்றுவிடாது அவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் முகமாக சுயதொழில் முயற்சிகளுக்கான ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றது.

கிராமம் தோறும் மாதிரிக் கிராமங்களை அமைக்கும் போது அதற்கான பெயர்கள் இந்தக் கிராமத்தை அடியொட்டிய சம்பிரதாயங்கள், சமூகவியலாளர்கள், சமூக சேவையாளர்கள், மதத் தலைவர்கள், கலைஞர்கள் கருத்தில் கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். ஒவ்வொரு மாதிரிக் கிராமமும் 25 வீடுகள் முதல் 50 வீடுகள் வரை உள்ளடக்கப்படுகின்றமை சிறப்பு அம்சமாகும். சில சந்தர்ப்பங்களில் இந்தத் தொகை 50 ஐ விடவும் அதிகமாக உள்ளன. உதாரணமாக காலியில் ரஜ்கமவில் அமையப்பெற்ற 'ரலஜயபுர' 155 வீடுகள் உள்ளடக்கப்பட்ட மாதிரிக் கிராமமாகும். இது சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அமைக்கப்பட்ட மாதிரிக்கிராமமாகும். மேலும், புத்தளம் மாவட்டத்தில் அசோகபுரத்தில் அமைக்கப்பட்ட கிராமத்தில் 98 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. மன்னார் மாவட்டத்தில் தாழ்பாடு பிரதேசத்தில் அமைக்கப்பட்ட மாதிரிக் கிராமம் 50 வீடுகளை உள்ளடக்கியுள்ளன.

அடிக்கல் நடப்பட்டுள்ள மாதிரிக் கிராமங்களின் தொகை 1780 ஐத் தாண்டியுள்ளதுடன் இந்தத் தொகை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. 2025 ஆம் ஆண்டாகும் போது 20 ஆயிரம் புதிய மாதிரிக் கிராமங்கள் உருவாக்கி மக்களின் வறுமையைப் போக்குவதே அமைச்சர் சஜித் பிரேமதாசவின் ஒரே நோக்கமாகும்.

> **நாட்டின் ஒரு பிரதேசத்துக்கோ அல்லது ஒரு இனத்துக்கோ மட்டுப்படுத்தப்படாது. நாட்டின் சகல பகுதிகளிலும் இந்தச் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இன, மத பேதம் பாராது பயனாளிகளை இந்தத் திட்டம் சென்றடைய வேண்டும் என்பதே அமைச்சர் சஜித் பிரேமதாசவின் எண்ணக்கருவாகும். 2025ஆம் ஆண்டாகும் போது 20 ஆயிரம் புதிய மாதிரிக் கிராமங்கள் அமைப்பதே அமைச்சரின் இலக்காகும். தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் செயற்படுத்தலின் கீழ் இந்த வீட்டுத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.**

---

## ரணில் - மைத்திரி...

உடனடியாக பதிலடியாக, ஜெனிவாவில் இந்த ஆண்டு கொண்டு வரப்படும் இலங்கை தொடர்பான தீர்மானத்துக்கு ஆதரவு வழங்கும் நிலைப்பாட்டை அயலுறவுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது. இந்த மோதல் நிலமை இராஜதந்திர வட்டாரங்களிடத்தில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தற்போதைய கூட்டத்தொடரில், இலங்கை தொடர்பான முன்வைக்கப்படவுள்ள தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்க வேண்டாம் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கோரியிருந்தார். இலங்கை மீதான வெளிநாட்டுத் தலையீடுகள் நிறுத்தப்பட வேண்டும், எமது விவகாரத்தை உள்நாட்டில் நாமே பார்த்துக் கொள்கின்றோம் என்று கூறியிருந்தார். நேற்றுக் காலையில் பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்திருந்த நிலையில், உடனடியாக நேற்று மதியம், ரணில் விக்கிரமசிங்கவின் அரசு இந்த முடிவை எடுத்துள்ளது.

ஜெனிவா தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்குவதன் மூலம், உறுதியானதும், நீடித்து நிலைக்கக் கூடியமான நல்லிணக்கத்தை அடைவதற்கு அரசு அர்ப்பணிப்பைக் கொண்டுள்ளது என்று அயலுறவுத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

'இந்த நடைமுறைப்படுத்தல் செயற்பாடு, இலங்கையர்களுக்கு எதிராக தொடர்ச்சியாக சுமத்தப்படும் வெளிநாட்டுப் போர்க்குற்றச் சாட்டுகளில் இருந்து தடுக்கின்ற உத்தியாக இருக்கும். இலங்கையில் நிலையான நல்லிணக்கத்தை எட்டுவதற்காக பல்வேறு உறுதியான செயல்முறைகள், முன்னெடுக்கப்பட்டுள்ளன. எல்லா பொறிமுறைகளும், நல்லிணக்கச் செயல்முறைகளும், அரசின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றன. இலங்கைப் பாதுகாப்புத் தரப்பினருக்காக முதலைக்கண்ணீர் வடிப்பவர்கள், மாலி, மேற்காபிரிக்கா உள்ளிட்ட நாடுகளில் படையினர் ஐ.நா அமைதிப்படையில் நிறுத்தப்பட்டுள்ளனர் என்பதை மறந்து விட்டனர். ஜெனிவா தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியதால் தான் இது சாத்தியமானது. மேலும் இராணுவ ஒத்துழைப்பு விரிவடைந்துள்ளதுடன், படையினருக்கான பயிற்சி வாய்ப்புகளும் கிடைத்துள்ளன. எமது படையினரின் மதிப்பு பாதுகாக்கப்பட்டுள்ளது. மனித உரிமை செயல்முறைகளின் மூலம், பன்னாட்டுச் சமூகத்தின் நம்பிக்கை மீளப் பெறப்பட்டிருக்கிறது. மாலியில் உயிரிழந்த இரண்டு படையினரின் இறுதிச்சடங்குகளில் இதனை நாம் காண முடிந்தது' என்று தலைமை அமைச்சர் செயலகம், அயலுறவுத்துறை அமைச்சு இணைந்து வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ.5)

## அமெரிக்க...

பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலைனா பீ.டெப்லிட்ஸ், ஜெனீவா தீர்மான வரைவு குறித்து நாம் ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளோம். மேலும், காணாமலாக்கப்பட்டோருக்கான தீர்வுகள் கிடைக்க வேண்டும் என்பதில் அமெரிக்கா உறுதியாக உள்ளது. கடந்தகால போரால் பாதிப்புற்ற இலங்கையில் தீர்க்கப்படாத பல பிரச்சினைகளுக்கு தீர்வுகள் கிடைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். யாழ்ப்பாணம் பலாலியில் புதிதாக விடுவிக்கப்பட்ட நிலங்களை இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலைனா பீ.டெப்லிட்ஸ் நேற்று நேரில் சென்று பார்வையிட்டார். (ம-105)

## எமது...

யில் முன்வைப்ப தற்கு வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் உள்ளிட்ட மூவர் தமது பிரதிநிதிகளாக அனுப்பப்படவுள்ளனர். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அரச தலைவர் செயலகத்தில் நேற்று இடம் பெற்ற பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி சரத் அமுனுகம, மகிந்த சமரசிங்க ஆகியோரைக் கொண்ட குழு ஜெனிவா கூட்டத்தொடரில் பங்கேற்கவுள்ளது. இவர்கள் எதிர்வரும் 20ஆம், 22ஆம் திகதிகளில் நடைபெறும் அமர்வில் கலந்து கொண்டு, வெளிநாட்டு அழுத்தமில்லாத சூழலில் பிரச்சினைகளை தீர்க்க விரும்புவதாக வேண்டுகோள் விடுக்கவுள்ளனர்.

இராணுவம் போர்க் குற்றச்சாட்டுகளில் ஈடுபடவில்லை. ஜஸ்மின் சூக்கா போன்றவர்களின் நிறுவனங்களே இவ்வாறான குற்றச்சாட்டை முன்வைத்து வருகின்றன என்றார்.

இதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில், அரசின் சார்பில் உயர்மட்டக் குழு பங்கேற்பதில்லை என்றும், ஜெனிவாவில் உள்ள இலங்கைப் பிரதிநிதியே அதனைக் கையாளுவார் என்றும் அயலுறவுத்துறை அமைச்சு முதலில் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## குருமுதல்வரின்...

ரின் அறிக்கையில் உண்மைக்குப் புறம்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபைச் செயலர் செ.சி.இராமகிருஸ்ணன் தெரிவித்தார்.

அவர் விடுத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

திருக்கேதீச்சர ஆலயம் 1903ஆம் ஆண்டு மீளமைக்கப்பட்ட பொழுது இந்த ஆலயத்துக்குச் செல்வதற்கென அமைக்கப்பட்டதுதான் திருக்கேதீச்சர ஆலய வீதி. இந்த ஆலய வீதியில் இரும்புக் குழாய்களிலான ஒரு வளைவு பல வருடங்களாக இருந்து வந்தது. நீண்ட காலம் சென்றமையால் குழாய்கள் திருத்தம் செய்து பொருத்தப்பட்டன. இதனை அவ்விடத்தில் குழுமியக் கத்தோலிக்க மக்கள் பிடிங்கியெறிந்தபோது, கத்தோலிக்க குரு ஒருவர் உடனிருந்தார்.

மன்னார் மாவட்ட குரு முதல்வர் கூறுவது போன்று, லூர்துமாதா ஆலயம் முன்பாக அலங்கார வளைவு அமைக்கப்படவில்லை, திருக்கேதீச்சர ஆலய வீதி முகப்பில்தான் வளைவு அமைக்கப்பட்டது. இது பற்றிய வழக்கும் இல்லை.

துர்த்துமாதா ஆலயம் அமைப்பதற்காகக் கோரப்பட்ட காணி வழக்கு நீதித்துறை ஊடாக 21.11.2016 இல் ஒரு ஒப்பந்தத்துடன் முடிவடைந்துவிட்டது. இந்த வழக்குக்கும் வளைவுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை. அத்துடன் கத்தோலிக்க திருச்சபைக்கு எதிராக வழக்குப் போடப்படவுமில்லை. காணி வழங்கல் தொடர்பாக அரசு எடுத்த சட்ட நடவடிக்கை தவறானது என்பதற்காகவே போடப்பட்டது.


இந்தச் சம்பவம் தொடர்பாக கடந்த சனிக்கிழமை செ.சி.இராமகிருஸ்ணன் மற்றும் ஆ.ஐ.தயானந்தராஜா ஆகியோருடன் உரையாடல் இடம்பெற்றது. எனினும் அதில் இணைக்கப்பாடுகள் தொடர்பாக எந்தவித கருத்தும் பரிமாறப்படவில்லை.என்றுள்ளது. (கு-213)

# ரபேல் வானூர்திகள் இருந்திருந்தால் முடிவு வேறு மாதிரி இருந்திருக்கும்

## பாகிஸ்தானை விமர்சித்து மோடி ஆவேசப் பேச்சு

ஜாம்நகர்,மார்ச்.7

நமது வான் படையிடம் மட்டும் ரபேல் போர் வானூர்திகள் இருந்திருந்தால் சூழ்நிலையே வேறுமாதிரி இருந்திருக்கும். எதிர்த் தரப்பில் ஒருவரும் உயிருடன் இருந்திருக்க மாட்டார்கள் என்று இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி ஆவேசமாகப் பேசினார்.



குஜராத் மாநிலத்திலுள்ள ஜாம் நகரில் நடைபெற்ற பா.ஜ.காவின் பேரணிப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

தீவிரவாதத்துக்குப் பாகிஸ்தான் துணையாக நிற்கிறது. அதை வேரறுக்க இந்தியா முயன்று வருகிறது. பாகிஸ்தானின் தீவிரவாத ஆதரவுச் செயல்களைப் பார்த்துக் கொண்டு இந்தியா அமைதியாக இருக்காது என்பதை நினைவில் கொள்ளுங்கள். பாகிஸ்தானின் பாலகோட்டில் நடந்த தாக்குதலில் நமது வான் படைகள் இலக்கைச் சரியாகத் தாக்கின.

இதில் தவறு ஏதும் நிகழவில்லை. தீவிரவாதத்தின் ஊற்றுக்கண்ணாகப் பாகிஸ்தான் இருக்கிறது. தீவிரவாதத்தின்ஊற்றுக்கண்ணை நாம் நீக்க வேண்டாமா?

தீவிரவாதம் மூலம் இந்தியாவை அழிக்க முயல்பவர்களைப் பார்த்துக் கொண்டு இந்தியா அமைதியாக இருக்காது.

ஆனால் சிலருக்கு இதெல்லாம் புரியவில்லை - என்றார்.

**பின்னணி**

காஷ்மீர் பகுதியில் ஜெய்ஷ் ஈ முகம்மது என்கிற அமைப்பைச் சேர்ந்த தற்கொலைதாரி நடத்திய தாக்குதலில் இந்தியாவின் புல்வாமாவில் 40 இந்தியச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். அதையடுத்துப் பாகிஸ்தானுக்குள் ஊடுருவி இந்திய வான்படையினர் தாக்குதலில் ஈடுபட்டனர். இதன்போது இந்தியவானூர்திகளைச் சுட்டு வீழ்த்தியது பாகிஸ்தான். இந்திய விமானி ஒருவரையும் சிறைப் பிடித்தது. மோடியுடன் பேசுவதற்குப் பாகிஸ்தான் தலைமை அமைச்சர் இம்ரான்கான் பல முயற்சிகளைச் செய்தும் மோடி அதற்கு முன்வர வில்லை. பின்னர் பாகிஸ்தானால் இந்திய விமானி விடுவிக்கப்பட் டார்.

இந்தநிலையில்இந்தியத்தலைமை அமைச்சர் தேர்தல் பரப்புரைகள் மேடைகளில் பாகிஸ்தானை மேற்கண்டவாறு விமர்சித்து வருகிறார்.

# ஜெயலலிதாவுக்கான சிகிச்சையின்போது உணவுக்குக் கோடிக்கு மேல் செலவு ஏன்?

## அப்பலோ விளக்கம்

சென்னை,மார்ச்.7

மறைந்த தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலிதா தன்னுடைய இறுதிக் கட்டத்தில் அப்பலோ மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றார்.

நோயாளியான அவருக்கு 1.15 கோடி ரூபா அளவில் (இந்திய மதிப்பில்) உணவுச் செலவு ஏற்பட்டதாகக் குறிப்பிட்டு அப்பலோ மருத்துவமனையின் அறிக்கை வெளியாகியிருந்தது. அது குறித்து வழக்குத்தொடரப்பட்டது.

இந்த நிலையில் ஜெயலலிதா பழரசம் மட்டுமே அருந்தியதாகச் சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்திருக்கிறது அப்பலோ.

அவரைப் பார்வையிடுவதற்காக மருத்துவமனைக்கு வந்த அரச அதிகாரிகள், அமைச்சர்கள், உதவியாளர்கள் உள்ளிட்ட பல தரப்பினருக்கும் 3 வேளையும் உணவு வழங்கப்பட்டதால் தான் உணவுக் கட்டணம் ரூ.1.15 கோடி(இந்திய மதிப்பில்) செலவானது என்று அப்பலோ சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜமாலின் உடல் எரிக்கப்பட்டுவிட்டது!

டோஹா,மார்ச்.7

சவூதியைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஜமால் கஷோகி யின் உடல் பாகங்கள் சவூதித் தூதரக அதிகாரியின் இல்லத்தில் எரிக்கப்பட்டுவிட்டதாகப் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. மத்திய கிழக்கு நாடுகளில் இயங்கும் செய்தி ஊடகமான 'அல் ஜசிரா'வின் விசாரணையில் சவூதிப் பத்திரிகையாளர் ஜமாலின் உடல் துருக்கியில் உள்ள சவூதித் தூதரக அதிகாரி வீட்டில் எரிக்கப்பட்டது கண்டறியப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. துருக்கியிலுள்ள சவூதித் தூதரகத்துக்குள் வைத்துக் கொல்லப்பட்ட ஜமாலின் உடல் குறித்து விசாரணை நடத்தி வருவதாகவும், உண்மை கண்டறியப்படும் என்றும் சவூதி அயலுறவுத் துறை அமைச்சர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**பின்னணி**

சவூதி அரசை விமர்சித்து அமெரிக்கப் பத்திரிகைகளில் எழுதி வந்த சவூதியைச் சேர்ந்த ஜமால் துருக்கியில் உள்ள சவூதித் தூதரகத்துக்குள் வைத்துக் கடந்த ஒக்ரோபர் மாதம் கொல்லப்பட்டார்.

இது தொடர்பாக நடந்த விசாரணையில் சவூதி அரேபியாவின் அதிகாரிகள் திட்டமிட்டு மிருகத்தனமாக ஜமாலைக் கொலை செய்துள்ளமையும் துருக்கி அரசு இந்தக் கொலைக் குற்றத்தை விசாரிப்பதற்குச் சவூதி அனுமதி அளிக்காமல் தாமதப்படுத்தியதும் தெரியவந்தது. இந்தக் கொலையின் பின்னணியில்சவூதி இளவரசர் இருப்பதாகவும் கூறப்பட்டது. ஜமால் கொலை சார்ந்த உள்ளக விசாரணைகளை வெளிப்படைத்தன்மையற்றுச் சவூதி செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது.



# வெனிசுலாவில் அவலம் வாட்டியெடுக்கிறது வறுமை

கரகஸ்,மார்ச்.7

உள்நாட்டில் அரசியல் ஸ்திரமற்ற தன்மை நிலவுவதாலும், அமெரிக்கா தலைமையிலான ஏகப்பட்ட பொருளாதாரத் தடைகளாலும் வெனிசுலா மக்கள் வறுமையில் வாடுகின்றனர். ஒரு நேர உணவுகூட இன்றித் தவிக்கும் அவர்களில் ஒவ்வொருவரும் இதனால் 8கிலோ வரையில் நிறை குறைந்திருப்பதாக ஆய்வு நிறுவனங்கள் அறிக்கையிட்டுள்ளன.

மருந்துப் பொருள்கள், பால்மாக்கள், உணவுப் பொருள்கள் என அத்தியவசியத் தேவைகள் அனைத்துக்கும் அங்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது என்று பன்னாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதனால், பசியால் வாடும் மக்களுக்கும் அரச படைகளுக்கும் இடையே மோதல்கள் உருவாகி மக்கள் காயமடைவதும் கொல்லப்படுவதுமான அவலம் நீடிக்கிறது. அத்தோடு கால்நடைகள், வளர்ப்புப் பிராணிகள் என்பவற்றைக் கொடும் பசி காரணமாக மக்கள் கொன்று உண்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

குப்பைத் தொட்டிகளைக் கிளறிக் கழிவுகளை உண்பதிலும் மக்கள் ஈடுபடுகின்றனர். வெனிசுலா வின் அதிபர் நிக்கோலஸ் மதுரோவுக்கு எதிராக அந்த நாட்டு எதிர்க்கட்சித் தலைவரும், அவருடைய ஆதரவாளர்களும், அமெரிக்காவும் செயற்பட்டு வருவதும் மதுரோவால் மக்களின் அவலத்தைச் சடுதியில் போக்க முடியாமலிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் அதிரடி தீவிரவாதத் தடையை தொடர்ந்து பலர் கைது

இஸ்லாமாபாத்,மார்ச்.7

இந்தியாவின் மும்பைத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புபட்ட ஜமாத் உத்தவா என்கிற சயீத் தலைமையிலான இயக்கத்துக்கும், பலாக்ஜஇன்சானியட் அறக் கட்டளை என்கிற அமைப்புக்கும் பாகிஸ்தான் அரசு தடை விதித்தது. இந்த அமைப்புகளின் சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளன.

அதற்கான உத்தரவை நேற்று முன்தினம் பிறப்பித்ததாகப் பாகிஸ்தான் அயலுறவுத்துறை அமைச்சுத் தெரிவித்தது. பாகிஸ்தானின் இந்தத் தடை அறிவிப்பைத் தொடர்ந்து ஜெய்ஷ்இமுஹம்மத் இயக்கத்தின் தலைவர் மசூத் அசாரின் சகோதரர் உட்பட தடைசெய்யப்பட்ட இயக்கங்களை சேர்ந்த 44 ஆயுததாரிகள் கைது செய்யப்பட்டதாகப் பாகிஸ்தான் அரச ஊடகம் தெரிவித்தது.

புல்வாமா தாக்குதலையடுத்து இந்தத் தடைகளைப் பாகிஸ்தான் விதித்தமைக்குப் பாகிஸ்தானுக்குப் பன்னாடுகள் வழங்கிய அழுத்தமே காரணம் என்பதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. குறித்த அமைப்புகள் மீதும், அதன் தலைவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க ஐ.நா. பாதுகாப்புச் சபை முற்பட்டு வருகிறது.

இந்த நிலையிலேயே குறித்த இரண்டு அமைப்புகளுக்கும் பாகிஸ்தான் தடை விதித்துள்ளது என்கின்றன இந்திய ஊடகங்கள்.

# ஆறு ஆண்டுகளின் பின் விடுதலையான பத்திரிகையாளர்

கெய்ரோ.மார்ச்.7

யுனெஸ்கோ விருது பெற்ற, எகிப்தைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஷாகான் என்று அறியப்பட்ட முகம்மது அபு சையது ஆறு ஆண்டுகள் சிறைத்தண்டனைக்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டார். 2013ஆம் ஆண்டில் எகிப்து அதிபர் மொகமது மோர்ஸி பதவிநீக்கம் செய்யப்பட்டபோது அவரது ஆதரவாளர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். பாதுகாப்புப் படைகள் கிளர்ச்சியை அடக்க துப்பாக்கிச் சூடு நடத்தின. இதில் நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். அப்போது நடந்த அரசின் அடக்குமுறைகளைப் ஒளிப்படம் பிடித்தவர்தான் ஷாகான்.

இதன் பின்னர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். 2011ஆம் ஆண்டில் எகிப்தில் ஏற்பட்ட எழுச்சிக்குப் பிறகு இது மிகப்பெரிய எண்ணிக்கையில் சாட்சியங்களை விசாரிக்கும் நீதிமன்ற விசாரணையாக அமைந்தது.

ஷாகான் மீது சுமத்தப்பட்ட குற்றங்களுக்காகப் பன்னாட்டு மனித உரிமைக் குழுக்கள் கண்டனம் தெரிவித்தன. அவரை விடுதலை செய்யவேண்டும் எனக் கோரின. இந்த நிலையில் அவர் தற்போது விடுதலை செய்யப்பட்டார்.



# இந்துக்களை இகழ்ந்தவர் மீது இம்ரானின் கட்சி உடன் நடவடிக்கை





இஸ்லாமாபாத்.மார்ச்.7

பாகிஸ்தான் பஞ்சாப் மாகாணத்துக்குப் பொறுப்பான தகவல் மற்றும் கலாசார அமைச்சரும், ஆளும் கட்சியைச் சேர்ந்தவருமான பயாஸுல் ஹசன் சோஹான் இந்து எதிர்ப்புக் கருத்துக்களை வெளியிட்டமைக்காகப் பதவியைத் துறக்க வேண்டும் என்று பாகிஸ்தானின் தலைமை அமைச்சராகவுள்ள இம்ரான் கானின் கட்சி வலியுறுத்தியது. பின்னர் அவர் பதவி நீக்கப்பட்டார்.

'பசுவின் சிறுநீரைக் குடிப்பவர்கள். நாங்கள் முஸ்லிம்கள் எங்களுக்கு ஒரு கொடி உள்ளது. மவுலா அலியாவின் தீரத்தின் கொடி, ஹஸ்ரத் உமராவின் வீரக்கொடி, உங்களிடம் இது போன்ற கொடி உள்ளதா? எங்களை விட 7 மடங்கு நீங்கள் சிறந்தவர்கள் என்ற எண்ணம் வேண்டாம். எங்களிடம் உள்ள எதுவும் உங்களிடம் இல்லை. நீங்கல் சிலைகளை வணாங்குபவர்கள்' என்று இந்துக்களை இழிவுபடுத்தும் வகையில் பயாஸுல் ஹசன் சோஹான் பேசிய கணொலி சமூக வலைத்தளங்களில் பரவியிருந்தது. கட்சியின் மூத்த தலைவர்கள் கடும் விமர்சனங்களை முன்வைத்தனர். இதுமுட்டாள்தனமானது, ஏற்க முடியாது என்று அந்த அமைச்சரைக் கண்டித்த இம்ரான் கானின் கட்சி அவரைப் பதவியிலிருந்து விலகுமாறு வலியுறுத்தியது. பஞ்சாப் முதல்வர் உஸ்மான் பஜ்தார், சோஹானை நேரில் அழைத்து அவருடைய அமைச்சுப் பதவியைத் துறந்து விடுமாறு வலியுறுத்தினார். பின்னர் அவர் பதவி நீக்கப்பட்டார். பிறகு சோஹான் தன்னுடைய கருத்துகளுக்காக மன்னிப்புக் கேட்டார்.

அத்தோடு, "நான் மோடியையும் இந்திய இராணுவத்தையும்தான் விமர்சித்தேன், இந்துக்களை அல்ல. இந்து சமூகத்தினரை அது புண்படுத்தி யிருந்தால் நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன், என் கருத்து பாகிஸ்தான் வாழ் இந்து மக்களுக்கு எதிரானது அல்ல" என்றும் அவர் தெரிவித்தார். பாகிஸ்தான் அயலுறவு அமைச்சகச் செய்தித் தொடர்பாளர் மொகமது ஃபைசல் தன்னுடைய கீச்சகப் பக்கத்தில், 'பாகிஸ்தான் தன் கொடியில் வெள்ளை நிறத்தைப் பெருமையுடன் தக்கவைத்துள்ளது, பச்சை எப்படி முக்கியமோ அதே போல் வெள்ளை நிறமும் முக்கியம், இந்து மக்களின் பங்களிப்புக்காக அவர்களுக்கு மரியாதை செய்யும் விதமாக நம் கொடி உள்ளது' என்று தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## பிலிப்பைன்சில் நிலநடுக்கம்

மிண்டனாவ்.மார்ச்.7

பிலிப்பைன்சில் நேற்று 5.7 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. பிலிப்பைன்சின் தவாவ் நகரில் இருந்து வடகிழக்கில் 211 கிலோ மீற்றர் தொலைவில், கடலுக்கடியில் 60 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருந்ததாகவும், ரிக்டர் அளவுகோலில் 6.0ஆகப் பதிவாகியிருந்ததாகவும், ஐரோப்பிய நிலநடுக்கக் கண்காணிப்பு மையம் தெரிவித்தது. பின்னர் அது 5.7 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் எனத் திருத்தம் செய்யப்பட்டது.

இந்த நிலநடுக்கத்தில் பிலிப்பைன்சின் மிண்டனாவ் தீவிலுள்ள கட்டடங்கள் சில வினாடிகள் குலுங்கின. அருகில் உள்ள பகுதிகளிலும் நில அதிர்வு உணரப்பட்டது.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விவரம் குறித்த தகவல்கள் எவையும் உடனடியாக வெளியாகவில்லை. நிலநடுக்கங்கள் அதிகம் ஏற்படும் பசுபிக் கவசத் தகடுப் பகுதியில் பிலிப்பைன்ஸ் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## இந்திய நீர்மூழ்கி ஊடுருவல் பாக். முறியடிப்பு- இந்தியா மறுப்பு

இஸ்லாமபாத்.மார்ச்.7

பாகிஸ்தான் கடல் எல்லைக்குள் நுழைவதற்கு இந்திய நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டதாகப் பாகிஸ்தான் கடற்படை தெரிவித்தது. கடந்த திங்கட்கிழமை இந்தச் சம்பவம் நடந்தது. பாகிஸ்தான் கடற்படைச் செய்தித் தொடர்பாளரை மேற்கோள்காட்டி பாகிஸ்தானின் அரச வானொலி இந்தத் தகவலை வெளியிட்டது.

அமைதி மீதான பாகிஸ்தானின் நாட்டம் காரணமாக அத்துமீறிய இந்திய நீர்மூழ்கியைத் தாங்கள் தாக்கவில்லை என்று பாகிஸ்தான் செய்தித் தொடர்பாளர் கூறினார். இதை வழமைபோலவே இந்தியா மறுத்தது. இது பாகிஸ்தான் மேற்கொள்ளும் பொய்ப் பரப்புரை என்று இந்தியக் கடற்படை கூறியது.

## பிரிட்டனில் மருத்துவ சாதனை எச்.ஐ.விக்கு முழுமையான சிகிச்சை

லண்டன்.மார்ச்.7

எச்.ஐ.வி. நோய்த் தொற்றுக்கு உள்ளான பிரிட்டனைச் சேர்ந்த நோயாளி ஒருவருக்கு 'ஸ்டெம் செல்' (கலங்கள்) மாற்று சிகிச்சை அளிக்கப்பட்டு அவரது உடலில் இருந்த எச்.ஐ.வி. நோய்க்கிருமிகளை முழுமையாக அகற்றி மருத்துவர்கள் சாதனை படைத்தனர். எச்.ஐ.வி. நோய் எதிர்ப்புத் திறன் அதிகமாக உள்ள ஒருவரது உடலில் இருந்து 'ஸ்டெம் செல்' எடுக்கப்பட்டு எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளான நோயாளிக்குச் செலுத்தப்பட்டு இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. பத்தாண்டுகளுக்கு முன்பு ஜேர்மனியின் பெர்லின் நகரைச் சேர்ந்த தொற்று டைய எச். ஐவி. நோயாளி ஒரு வருக்கு இதைப்போலவே எச்.ஐ.வி. எதிர்ப்புத் திறன் மிகுந்த ஒருவரிடம் இருந்து பெறப்பட்ட எலும்பு மஜ்ஜை பொருத்தப்பட்டது. இதையடுத்து அவரது உடலில் இருந்து எச். ஐ.வி. கிருமிகள் அழிந்தம்ம தெரிய வந்தது. அதையடுத்தே தற்போது 'ஸ்டெம் செல்' மூலம் எச்.ஐ.வி கிருமித் தொற்றுக்குச் சிகிச்சை யளிக்கப்பட்டுள்ளது.





## இன்றைய நாள்

**மேடம்:** நண்பரின் உதவி அனுகூலம் தரும். புத்துணர்வுடன் பணிகளை துவங்குவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். ஆதாய பணவரவு கிடைக்கும்.

**இடபம்:** வாழ்க்கை பயணத்தில் வெற்றி இலக்கை நோக்கி நடைபோடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். பணப் பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

**மிதுனம்:** சிலர் பேச்சு மனதில் சங்கடம் உருவாக்கலாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற கூடுதல் பணிபுரிவது அவசியம். சேமிப்பு பணம் அத்தியாவசிய செலவுக்கு பயன்படும்.

**கடகம்:** நண்பரிடம் விவாதம் பேச வேண்டாம். அதிக உழைப்பினால் தொழில் வியாபாரம் வளர்ச்சி இலக்கை அடையும். சேமிப்பு பணம் செலவுக்கு பயன்படும். தாயின் அன்பு ஆசி மனதில் நம்பிக்கை தரும்.

**சிங்கம்:** பிறர் நலனிலும் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியா பாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கை பூர்த்தி செய்வீர்கள். பணப் பரிவர்த்தனை முன்னேற்றம் பெறும்.

**கன்னி:** எதிர்மறையாக இருந்த சூழ்நிலை, அனுகூலம் தருவதாக மாறும். புதியவர்களின் ஆதரவில் தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். பணம் கொடுக்கல், வாங்கல் சீராகும்.

**துலாம்:** அறிமுகம் இல்லாதவரிடம் குடும்ப விவகாரம் பேச வேண்டாம். தொழில், வியாபாரம் தாமத கதியில் இயங்கும். பணவரவை விட செலவு அதிகரிக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**விருச்சிகம்:** நிகழ்வுகள் மாறுபட்டதாக அமையலாம். பொது விவகாரங்களில் கருத்து சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் அதிக உழைப்பு நன்மை தரும்.

**தனுசு:** மனதில் ஆன்மிக நம்பிக்கை அதிகரிக்கும். தொழில், வியாபாரம் செழிக்க புதிய வழி பிறக்கும். வாய்ப்பை பயன்படுத்தி முன்னேற்றம் காண்பீர்கள்.

**மகரம்:** எதிர்பார்ப்பு நிறைவேற தாமதமாகலாம். தொழில், வியாபாரத்தில் சில மாற்றம் செய்ய வேண்டியதிருக்கும். அளவான பணவரவு கிடைக்கும்.

**கும்பம்:** மனதில் நிம்மதியும் பெருமிதமும் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரம் செழிக்க அதிக அளவில் பணிபுரிவீர்கள்.


**மீனம்:** அடுத்தவர் வாங்கும் பொருளுக்கு பேரம் பேசாதீர்கள். தொழில் வியாபாரம் வளர்ச்சி பெற கூடுதல் உழைப்பு தேவைப்படும். அளவான பணவரவு கிடைக்கும்.

# சென்.ஜோன்ஸ் - மத்திய கல்லூரி 'வடக்கின் போர்' இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 7
யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான 113 ஆவது 'வடக்கின் போர்' துடுப்பாட்டச் சமர் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.


இந்த ஆட்டம் மூன்று நாள்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இரண்டு அணிகளுக்கும் இடையில் 112 ஆட்டங்கள் இதுவரை இடம்பெற்றுள்ளன. யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 36 ஆட்டங்களிலும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 28 ஆட்டங்களிலும் வெற்றி பெற்றுள்ளன. 40 ஆட்டங்கள் சமநிலையில் நிறைவடைந்துள்ளன. ஓர் ஆட்டம் கைவிடப்பட்டதுடன், 7 ஆட்டங்கள் தொடர்பான விவரங்கள் இல்லை. (ஒ.23)



## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி

அமர்ந்திருப்பவர்கள் (இடமிருந்து வலம்) எஸ்.சுரேஸ்மோகன் (பயிற்றுவிப்பாளர், விளையாட்டுத்துறை பொறுப்பசிரியர்) ஏ.ஜெயதர்சன் (உபதலைவர்) எஸ்.கே.எழில் வேந்தன்(அதிபர்) எஸ்.மதுசன் (அணித்தலைவர்) கே.நிலக்சன் (பொறுப்பாசிரியர்)
நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) முதலாவம் வரிசை ரி.லுபியான், ஆர்.ராஜ்கிளின்ரன், ரி.விதுசன், கே.இயல்ரசன், பி.குகசதுஸ், பி.இந்துஜன், வி.வியாஸ்காந், ரி.சதீஸ்வரன், ஏ.நிதுசன், கே.பிரவீண்ராஜ், எஸ்.இளங்கீதன், எஸ்.நிதர்சன்
நிற்பவர்கள் (இரண்டாம் வரிசை)
ரி.கெளதமன், பி.ஏ.கஜன், என்.திவாகரன், எம்.சஞ்ஜயன், எஸ்.சாரங்கன், எஸ்.பிரசாந்



## சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி

அமர்ந்திருப்பவர்கள் (இடமிருந்து வலம்) பி.லவேந்திரா (பயிற்றுவிப்பாளர்) ஜி.கோபிகிருஸ்ணா (அணி பொறுப்பாசிரியர்), எம்.அபினாஸ் (அணித்தலைவர்) அருட்தந்தை என்.ஜே.ஞானப்பொன்ராஜா(அதிபர்), என்.செளமியன் (உப அணித்தலைவர்) சி.ஏ அரவிந்தன் (விளையாட்டுத்துறை பொறுப்பசிரியர்)
நிற்பவர்கள்(முதலாம் வரிசை இடமிருந்து வலம். சி.பி தனுசன், கே.கரிசன், கே.அபிராஞ்சன், பி.எல்சன்டி சனுசன், ரி.டினோஷன், எம்.ஹேமதுசன், ஜே.மரியதிலக்சன், ஏ.சுகேதன், என்.ரதுசன்,
நிற்பவர்கள் (இரண்டாம் வரிசை இடமிருந்து வலம்) கே.ரிசான், ரி.வினோஜன், வை.விதுசன், எஸ்.சஜித், எஸ்.சஞ்ஜீத், கே.சபேசன், ஏ. அபிசேக், ஏ.எஸ்.சரண், எஸ்.பிரணவன்



# ஆனைக்கோட்டை யூனியன் அரையிறுதிக்குள் நுழைந்தது

யாழ்ப்பாணம், மார்ச் 7
2:1 என்ற கோல் கணக்கில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணியை வீழ்த்தி அரையிறுதிக்குள் நுழைந்தது ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டு கழக அணி.

யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடர் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றது.

ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி ஆட்டம் ஆரம்பித்து 26 ஆவது நிமிடத்தில் முதலாவது கோலைப் பதிவு செய்தது. அந்த அணி வீரர் சயந்தன் அதனைப் பதிவு செய்தார். முதல்பாதி ஆட்டம் மேலதிக கோல்கள் எதுவும் போடப்படாமல் நிறைவுக்கு வந்தது. இரண்டாம் பாதி ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகம் இரண்டாது கோலைப் பதிவு செய்தது. ஆட்டத்தின் 55 ஆவது நிமிடத்தில் அபினேஸ் அந்தக் கோலைப் பதிவு செய்தார்.

கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி தனது முதலாவது கோலைப் பதிவை மதுசன் 75ஆவது நிமிடத்தில் பதிவு செய்தார். மேலதிக கோலை அந்த அணியால் பதிவு செய்ய முடியவில்லை. ஆட்டநேர இறுதியில் 2:1 என்ற கோல் கணக்கில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. (ஒ.23)



# கரப்பந்தில் கலக்கியது இமையாணன் மத்தி

கரணவாய், மார்ச் 7
கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பெண்களுக்கான கரப்பந்தில் சம்பியன் கிண்ணத்தை இமையாணன் மத்தியின் மகளிர் அணி வெற்றிகொண்டது.

கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் சிவகுமரன் விளையாட்டுக்ககழக மைதானத்தில் இடம்பெற்றது.

இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இலகடி சிவகுமரன் விளையாட்டுக்கழகம் மோதியது. மூன்று செற்களைக் கொண்ட இவ்வாட்டத்தில் 25:22, 25:23 என்ற புள்ளிகளைப்பெற்று 2:0 நேர் செற்றில் வெற்றி பெற்று சம்பியனாகியது இமையாணன் மத்தியின் மகளிர் அணி. (ஒ)

# யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கிண்ணத்தைச் சுவீகரித்தது

யாழ்ப்பாணம், மார்ச் 7
கம்பகா நிந்தபூவசங்கபோதி வித்தியால அணியை வீழ்த்தி கிண்ணத்தைச் சுவீகரித்தது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி.

இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் தேசிய ரீதியாக நடத்திய 15 வயதுப் பிரிவினருக்கான பிரிவு 3 இற்கான துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

தனது முதலாவது இன்னிங்சிற்காக துடுப்பெடுத்தாடிய கம்பகா நிந்தபூவசங்கபோதி வித்தியாலய அணி 46 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. கபிஸ் 26 ஓட்டங்களையும், உடல 25 ஓட்டங்களையும், டில்கார 17 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தனர். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சார்பில் கவிதர்சன் 7 இலக்குகளையும், கெளதமன் 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.

பதிலளித்து ஆடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 3 இலக்குகளை இழந்து 121 ஓட்டங்களை 25 பந்துப் பரிமாற்றங்களில் பெற்றுக் கொண்டது. கஜன் ஆட்டமிழக்காமல் 46 ஓட்டங்களையும், பெலிகன் 30 ஓட்டங்கயையும், சஞ்சயென் 19 ஓட்டங்கயையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் கவித்து, தரங்க இருவரும் ஓர் இலக்கைக் கைப்பற்றினார்கள். ஆட்டநாயகனாக கவிதர்சன் தெரிவு செய்யப்பட்டார். (ஒ.23)



## உலகக் கிண்ணம் தொடரில் மனம் திறந்த விஜய் சங்கர்

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையில் இடம்பெற்ற இரண்டாவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி வெற்றி பெறுவதற்கு காரணமாக இருந்த விஜய் சங்கர் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளார். அவர் உலகக் கிண்ணத் தொடரில் பங்குபற்றுவது தொடர்பில் இன்னும் சிந்திக்கவில்லை என்று அவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

உலகக் கிண்ண அணியில் இடம் பெறுவது குறித்து நான் ஒருபோதும் சிந்தித்ததில்லை என முன்னரே தெரிவித்திருக்கின்றேன். உலகக் கிண்ண அணியில் இடம் பெறுவதற்கு இன்னமும் நீண்ட தூரம் பயணிக்கவேண்டும் - என்றார்.




## கோபா டெல் ரே கால்பந்து
# ரியல் மட்ரிட்டை இலகுவாக வீழ்த்தி கிண்ணம் வென்றது பார்சிலோனா

கோபா டெல் ரே கால்பந்துக் கிண்ணத்துக்கான இறுதியிட்டத்தில் பார்சிலோன- ரியல் மட்ரிட் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இதில் பார்சிலோனா அணி 1:0 என்ற கணக்கில் ரியல் மட்ரிட்டை இலகுவாக வீழ்த்தி கிண்ணத்தை சுவீகரித்து.

முதல் பாதி ஆட்டத்தின் 26ஆவது நிமிடத்தில் றகிற்க் ஒரு கோலைப் போட முதல் பாதி ஆட்டத்தில் பார்சிலோனா அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலிருந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணி வீரர்கள் மிக ஆக்ரோசமாகவும், துடிப்பாகவும் விளையாடிய போதும் இரு அணி வீரர்களாலும் எந்தவொரு கோலையும் போட முடியாமல்போக, பார்சிலோன அணி 1:0 என்ற கணக்கில் ரியல் மட்ரிட் அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது.

# இங்கிலாந்து அபார வெற்றி




மேற்கிந்தியத்தீவுகள் - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் இடம்பெற்று வரும் போட்டிகளில் டெஸ்ட், ஒருநாள் போட்டிகள் முடிவடைந்த நிலையில் நேற்று இடம்பெற்ற முதலாவது ரி-20 போட்டியில் இங்கிலாந்து அணி 4 இலக்குகளால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் மேற்கிந்தியத்தீவுகளை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது.

மேற்கிந்தியத்தீவுகளின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக ஹோப், கிறிஸ் கெய்ல் களமிறங்கினர். அணி 7 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஹோப் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அணி 50 ஓட்டங்களை எட்டுவதற்குள் 3 இலக்குகளை இழந்து பரிதவித்தது. ஒருநாள் போட்டியில் பிரகாசித்த கெய்ல் 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். அதிகபட்சமாக போரன் 58 ஓட்டங்களையும், பிராவோ 28 ஓட்டங்களையும் பெற்றனர். அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றது.

பந்து வீச்சில் குர்ரன் 4 இலக்குகளையும், ஜோர்டர் 2 இலக்குகளையும், ரசிட், ஜென்லி தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 161 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி எனக் களமிறங்கிய இங்கிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக கலிஸ், பிறிஸ்ரோ களமிறங்கினர். அணி 17 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது கலிஸ் 11 ஓட்டங்களில் ஆட்டமிழந்த பவிலியன் திரும்பினார். இணைந்தார் ரூட். அவர் எந்தவொரு ஓட்டத்தையும் பெறாது எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார். அதிகபட்சமாக பிறிஸ்ரோ அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி 68 ஓட்டங்களையும், டென்லி 30 ஓட்டங்களையும் பெற்றனர். அணி 18.2 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

பந்து வீச்சில் காட்ரல் 3 இலக்குகளையும், பிறித்வைட், கோல்டர், நர்சி தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக இங்கிலாந்து அணி வீரர் பிறிஸ்ரோ தெரிவு செய்யப்பட்டார்.

## ரியல் மட்ரிட்டை கதற விட்ட அஜக்ஸ்

ஸ்பானியக் கழகங்களுக்கிடையில் இடம்பெற்று வரும் சம்பியன்ஸ் லீக் போட்டியில் அஜக்ஸ் அணி 4:1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

ரியல் மட்ரிட் - அஜக்ஸ் அணிகளுக்கிடையில் நேற்று இடம்பெற்ற ஆட்டமொன்றின் முதலாவது பாதி ஆட்டத்தின் 7ஆவது நிமிடத்தில் அஜக்ஸ் அணி வீரர் சிஜேச் ஒரு கோலைப் போட்டார். அதே அணி வீரர் டேவிட் நேர்சி 18ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் போட முதல் பாதி ஆட்டத்தில் அஜக்ஸ் அணி 2:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பித்த போது மட்ரிட் வீரர்கள் ஆக்ரோசமாக ஆட ஆரம்பித்தனர். 62 ஆவது நிமிடத்தில் அஜக்ஸ் அணி வீரர் டுசன் ரடிக் ஒரு கோலைப் போட்டார். அடுத்த 70ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் வீரர் அசன்சியோ ஒரு கோலைப் போட 3:1 என்ற கணக்கில் காணப்பட்டது. மட்ரிட் வீரர்கள் இறுதி நிமிடம் வரையிலும் கோல்களைப் போடுவதற்கு எத்தணித்த போதும் ஆட்டத்தின் 72ஆவது நிமி டத்தில் அஜக்ஸ் அணி வீரர் ஸ்கூனி ஒரு கோலைப் போட அஜக்ஸ் அணி 4:1 என்ற கணக்கில் ரியல் மட்ரிட் அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது.





# அனைத்து அணிகளுக்கும் மேற்கிந்தியத்தீவுகள் அணி அச்சுறுத்தலாக இருக்கும்
## பிராவோ தெரிவிப்பு

இங்கிலாந்தில் மே மாதம் ஆரம்பமாகும் உலகக் கிண்ணப் போட்டியில் அனைத்து அணிகளுக்கும் அச்சுறுத்தலாக மேற்கிந்தியத்தீவுகள் அணி காணப்படும் என அந்த அணியின் வீரர் பிராவோ தெரிவித்தார்.

உலகக் கிண்ணத்தில் இங்கிலாந்து, இந்தியா போன்ற அணிகள் வெல்ல வாய்ப்பு உள்ளதாக முக்கிய பிரபலங்கள் கூறுகின்றனர். ஆனால் மேற்கிந்தியத்தீவுகள் - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஒருநாள் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

குறிப்பாக நீண்ட இடைவெளிக்குப்பின் அணிக்கு திரும்பிய கிறிஸ் கெய்ல் இரண்டு சதங்கள், இரண்டு அரைசதங்கள் விளாசியிருந்தார். அதோடு பந்து வீச்சாளர்களும் சோபித்தனர்.

இந்த நிலையில் உலகக் கிண்ணத்தில் அனைத்து அணிகளுக்கும் மேற்கிந்தியத்தீவுகள் அணி அச்சுறுத்தலாக இருக்கும் என அந்த அணியின் வீரர் பிராவோ தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

“எங்களது அணியில் சிறந்த இளம் வீரர்கள் உள்ளனர். அவர்கள் ஆட்டத்திறனில் நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளனர். இங்கிலாந்துக்கு எதிராக விளையாடியதை பார்க்கும்போது சிறப்பாக இருந்தது.

இந்த அணி உலகக் கிண்ணத்தில் அனைத்து அணிகளுக்கும் அச்சுறுத்தலாக இருக்கும். யாராக இருந்தாலும் அவர்களுக்குரிய நாட்களில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியும்”. - என்றார்.

## இந்தியாவுடன்
# ஒப்பந்தங்களை நிறுத்துங்கள் மல்யுத்த சங்கம் வேண்டுகோள்

இந்தியா உடனான ஒப்பந்தங்களை நிறுத்தி வையுங்கள் என்று அனைத்து நாடுகளுக்கும் பன்னாட்டு மல்யுத்தம் சங்கம்வேண்டுகோள்விடுத்துள்ளது. இந்திய இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து இந்தியா பாகிஸ்தானை தனிமைப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருந்தது. இந்தியாவில் நடைபெற்ற துப்பாக்கி சுடுதல் போட்டியில் பங்குபற்றுவதற்காக வந்த இரு பாகிஸ்தான் வீரர்களுக்கு நுழைவு விசைவு வழங்க மறுத்திருந்தது. இதனால் பன்னாட்டு ஒலிம்பிக் சங்கம் இந்தியாவுடனான விவாதங்களை மறுத்திருந்தது.

இந்த நிலையில் இந்திய மல்யுத்த சங்கங்களுடன் ஒப்பந்தம் செய்துள்ள ஏனைய நாட்டின் சங்கங்கள் அதனை நிறுத்தி வையுங்கள் என்று பன்னாட்டு மல்யுத்தம் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

SAAMSON Experts in English Training
இன் 3 மாத சனி,ஞாயிறு
ஆங்கிலப் பயிற்சிநெறி
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 09.03.2019 சனி
பிரிவு 01 : காலை 08-10 பிரிவு 02 : மாலை 03.05
ஞாயிறு (செவ்வாய் - வியாழன்) பிரிவு காலை 08.30 - 10.00
3 மாத பயிற்சிக்கட்டணம் ரூபா 3000 மட்டுமே! ஒரு பிரிவில் 16 பேர்
SAAMSON 403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவிலடி, யாழ்நகர்.
021 222 4282 077 621 4567

# இலங்கை கிரிக்கெட் சபைக்கான நிதி விடுப்பு

பன்னாட்டு கிரிக்கெட் சபையால் இலங்கை கிரிக்கெட் சபைக்கு என நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிதியை கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபையின் நிறைவேற்றுக் குழு மற்றும் பன்னாட்டுக் கிரிக்கெட் சபைக்கு இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையையடுத்து குறித்த நிதியை கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

11.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியே இவ்வாறு இலங்கை கிரிக்கட் சபைக்கு கொடுக்கப்படவுள்ளது. இது இலங்கை பெறுமதியில் 2 பில்லியன் ரூபா ஆகும்.



# லவன்ரேயை வீழ்த்தி லிகனீஸ் அணி வெற்றி

ஸ்பானியக் கழகங்களுக்கிடையில் இடம்பெற்று வரும் லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டியில் லிகனீஸ் அணி வெற்றி பெற்றது.

லிகனீஸ் - லவன்ரே அணிகள் மோதிய முதல் பாதி ஆட்டத்தின் 13ஆவது நிமிடத்தில் லிகனீஸ் அணி வீரர் அர்னைஸ் ஒரு கோலைப் போட்டார். முதல் பாதி ஆட்டம் 1:0 என்ற கணக்கில் லிகனீஸ் அணி முன்னிலையிலிருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் ஆக்ரோசமாக ஆடிய போதும் எந்தவொரு கோல்களும் பெறப்படாது லிகனீஸ் அணி 1:0 என்ற கணக்கில் லவன்ரே அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது.




சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்:3157 திகதி:2019.03.06 புதன்கிழமை
ஊதா
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 06 27 30 68 I
போனஸ் இலக்கம்: 35
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்: 33,240,630/-
தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 546
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.03.06
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 69,550,025/-
வெற்றி இலக்கங்கள்: 01 14 54 75 ஆங்கில எழுத்து: P
தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ராசி அதிர்ஷ்டம்
திகதி: 06.03.2019 வெற்றி வாரம்: 2471 வர்ணம்: பச்சை
மீனம்
வெற்றி இலக்கங்கள்: 05 30 35 43
வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 21, 34, 582/=
07.03.2019ம் திகதி வியாழக் கிழமை மண்ணிற நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே. 011 4824824 Web: www.dlb.lk

சංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 227
சீட்டிழுப்பு திகதி 06.03.2019 நீலம்
ஆங்கில எழுத்து: A
வெற்றி இலக்கங்கள்: 10 52 67
விதி எண்: 02
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 13, 949, 232/=
2019.03.09ம் திகதி சனிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.